# உறங்கும் உண்மைகள்



திருமதி ஆனந்தராணி நாகேந்திரன்

(நெல்லை [illegible]ங்கி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உறங்கும் உண்மைகள்"

# "ஓருயிர்"

## நெல்லை லதாங்கி

வெளியீடு

**கலாசார கூட்டுறவுப் பெருமன்றம்**

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்,

கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | - | உறங்கும் உண்மைகள். |
| விடயம் | - | குறுநாவல். |
| நூலாசிரியர் | - | திருமதி.ஆனந்தராணி நாகேந்திரன் |
| உரிமை | - | திரு.A.நாகேந்திரன் |
| அட்டைப்படம் | - | ஓவியர் ரமணி அவர்கள் |
| முதற்பதிப்பு | - | 2005, ஓகஸ்ட் |
| கணனிப்பதிப்பு | - | சண்முகா, நெல்லியடி. |
| அச்சுப்பதிப்பு | - | லெட்சுமி அச்சகம், நாவலர் மடம், நெல்லியடி. |
| விலை | - | 120 /= |

| | |
|---|---|
| Title | : Vrankum unmaikal |
| Author | : Mrs. Anantharany Nakendran |
| Copy Right | : Mr. A . Nakendran |
| Art | : Artist Ramani |
| First Published | : 2005 August |
| Computer Print | : Shanmuga, Nelliyady |
| Printers | : Luxmy Off set, Navalarmadam Karaveddy. |
| Price | : 120/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையின்

மலர்ப்பாதங்களுக்கு



பத்து மாதங்கள் என்னை சுமந்து
பற்றுப் பாசமுடன் எனை வளர்த்து
ஆர்வமுடன் எழுத்துலகில் பிரவேசிக்கச் செய்கின்ற
எனது அன்புத்தாய் அரவணைப்பில்
இந்நூல் வெளிவருகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலக்கியங்கள் மனித மனங்களை மேம்படுத்துவன. அதன்மூலம் மனித சமூகங்களிடையே புனிதத்தை, அமைதியை, உறுதியான வளர்ச்சியை, வாழ்வின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்த உதவுவன. பக்தி இலக்கியங்கள் மெய்யன்பர்களின் பக்தி உருக்கப் பிரவாகங்களாக திருமுறைகளாகவும், இறைவன் திருவாய்மொழிகளாகவும், திருமறைகளாகவும் வெளிவந்து மக்களை உன்னத ஆன்மீக உணர்வுகளின் பிடிக்குள் கொண்டுவந்து உய்விப்பன. நீதி நூல்கள் தலைமுறைகள் பட்டுக்கெட்டு தெளிந்த உண்மைகளை, நீதிகளை, ஒழுகலாறுகளைப் பின்னால் வருவோர்க்கு முதுசொங்களாக வழங்கி வாழ்வில் செம்மையும் நிறைவும் வழங்குவன.

அந்த நீதிக்கருத்துக்களையும், அன்றாடம் பெறும் அனுபவ உண்மைகளையும் உட்பொதிந்து எழும் காவியங்கள், புராணங்கள், இதிகாசங்கள், நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள் ஆகிய கதைவடிவங்கள் அந்நீதிகள், உண்மைகளை அனுபவபூர்வமாக - நிதர்சனமாக - கவர்ச்சிகரமாகக் கண்டு மக்கள் நல்வழிப்பட உதவுகின்றன.

இவ்விலக்கியங்களும், மாற்றமடைந்துவரும் சமூகவாழ்வு நெறிகளுடன் தமக்குள்ள பொருத்தப்பாட்டினை இழக்காதனவும், சமூகப்பண்பாட்டு விழுமியங்களை அழகுறப் பிரதிபலிப்பனவும், ஒவ்வோர் காலகட்டத்தின் பிரதி பலிப்புகளாக - குரல்களாக-யதார்த்தப்பதிவுகளாக விளங்குவனவும், எக்காலத்துக்கும் பொருந்துவனவுமானவை சமூகத்தால் பேணிப்பயின்று வரப்படுகின்றன. ஏனைய படைப்புக்கள் காலவெள்ளப் பேரலைகளால் அடித்துச் செல்லப்பட்டு விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் கையில் ஒப்படைக்கப்பட்ட இலக்கியப்படைப்புக்களின் கதை இதுவாக, சமூகத்திடம் நூல் வடிவில் வழங்கப்படாமலே, கறையானுக்கிரையாகி இன்றுவரை அழிந்து கொண்டிருக்கின்றன. ஏராளம் ஈழத்தமிழ்ப்படைப்புக்கள்.

ஒவ்வொரு ஈழத்தமிழ் வீடும் இன்று அத்தியாவசியமற்ற பகட்டுத்தேவைகளையும் ஏராளமாகப் பெருக்கி வைத்திருக்கிறது. அவற்றை நிறைவேற்றத் தேவையான பணத்தை ஈட்டவென்று நேர்வழிகளிலும், இயலாதபட்சத்தில் குறுக்கு வழிகளிலும் பறந்தோடி ஒருபுறம் சமூகச்சீரழிவுகளை ஏற்படுத்துகின்றது. மறுபுறம் பொறுத்திருந்து சிந்திக்கவோ, உளவிருத்தி, அறிவுவிருத்திக்குரிய நூல்களை விசாரிக்கவோ நேரமின்றி திணறுகின்றது. இதனால் நூல்கள் வாங்கப்படுவதில்லை. நூல்களை வாங்குவோரின்மையால் ஈழத்து இலக்கியப்படைப்புக்கள் அச்சேறாமல் - ஆவணம் ஆக்கப்படாமல் அழிகின்றன. இன்று வீட்டுக்கு வீடு ஆட்சிபுரியும் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வேறு, நூல்களின் பக்கம் திரும்பி பார்க்கக்கூட நேரமற்றவர்களாக மக்களைக் கட்டிப்போட்டு வைத்திருக்கின்றன. ஆயினும் இக்கவர்ச்சிகள் தற்காலிகமானவை. ஒவ்வொருகட்டத்தில் இவற்றில் ஏற்படும் சலிப்பு மக்களை பழையபடி அறிவுத் தேடல் வாசிப்பின்பால் திருப்பிவிடும் என்பது நாடுகள் கண்ட அனுபவ உண்மை.

மனிதன் சுகதேகியாக வாழ்வதற்கு உண்ணும் நிறையுணவில் குறைகளை நிரப்பப் பசுப்பால் அன்றாடம் அருந்தப்பட வேண்டும் என்பர். அதுபோல மனித மனங்களின் ஆரோக்கிய நிறைவு அமைவதற்கும், தொழில்தேட, உத்தியோகந்தேட என மனிதன் பள்ளியில் படிக்கும் பாடப் புத்தகங்களுக்கப்பால், அவன் தவறாது இலக்கியங்களை ஆழ்ந்து கற்றுவர வேண்டும். அதன்மூலமே இயந்திரத்தன்மையை வென்று இதயமுள்ள நற்குணம், நன்னெறியுள்ள மனிதனாகத் தன்னைப்பண்படுத்திக் கொள்ளமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உண்மை இன்று சகல தரப்பினராலும் மறக்கப்பட்டுவிட்டது. அரசாங்கம் மேற்கூறிய நோக்கத்தோடு பாடசாலைகளில் நிறுவியுள்ள நூலகங்களில் பள்ளிப்பாடங்கள் சம்பந்தமான நூல்களையே அதிகங்காண முடிகிறது. அவற்றையேனும் வாசிக்கும்படி மாணவர்கள் போதிய அளவு தூண்டப்படுவதுமில்லை.

பாடசாலை பரிசளிப்புவிழாக்களிற் கூட கல்வியில் முதன்மை பெறும் மாணவர்களிற்குப் பாடப்பயிற்சிப் புத்தகங்களும், கொப்பி பென்சில்களுமே பரிசில்களாக அனேகமான பாடசாலைகளில் வழங்கப்படுகின்றன. இலக்கிய நூல்கள் அச்சம், வெறுப்போடு தவிர்க்கப்படுகின்றன. இதனாலும் இலக்கிய நூல்கள் அச்சிடப்படுவது குறைவாக உள்ளது.

நீண்டு நிலவிய போர்ச்சூழல் நிலைக் கலக்கடியால் தமிழீழத்தில் இலக்கியச்சிந்தனை, வாசிப்பு ஈடுபாடு திட்டமிட்டுப் பெருமளவில் சிதைக்கப்பட்டுள்ளமையும் இங்கு நூல் வெளியீட்டுத்துறை மந்தமடைந்தமைக்கு ஒரு காரணம். சிறந்த இலக்கிய முயற்சிகள் இன்று மலையக எழுத்தாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் எக்காரணங்களாலோ மலையகத்திலும் வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்துள்ளமையை அங்கு இயங்கி வந்த பதினேழு புத்தக நிலையங்கள் ஒன்று மிஞ்சாமல் மூடப்பட்டுள்ளமை காட்டுகின்றது.

கற்றவர் மலிந்த கொழும்பு தமிழ் சமூகத்தில் மட்டும் இன்று வாசிப்புப் பழக்கம் குன்றாது உள்ளது எனலாம். இவற்றோடு ஈழத்தில் வெளியாகும் ஒருநூல் நாட்டின் சகல தமிழர் வாழும் பிரதேசங்களிலும் கிடைக்கும் படியான விநியோக வாய்ப்பு இங்கு இன்றுவரை உருவாகாது உள்ள நிலைமையும் ஒரு பின்னடைவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் இன்றும் ஈழத்தின் எந்த அளவிலோ தேசிய இலக்கியப்படைப்புக்கள் அச்சேறி ஆவணங்களாகிக் கொண்டு தான் இருக்கின்றன.

இலங்கைத் தமிழ் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஈழத்து நூல் வெளியீட்டுச் செய்திகள் படங்கள் நூல் விமர்சனங்களுக்கு முதன்மை கொடுத்து வெளியிடுவதன் மூலம் நூல்கள் ஓரளவாவது விற்பனையாக உதவுகின்றன.

வடக்குக் கிழக்குத் தமிழ் பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகரசபைகள் தம் நூலகங்களுக்கென ஈழத்து நூல்களை கொள்வனவு செய்து எழுத்தாளன் நட்டமடைவதை தடுக்கின்றன. மக்களிடையே ஈழத்து ஆக்கங்கள் வரவேற்பு பெற உதவுகின்றன.

இந்து கலாசர அலுவல்கள் திணைக்களம் நூல்களின் தரம் பார்த்துக் குறிப்பிட்ட பணத்தொகைக்கு நூல்களைக் கொள்வனவு செய்கின்றது.

இதுபோலக் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்கமும் ஈழுத்து நூல்களின் பெருந்தொகைப் பிரதிகளைக் கொள்வனவு செய்து மக்களிடையே பரப்புவதன் மூலம் நம் எழுத்தாளர்களின் பணிக்கு தோள்கொடுப்பதோடு வடமராட்சிப் பிரதேசத்தையே இலக்கிய ஆர்வலர்கள் மயமாக்கி வருகின்றது.

இந்த நிறுவனங்களே இன்று ஈழத்தில் தமிழ் இலக்கியங்கள் உதிப்பதற்கு உண்மையான உந்து சக்திகளாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் இலக்கிய நூல்கள் வெளியீட்டினை ஊக்கிவிக்கவென உலக வங்கி இலங்கை அரசிற்கு வழங்கிய பல இலட்சம் ரூபா நிதியில் பெருந்தொகுதி சிங்கள எழுத்தாளர்கள் வசமாகிவிட எஞ்சிய பணத்தையும் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் என்ற போர்வையில் "சமதர்ம சர்வதேச புகழ் எழுத்தாளர்கள்" ஓரிருவர் தமது ஏகபோகமாக்கிக் கொண்டுள்ளதாக ஈழத்து எழுத்துலகில் பரவலாகக் கதை அடிபடுகிறது.

நம்நாட்டில் மேல்மட்டப் பிரமாக்களின் தில்லுமுல்லுகள் ஏராளம். இந்த இலக்கியப் பிழைப்பாளிகள் போன்று கொள்ளை இலாபத்தை எதிர்பார்பவர்களாக இல்லாமல், போகுமுதல் ஓரளவு தேறினால் போதும் என்று திருப்திப்படும் எழுத்தாளர்கள் ஈழத்த பத்திரிகைகள், பிரதேச சபைகள், இந்து காலாசர அமைச்சு, நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் போன்றவற்றை நம்பி தங்கள் ஆக்கங்களை நூல்களை ஆவணமாக்கி அழியவிடாமல் சமூகத்தின் கைகளில் ஒப்படைக்கலாம். காலம் அவற்றின் ஆயுளை நிர்ணயிக்கும்.

நாவல்கள், குறுநாவல்கள், சிறுகதைகள் இன்று மிகக் குறைவாகவே நூலுருவில் ஈழத்தில் வெளிவருகின்றன. அதனால் கதைப்பிரியர்களான பெரும்பான்மை வாசகர்களின் தேவை நோக்கிக் கதை இலக்கிய நூல்கள் அதிகம் வெளிவர வேண்டிய தேவை இங்கு இன்றுள்ளது. இதனால் பெண்மனங்களில் பிறந்து மரணத்தையும் கடந்து நிலைக்கும் ஆழமான, அன்பின் பெருமை கூறும் 'ஒருயிர்' எனும் குறுநாவலும், விழுப்பம் தரும் ஒழுக்க வாழ்வு பெண்களுக்கு வழங்கும் உயர்ச்சியைப் படம்பிடித்துக் காட்டும் 'உறங்கும் உண்மைகள்' எனும் ஒரு குறுநாவலும் நூலுருவில் வெளிவருவது ஈழத்து இலக்கியத்தை வளப்படுத்தும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமைப் பண்புகளில் ஊறிய ஒரு யாழ்ப்பாணக் கிராமத்தைக் கதைநிகழ் களமாகக் கொண்டு தொடங்கும் "ஓருயிர்" என்ற குறுநாவல், தாம் பிறந்து வாழும் கிராமத்தையே தம்முழு உலகமாகக்கொண்டு, தம்முள்ளே பகை, நட்புகளையும், மான அவமானங்களையும் நுணுக்கமாக அனுசரித்துக்கிடக்கும் இரு குடும்பங்களின் வரித்தபகை, அதைமீறித் தானாக இரு இளநெஞ்சுகளிடையே ஏற்பட்ட அன்புப்பிணைப்பு, அது வெளிப்பட்டு ஏற்பட்ட பூசல்கள் போராட்டங்கள், இவற்றை உள்ளடக்கியது.

கதையின் உயிர்ப்பாத்திரமாகிய பாக்கியம் தன் கணேசுவின் மீது அவனது வாழ்வின்மீது கொண்ட ஆழமான அக்கறை, அதற்காக எதற்கும் அஞ்சாமல் உரிய உரிய நேரங்களில் எடுத்த உறுதியான தீர்மானங்கள், அவற்றை நடைறைப்படுத்துவதில் அவள் காட்டிய தீவிரம் அதன் மூலம் அவள் குடும்பக் கஷ்டங்களை எதிர்கொண்டு கண்ட நிமிர்ச்சி, அவள் மரணமான கணவனின் ஆன்மாவுக்குமே விசுவாசியாக வாழ்ந்து முடித்த விதம் "இவளல்லவோ பெண்?" என்று எம்மை எண்ண வைக்கின்றன. பாக்கியம் பாத்திரம் அற்புதமாகப் படைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த குறுநாவல் "உறங்கும் உண்மைகள்" என்பது இக்கதையில் வரும் தேனுகா, கார்த்திகா, தாரகா மூவரும் தனித்துவப் பாத்திரங்காகப் படைக்கப்பட்டுள்ளனர். மூத்தவள் தேனுகா குடும்பச் சுமையைத் தலைமேற் சுமந்து தன் இரு தங்கையரின் வேறுபட்ட போக்குகளை அவதானித்துக்கொண்டு, அவர்களின் எதிர்காலங்கள் காப்பாற்றப்படத்தக்க வகையில் அவர்களை வழிநடத்தும் நிதானமும் பொறுப்புணர்ச்சியும் மிக்கவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். அடுத்தவள் கார்த்திகா நேரிய நடையும் கூரிய மதியும் கொண்டவளாகவும், நெஞ்சாலும், செயலாலும் நன்றியுணர்வின் நிலைகளாகவும் படைக்கப் பட்டிருக்கிறாள். கடைக்குட்டித் தங்கை தாரகா, தன்னலமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்குறிப்போக்கும், செருக்கும் கொண்டவளாகக் காட்டப் பட்டுள்ளாள். பெண்கள் இப்படித்தான் வாழவேண்டுமெனச் சரியான, பலமான வாழ்நெறியை இனங்காட்டுவதாய் அமைந்தது இக்கதை.

இக்கதைகள் குறுநாவல்கள் எனக்குறிக்கப் பட்டிருப்பினும் தாம் கொண்டுள்ள மையக்கருத்துகளைச் சுற்றியே, ஒட்டியே சற்றும் அங்கிங்கு விலகாமல் நகர்ந்து முடிவதால் இவற்றை நீண்ட சிறுகதைகளாகக் கொள்வதே பொருத்தம் எனலாம். இரண்டாவது கதை முதற்கதையைவிடச் செறிவான கட்டமைப்பும், உருவச் செம்மையும் மிக்கதாக விளங்குவதை அவதானிக்க முடிகின்றது.

பள்ளிக்கூட ஆசிரியையான இந்தக் கதாசிரியர் திருமதி நா.ஆனந்தராணியினது பத்துக்கு மேற்பட்ட நாடகங்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. நாடகப் பிரதியாக்கப் போட்டி, சிறுகதைப் போட்டிகள் பலவற்றில் பரிசில்கள் சான்றிதழ்கள் பெற்றிருக்கிறார். அதனால் இவர் இலக்கியத்தின் அடிப்படைகளை அறிந்தவர் என்பதும், இலக்கியப்படைப்பாற்றல், போட்டிப்பரிசில்கள் பெற்றதன் மூலம் அங்கீகரிக்கப்பட்டவர் என்பதும், குறுநாவல்கள் படைக்கும் முயற்சியில் ஈடுபட இவருக்குள்ள யோக்கியதையை உறுதிப்படுத்துகின்றன.

இந்நூலாசிரியர் ஆனந்தராணி அவர்கள் தொடர்ந்தும் ஈழத் தமிழிலக்கியப்பணியில் முனைப்போடு ஈடுபட்டுழைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

*ச.வே.பஞ்சாட்சரம்.*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

திருமதி. ஆனந்தராணி நாகேந்திரன் அவர்களால் ஆக்கப்பட்ட குறுநாவல்களிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எமது பிரதேசத்தில் சங்கீத ஆசிரியராக கடமையாற்றும் இவர் கலைத்துறையில் மிகுந்த நாட்டம் கொண்டவர். போட்டிகள் பலவற்றிலே கலந்து கொண்டு பல பரிசில்களைப் பெற்றிருக்கிறார். பலராலும் பாராட்டப் பட்டிருக்கின்றார். தனது ஆக்கங்களை நூலாக வெளியிடும் அவரது முயற்சி பாராட்டத் தக்கது. சமுதாய நிலையை பிரதிபலிக்கும் இந்நூலிற்கு சமூகத்தில் நல்ல வரவேற்பு இருக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை. அவரது இலக்கிய முயற்சிகள் மென்மேலும் தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

கா.அம்பலவாணர்,<br>
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,<br>
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

1981 இல் எனது க.பொ.த உயர்கல்வியைக் கற்றுவிட்டு வீட்டிலிருந்த சமயம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன இரு சேவை நிகழ்ச்சிகளையும் மிகவும் இரசித்துக் கேட்பேன். கல்வி கற்கும் காலத்திலேயே நாவல்களையும் விரும்பி வாசிப்பேன். இவைகள் தான் எனது எழுத்துலக பிரவேசத்துக்கு வித்திட்டது.

முதன்முதலில் "அன்பெனும் சுடரால்" என்ற தலைப்பில் வானொலி நாடகம் எழுதினேன். அது ஒலிப்பரப்பாகியதும், தொடர்ந்து எழுதவேண்டும் என்ற ஆவல் என்னுள் பெருகியது. அந்தக் காலகட்டத்தில் எழுதியவைதான் இந்த இரு குறுநாவல்களும். 1984ல் திருமணம் என்ற பந்தத்திற்குள் புகுந்ததின் பின்பு நாவல்கள் வாசிப்பது, எழுதுவது, வானொலி நிகழ்ச்சிகள் கேட்பது எல்லாம் நின்றுவிட்டது.

1990 இல் எழுதப்பட்ட இரு குறுநாவல்களும் 2005 இல் வெளிவர இறைவன் அருள்பாலித்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இலக்கண, இலக்கிய அறிவு குறைந்த பாமர மக்களும் விரும்பி வாசிக்கும் நோக்கில் நாவல் என்ற வரையறையில் இருந்து விலகி கதைப்போக்கில் கொண்டு சென்றுள்ளேன். அத்துடன் தொலைத்தொடர்பு சாதனங்கள் அதிகரித்த இந் நவீன உலகில் பொறுமையுடன் நாவல்களை வாசிப்பவர்கள் அரிதாகக் காணப்படுகின்றார்கள். இவர்களுள்ளும் பக்கங்களைத் தட்டித்தட்டி கதையை மட்டும் வாசிப்பவர்கள் அதிகமாகக் காணப்படுகின்றார்கள்.

எனவே யாவரும் விரும்பி வாசிக்கும் நோக்கில் நாவல்களுக்குரிய அம்சங்களிலிருந்து விலகி நீண்ட சிறுகதைகளாக தந்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத்தவிர வானொலிக்கு நாடகம் எழுதுதல், சிறுகதையாக்கம், பாடலாக்கம், வில்லுப்பாட்டு ஆக்கம் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுவேன். கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே வானொலி "இளஞ்சுடர்" கிராமிய நிகழ்ச்சிக்கு கவிதை, பாடல், நாடகம், சிறுகதை போன்ற ஆக்கங்கள் எழுதியனுப்பியதுடன், பாடியும், பேசியும் நடித்தவற்றை அவர்கள் நேரில் வந்து ஒலிப்பதிவு செய்து வானொலியில் ஒலிபரப்புச் செய்தமை இன்றும் மறக்கமுடியாத நிகழ்வாகவும், மகிழ்ச்சி தரக்கூடிய நிகழ்வாகவும் இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

எனது இரு குறுநாவல்களுக்கும் முன்னுரை வழங்கிய இணுவில் ச.வே.பஞ்சாட்சரம் ஐயா அவர்கள் மறக்கமுடியாதவரும் பூஜிக்க வேண்டியவரும் ஆவார். எனது எழுத்துலக வாழ்க்கைக்கு ஒளியூட்டிய ஐயா அவர்களுக்கு என்றென்றும் நன்றிக்கடன் பட்டவளாக இருப்பேன்.

எனது நீண்ட நாள் கனவை நனைவாக்க உதவி புரிந்ததுடன் எனது கதைகளை பொறுமையுடன் வாசித்து திருத்தங்கள் பல செய்து ஊக்குவித்தமை அவரது நல்ல மன்பான்மையினையும், இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பண்பினையும் வெளிக்கொணர்கிறது.

ஐயா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் வாழ்த்துரை வழங்கிய வடமராட்சி வலயக்கல்வி அலுவலகக் கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு.க.அம்பலவாணர் அவர்களுக்கும், அறிமுகவுரை வழங்கிய ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களுக்கும், அட்டைப்படத்தை மிக அழகாக வரைந்து உதவிய ஓவியர் திரு.ரமணி அவர்களுக்கும், பதிப்புரை வழங்கி ஊக்குவித்த ஆனந்தா நாடக மன்றத் தலைவரும், எனது அன்புக் கணவருமாகிய திரு.அ. நாகேந்திரன் அவர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பிரதிகளை கையெழுத்தில் எழுதி உதவிய எனது மகள் திருமதி.தர்சிகா சுகந்தன் அவர்களுக்கும், இந்நாவல் வெளியிடுவதற்கு பலவழிகளிலும் உதவியளித்த திரு-திருமதி.நகுலன் குடும்பத்தினருக்கும், மேலும் கணனிப் பிரதியாக்கம் செய்து உதவிய சண்முகா கணனிப் பதிப்பகத்தினருக்கும், நல்லமுறையில் அச்சிட்டுத்தந்த லெட்சுமி அச்சக உரிமையாளர் திரு.கி.லோகநாதன் போன்ற யாவர்க்கும் என்மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை,

இந்நூலினைப் பெருமனதோடு பொறுப்பேற்று வெளியீடு செய்யும் கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கலாச்சார கூட்டுறவுப் பெருமன்றத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| மகாத்மா வீதி, | என்றும் அன்புடன் |
| நெல்லியடி, | நெல்லை லதாங்கி |
| கரவெட்டி. | (நா.ஆனந்தராணி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஈழத்தில் வளர்ந்து வரும் ஒருவரான நெல்லை லதாங்கி அவர்களின் முதல் குறுநாவலாக "உறங்கும் உண்மைகள்" என்ற நூல் வெளிவருகிறது.

ஒரு தலைப்பைக் கொடுத்த மாத்திரத்தில் கவிதையோ, பாடலோ, சிறுகதையோ, நாடகமோ உடனடியாக எழுதி முடிக்கும் ஆற்றல் பெற்றவர். எழுதுவதற்கு என்று அவருக்கென்று ஒருமனநிலை தேவையில்லை. இதனைத்தவிர பாடசாலைச் செயற்பாடுகளிலும் வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம் போன்ற ஆக்கங்களை எழுதி பயிற்சியளிப்பவர். அத்துடன் இசை நடன நாடகம் போன்ற போட்டிகளில் பங்குபற்றும் ஒரு கலைஞரும் ஆவார். மேலும் வானொலி நாடகம், இசையும் கதையும் போன்ற நிகழ்வுகளுக்கும் ஆக்கங்களை எழுதி பாராட்டுக்களைப் பெற்றிருக்கின்றார்.

அந்த வகையில் பல்வேறு ஆளுமைப்பண்புகளை தம்முள் அடக்கியுள்ள இந்நூலாசிரியரின் கன்னி முயற்சியே இந்த குறுநாவல் ஆகும்.

ஈழத்தில் பெண் எழுத்தாளர்கள் அரிதாக இருக்கும் இக்காலகட்டத்தல் இவரது முயற்சி வரவேற்க்கத்தக்க ஒன்றாகவும், வரப்பிரசாதமாகவும் அமைந்திருக்கின்றதென்று சொன்னால் மிகையாகாது. ஈழத்தின் நாவல்துறை வளர்ச்சியில் இந்நூல் ஒரு மைல்கல்லாக இருக்கும் என நம்புவதுடன் இவரது எழுத்தாக்கம் மென்மேலும் தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

**திரு.அ.நாகேந்திரன்**
**தலைவர்,**
**ஆனந்த நாடக மன்றம்,**
**நெல்லியடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# ஓருயிர்

01



பொழுது சாய்ந்து வானம் சிவக்கும் நேரத்தில் தனது நாளாந்த வேலையால் திரும்பிக் கொண்டிருந்தாள் பாக்கியம், அவளின் உடலை விட மனமே அதிக அளவில் சோர்ந்து போயிருந்தது. மனதில் வேதனைகள் உள்ளமை அவள் நடையிலே நன்கு தெரிந்தது. எந்தத் துன்பத்தையும் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் இளவயதிலேயே கணவனைப் பிரிவது போன்ற கொடுமையான துன்பத்தை எந்தப் பெண்ணாலும் தாங்கிக் கொள்ள முடியாது. ஏன்? எந்தப் பெண்ணுக்கும் ஏற்படவும் கூடாது.

பாக்கியம் அதிக அளவு படிக்கவில்லையானலும் அந்தக்காலத்தில் எட்டாம் தரம் வரை கல்வி கற்றிருந்தாள். அவளுடைய முறை மச்சான் கணேசுவும் அதே பாடசாலையில் பத்தாம் தரம் கற்றிருந்தான். கல்வி கற்கும் காலத்தில் அந்தப் பாடசாலையிலே வனப்பும் கவர்ச்சியும் கூடியவர்கள் என்றால் கணேசுவும் பாக்கியமும் தான். மாணவர்களே இவர்கள் இருவரையும் இணைத்துப் பொருத்தம் பார்க்கத் தொடங்கி விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கப்பால் தயாளன் என்ற மாணவன் பாக்கியத்தின் மேல் அளவற்ற அன்பு வைத்திருத்தான். கணேசுவுடன் மிகவும் சிநேகமாயிருந்தான். கணேசுவுடைய குடும்பமும் பாக்கியத்தினுடைய குடும்பமும் மிகவும் வறுமைப்பட்டது. தயாளனின் குடும்பமோ மிகவும் வசதியானது. சிறுவயதிலிருந்தே கணேசுவிற்கும் பாக்கியத்திற்கும் தன்னாலான உதவிகளைச் செய்து வந்தான் தயாளன். காலங்கள் உருண்டோடி பாக்கியத்திற்கு பத்தொன்பது வயதும் கணேசுவுக்கு இருபத்தொரு வயதும் ஆகின.

பாக்கியத்தின் தந்தைக்கோ கணேசுவின் தந்தையையும் கணேசுவின் தந்தைக்கோ பாக்கியத்தின் தந்தையையும் கண்ணில் காட்டக் கூடாது. அந்த அளவிற்கு விரோதம். இதனால் பாக்கியம் கணேசுவிடம் வசப்பட்டிருந்தாலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளிக்காட்டுவதேயில்லை.

ஒருநாள் கணேஷ் பாக்கியத்திடம் வந்து "உனக்கு ரதி எண்ட நினைப்போ? அதனாலை தான் நான் நெருங்கி நெருங்கி வர நீ விலகி விலகி ஓடுகிறாயோ" கணேஷ் சொல்லச் சொல்லப் பாக்கியம் விறுவிறு என நடந்து போய்க் கொண்டிருந்தாள். கணேசுவிற்கு ஆத்திரம் உச்சமானது. எட்டிக்கையில் பிடித்து விட்டான்.

"பாக்கியம் இண்டைக்கு ஒரு முடிவு தெரிய வேணும்" என்று பற்றின கையை அழுத்திப் பிடித்தான். "விடுங்கோ உங்களுக்கு இப்ப என்ன வந்திட்டுது" என்று கைகளை உதறித்தள்ளிவிட்டு நடக்கத் தொடங்கினாள் அவள். கணேசுவிற்கு மேலும் ஆத்திரம் தலைக்கு மேல் ஏறிவிட்டது. "நீ ஏன் மௌனமாய் போறாய் எண்டு எனக்குத் தெரியும் உன்ரை மனசிலை தயாளன் இருக்கிறான்" என்று கூறி விட்டு விறுவிறுவென திரும்பி நடந்தான் கணேஷ்.

பாக்கியத்திற்கு என்ன செய்வது என்ன சொல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெரியவில்லை அவசரப்பட்டுத் தனது மனநிலையை வெளிப்படுத்தி விட்டால் தந்தைமார்களுக்கிடையில் பெரும் போரே வெடிக்கும் என்பதால் கணேசுவின் ஆத்திரம் அவளுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. கணேசுவின் வீட்டுக்கு அருகில் தான் பாக்கியத்தின் வீடும். வீடு நெருக்கமாய் இருந்ததே தவிர அவர்கள் இதுவரை நெருங்கவில்லை. பொழுது இருண்டு கொண்டிருக்கும் சமயம் அவளின் தோழி பவளம் "பாக்கியம் பாக்கியம்" என அவசரமாக அழைத்தபடி ஓடி வந்தாள்.

பவளத்தின் வீடும் ஒரு கூப்பிடு தூரத்தில் தான் இருந்தது. பாக்கியம் வீட்டுக்கு பவளம் வருவதுண்டு. ஆனால் இன்று பதறிய வண்ணம் வந்தவளை பாக்கியத்தின் தாயார் "என்ன பவளம் இப்படி அரக்கப்பரக்க ஓடி வாறாய்"? என்று கேட்டது காதில் விழுந்தும் பதில் கூற முடியாமல்

"என்ன மாமி கேட்டீர்கள்" என்று பதற்றத்தை மறைத்து "பாக்கியத்திட்டை பழைய நோட்ஸ் கொப்பி வாங்கவேணும், நாளைக்குப் பரீட்சையாம், தம்பி ஒழுங்காக பள்ளிக்கூடம் போகாத வினை, இந்தப் பரபரப்பு" என்று கூறியவண்ணம் குசினிக்குள் நுழைந்தாள் பவளம். பவளத்தின் அவசர அழைப்பைப் பார்த்து பயந்தவளாக

"என்ன பவளம் ஏன் இப்படி பதட்டப் படுகிறாய்" என்று தன்னுடைய பதட்டத்தை மறைத்தவளாய் கேட்டாள் பாக்கியம். "கணேஷல்லே கணேஷ்! உன்ரை கொத்தான் நல்லாய் குடிச்சிட்டு றோட்டிலை விழுந்து கிடந்தாராம். ஐயா தான் தூக்கிக் கொண்டுவந்து வீட்டிலை படுத்தியிருக்கிறார்"

பாக்கியத்திற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை அதைவிட அவளால் அதை ஜீரணிக்க முடியவில்லை "அத்தான் குடித்திருக்கிறாரா?" மனதிற்குள் எழுந்த கேள்வியை வாய்விட்டே கேட்டு விட்டாள். "அது மாத்திரம் இல்லை" பாக்கியம், பாக்கியம் என்னை ஏமாற்றிவிட்டாய் எண்டு வேறை புலம்பிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறார். அதனாலை தான் உன்னைத் தேடி வந்தனான்.

கணேசுவின்ரை தகப்பன் அறிஞ்சால் கணேசுவைக் கொன்றே போட்டிடுவார். சிநேகிதர்மார்வீட்டை எண்டிட்டு அவையள் இருப்பினம். என்னடி பவளம் இப்ப செய்யிறது? அம்மா வேறை இருக்கிறா. ம்.... யோசித்தவாறு "பவளம் இப்ப உன்ரை தம்பிக்கு காய்ச்சல் சரியோ, எனக்குப் பின்னாலை நீ வாறாய்" குழம்பியவளாய் பின் தொடர்ந்தாள் பவளம்.

"அம்மா இவள் பவளத்தின்ரை தம்பிக்கு நல்ல காய்ச்சலாம், சுக்குத் தண்ணி போடத் தெரியாமல் எப்படிப் போடுறது எண்டு கேட்கிறாள்? இவளுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறதைவிட இவள் வீட்டை போய் போட்டுக்குடுத்திட்டு வந்திடலாம். என்னம்மா சொல்லுறீங்கள்?" பெரியதொரு பொய்யை உண்மை போலக் கூறி விட்டாள்.

"நோட்ஸ் கொப்பி வாங்க எண்டு தானே சொன்னனீ பவளம்? காய்ச்சல், சுக்குத்தண்ணி இதொண்டும் உன்ரை வாயிலை வரவேயில்லையே" நம்பியவளாகக் கேட்டாள். பாக்கியத்தின் தாய். அதற்கும் பாக்கியமே பதிலளித்தாள். "அம்மா இந்த இருட்டுக்கை ஏன் வந்தனீ? உன்ரை தம்பியை விட்டு கொப்பியை வாங்கியிருக்கலாம் எண்டு கேட்டன். அறணைக்கு அப்பதான் தம்பியின் நினைவு வந்தது." பாக்கியம் சொல்லிமுடிக்கவில்லை

"ஏன் மாமி பாக்கியத்தை தொந்தரவு பண்ணுவான் நான் வாறன், ஏதோ தெரிஞ்சவரை போடுறன்." என்று நடந்தவளை, உனக்கில்லாத உதவியோ? பாக்கியத்தை கூட்டிக்கொண்டு போ" என்று உத்தரவிட்டாள் பாக்கியத்தின் ஏமாளித்தாய். ஏமாளித்தாய் என்று சொல்வதை விட தேவையற்று மகள் வெளியே செல்லமாட்டாள் என்ற அவளின் நம்பிக்கை தான் அதற்குக் காரணம்.

பவளமும் பாக்கியமும் ஒருநொடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டையடைந்தார்கள். கணேசுவை நெருங்கினார்கள் இருவரும். "பாக்கியம் பாக்கியம் என முனகிக் கொண்டிருந்தான் கணேஷ். நேரம் போகப் போக கணேசுவை வீட்டுக்காரர் தேடப்போகின்றார்கள் என்ற பயம் பாக்கியத்திற்கு. மெதுவாக "கணேஷ்" என்று அழைத்தாள். "பாக்கியம் நீ வரமாட்டாய், நீ வரமாட்டாய் கனவிலை வரவே இவ்வளவு சந்தோஷப்படுறன் நேரில் வந்தால்"

"கனவில்லை அத்தான் நிஜம். கண்ணைத்திறந்து பாருங்கோ உங்கடை பாக்கியம் தான் வந்திருக்கிறன். "என்ரை பாக்கியமோ உண்மையாகவோ" கண்களை மெதுவாகத் திறந்தான் கணேஷ் "அத்தான் எப்ப தொடக்கம் இந்தப்பழக்கம்" கண்கலங்கியவாறு கேட்டாள் பாக்கியம். மெதுவாக எழத்தொடங்கியவன் மீண்டும் படுக்கையில் விழுந்தான்.

"பாக்கியம் நீ கண்கலங்குறதுக்காக நான் குடிக்கயில்லை என்ரை கண்ணை கலக்கியதுக்காகத் தான் குடிச்சனான். நீ என்னைத்தேடி வந்திட்டாய். இனி உயிர் போனாலும் குடிக்கமாட்டன். அதற்கிடையில் பவளம் எலும்பிச்சம் பழத்தைப் பாதியாக வெட்டிய வண்ணம் வந்தாள். அதை தலையில் வைத்துக் கசக்கிய பின் வெளியே கொண்டு வந்து சத்தி எடுக்க வைத்தாள். அத்துடன் கணேசுவின் மயக்கம் ஓரளவு குறைந்து விட்டது.

நேரத்தைப் பார்த்தான். மணி ஆறரையாகிவிட்டது. ஆறு மணிக்கு முன்னம் வீட்டை நிற்கவேணும். இது ஐயாவின்ரை உத்தரவு. ஆறரை எண்டவுடனேயே ஐயா குதிக்கப்போறார். "அப்ப எங்கை நிண்டனீங்கள்" கோபத்துடன் பார்த்தாள் பாக்கியம். "சாப்பிடவே வீட்டுக்குப் போகயில்லை. உவன் தேவன்ரை பேர்த்டே எண்டு பொய் சொல்லிப்போட்டு குடிக்கப்போட்டன்'.' "உங்களைக் கண்டவை மாமாவுக்கு போய்ச் சொல்லப் போகினமெல்லே.. அப்ப என்ன செய்யப் போறியள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைத்த வண்ணம் கேட்டாள் பாக்கியம்.

"என்ரை பாக்கியத்திற்காக குடிச்சனான் எண்டு சொல்லப் போறன்" "கணேஷ்" என்றாள் பாக்கியம் ஆச்சரியத்துடன். இவ்வளவு கண்மூடித்தனமான அன்பு இவனிடம் இருக்கும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. "இல்லைப் பவளம் நான் தவறணைக்குப் போற அளவிற்கு மதி கெட்டுப்போக இல்லை. உவன் வசந்தன்ரை தகப்பன் உதிலை மரம் சீவுகிறவனெல்லே, அந்த மரத்தடிக்குத்தான் போனனான். அதோடை இண்டைக்கு ஒரே விரக்தியிலை குடிச்சிட்டன். ஒருதருக்கும் சொல்லாதை. இனி தொடர்ந்து குடிக்கிறதும் விடுறதும் ஒரு தெய்வத்தின் கையிலை இருக்கு. எண்டு சொல்லியிட்டு வந்திட்டன்." பாக்கியத்திற்கு தெய்வம் என்று தன்னைக் குறிப்பிட்டதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. வாய்விட்டு அழத் தொடங்கி விட்டாள்.

"சீ....... என்ன பைத்தியம்" என்றவாறு பாக்கியத்தின் கண்களிலிருந்து வடிந்த நீரை தன் லேஞ்சியினால் துடைத்து கொண்டான் கணேஷ். பவளம் அவ்விடத்தை விட்டு அகன்று தட்டில் சோற்றுடன் வந்து நின்றாள். "என்ன பவளம் இது வீட்டிலை தேடப்போகினம்" மறுத்தான் கணேஷ். "இருந்தது இருந்திட்டீங்கள், பாக்கியத்தின் கையாலை வாங்கிச் சாப்பிட்டிட்டுப் போங்கோவன்." இடை மறித்தாள் பவளம். கணேஷ் பாக்கியத்தை பார்த்து மெல்லியதாகப் புன்னகைத்தான்.

பாக்கியம் நாணத்தால் தலையை குனிந்து கொண்டாள். பாக்கியத்திற்கு மனதிற்குள் மிகவும் இன்பமாக இருந்தது. ஆனால் மாமனையும் தனது தந்தையையும் நினைத்ததும் அந்தக் கணமே எல்லாச் சந்தோசமும் பறந்தோடிவிட்டது. பாக்கியத்தின் முகமாற்றத்தைக் கவனிக்கத் தவறவில்லை கணேஷ். பவளம் கொண்டு வந்து வைத்த தட்டிலிருந்து சோற்றைக் குழைத்து கணேசுவின் கையில் வைக்கப்போன போது கணேஷ் கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்டாமல் வாயைக் கொடுத்தான்.

"ஆசையைப்பார் அதெல்லாம் முறையாய் எல்லாம் நடந்த பிறகுதான். நேரம் போகுது கையை நீட்டுங்கோ" கணேசுவும் அதை ஒத்துக் கொண்டவன் போல கையை நீட்டி வாங்கிக் கொண்டான். பசி வேறு வயிற்றைப் பிடுங்கிய நேரம் பாக்கியத்தின் கையால் குழைத்த பவளத்தின் சோறு கறி தேவாமிர்தமாக காட்சி அளித்தது. கணேசுவின் கண்களின் மூலம் அந்த இன்பம் வெளிப்பட்டது.

"பாக்கியம் மனைவியின் கையால் குழைத்து சாப்பிடுவதில் ஒரு தனி இன்பம் இருக்கெண்டு கேள்விப்பட்டிருக்கிறன். இப்ப தான் நான் அதை உணருறன்." கணேஷ் கூறி முடிக்கவில்லை "போதும் போதும் சோறு குழைத்து யார் தந்தாலும் சாப்பிடுவதில் ஒரு தனி ருசி இருக்குது. அதைவிட்டிட்டு மனைவி..." என்று இழுத்தவள் "யார் மனைவி?" என்று புதிர் போட்டாள்" "மனைவி யார் எண்டு காட்டுறன்" என்று பாக்கியத்தை மறுகையால் அணைக்க முற்பட்ட போது அவள் விலகிக்கொண்டாள் "இடம் தந்தால் மடத்தைப் பிடிப்பினமாம்.

பாவம் மத்தியானம் சாப்பிட்டிராது எண்டு குழைச்சுக் கொடுத்தால்......." என்று பொய்க் கோபம் காட்டினாள் பாக்கியம். அதற்கிடையில் பவளத்தின் தந்தையும் வெளியில் சென்றவர் வந்துவிட்டார். தம்பி உந்த வேலையை இண்டோடை விட்டிடும், உந்தக் குடியைக் குடிக்கிறதை விட நஞ்சைக் குடிக்கலாம்"

"குடிச்சிருப்பன் மாமா, ஆனால் அதைக் குடிச்சிருந்தால் என்ரை பாக்கியத்தோடை சேர்ந்து வாழ மாட்டனே" கணேசுவின் கண்களும் பாக்கியத்தின் கண்களும் சேர்ந்து கலங்கின. "உங்களை கலங்க வைக்கிறதுக்காக நான் சொல்லயில்லைத் தம்பி. உங்கடை குடும்பத்தைப் பற்றியும் பாக்கியத்தின்ரை குடும்பத்தைப் பற்றியும் எனக்கு நல்லாய்த் தெரியும். உங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து வாழ விடுவினமோ எண்டு தான் நான் பயப்பிடுறன்."

"எல்லாம் அங்கிள் எங்கடை தலைவிதி. இண்டைக்கு நீங்களும் பவளமும் செய்த உதவியை நான் எண்டைக்கும் மறக்க மாட்டன் அங்கிள். நான் வாறன். பாக்கித்தையும் வீட்டில கொண்டுபொய் விட்டு விடுங்கோ" கூறிய படி வாயிற்படியைக் கடந்தான்.

## 02

இவ்வாறாக இவர்களுடைய காதல், சந்திப்புக்களில் வளராவிட்டலும் இருவரது கனவிலும் நன்றாகவே வளர்ந்தது. சினிமாவில் வரும் காதலர்களுக்கு பெற்றோர்களால் ஏற்படும் கதி தங்களுக்கும் ஏற்பட்டு விடக் கூடாதே, என்ற நல்லெண்ணம் தான் அதுக்குக் காரணம்.

ஆனாலும் கணேசுவால் பாக்கியத்தைச் சந்திக்காமல் இருக்கமுடியவில்லை. ஒருநாள் பக்கத்து வீட்டுச் சிறுவனிடம் பாக்கியத்தை ஆறு மணியளவில் புளியமரத்தடிப்பக்கம் சந்திக்குமாறு ஒரு துண்டில் எழுதிக் கொடுத்துவிட்டான். பாக்கியத்தால் அதை அசட்டை செய்ய முடியவில்லை. காரணம் அவளாலும் கணேசுவைச் சந்திக்காமல் இருக்கமுடியவில்லை. தாயிடம் மெதுவாக வந்து "அம்மா உவள் பவளத்தின்ரை பிறந்தநாள், மறந்தே போயிட்டன். போகாட்டாலும் குறை கூறுவாள்" இழுத்தாள் பாக்கியம்.

"என்ன பிள்ளை பொழுதுபடுகுது. கெதியாய் வந்திடு. பிறகு கொப்பர் வந்து இருண்ட பிறகு எங்கை உலாத்தவிட்டனீ, எண்டு என்னோடை சண்டைக்கு வருவார்" தாய்கூறி முடிக்கவில்லை.

"சரி அம்மா" என்றுவிட்டு அவசர அவசரமாக வெளியே வந்தாள். நேரே கணேஷ் கூறிய இடத்திற்கு விரைந்து சென்றாள். அங்கே பாக்கியத்தின் வரவை கணேஷ் ஆவலுடன் எதிர்பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தான். பாக்கியத்தைக் கண்டதும் அவனையறியாமல் "வா வா எந்தன் நிலவே வெண்ணிலவே" என்ற பாட்டு வாயில் வந்துவிட்டது.

"என்னவோ ஏதோ எண்டு ஓடி வாறன். அதுவும் அம்மாவுக்கு பவளம் வீட்டை எண்டு பொய் சொல்லியிட்டு வாறன். என்ரை வாழ்க்கையிலை இரண்டாம் தடவை அம்மாவை ஏமாத்தியிட்டன். நீங்கள் என்னவெண்டால் பாட்டிலை நிக்கிறியள்" பொய்க்கோபத்துடன் பாக்கியம் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தாள். கணேஸ் அவளின் முகத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

'ஆ... என்ன சொல்லுங்கோ. கூப்பிட்டிட்டுப் பேசாமல் இருந்தால்.." கனவில் இருந்து விழித்துக் கொண்டவனைப் போல

"பாக்கியம் ஏனோ இப்ப உன்னைப் பார்க்காமல் இருக்க முடியேல்ல. உன்ரை வீட்டுப்பக்கம் வர பிறகு கொப்பர் ஏதும் நினைச்சாலுமெண்டு, அதுவேறை பயமாயிருக்கு."

"சரி பார்த்தாச்சுத் தானே நான் வாறன்" என்று திரும்பி நடந்தாள். பாக்கியம் உண்மையாகவே திரும்புகிறாள், என்று நினைத்த கணேஷ் "பாக்கியம் நில்" என்று எட்டிக் கையைப் பிடித்து விட்டான்.

"உனக்கு என்னைப் பார்க்க வேணும் பேச வேணும் எண்ட ஆசையே இல்லையா பாக்கியம்?" என்றவாறு கையை விட்டவன், தொடர்ந்து "உன்னைப் பார்க்காவிட்டால் சாப்பாடே உட் செல்லாதாம். பரீட்சை வேறை வருகுது. உன்ரை நினைவாய் இருந்தால், எப்பிடிப் படிக்கிறது?"

"அத்தான் ஏன் இப்பிடிப் பைத்தியமாய் இருக்கிறியள்? உங்கடை பெற்றோரும் என்னுடைய பெற்றோரும் நாங்கள் சேர்ந்து வாழ ஒருக்காலும் சம்மதிக்க மாட்டினம். பிறகு தேவதாஸ் பார்வதி மாதிரி வாழுறதை விட இரண்டு பேரது பெற்றோரையாவது சந்தோசமாக வாழச் செய்யலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பாக்கியம் கதை ஒரு மாதிரிப் போகுது"

"பின்னை என்ன அத்தான் உங்கடை பெற்றோர் மறுத்தாலும் என்னைக் கல்யாணம் செய்யிற தைரியம் உங்களுக்கு இருக்கோ?"

"பின்னை இல்லாமல் என்ன பாக்கியம் ஒரு தொழில் கிடைக்கட்டும். உழைப்பு இல்லாமல் என்ரை பாக்கியத்தை எப்பிடி நான் கண்கலங்காமல் பார்க்கிறது? அதுதான் பொறுமையாய் இருக்கிறன்."

"அத்தான்" என்று மெய்சிலிர்த்துக் கொண்டாள் பாக்கியம். "கொஞ்சம் சுணங்கினாலே ஐயா தேடத்தொடங்யிடுவார் நான் வாறன் அத்தான்" என்று எழுந்து கொண்டாள் பாக்கியம்.

"இனி எப்ப பாக்கியம்" என்று கூறிக் கொண்டே கணேசுவும் எழுந்து கொண்டான்.

"இதுவே கடைசியும் முதலுமாக இருக்கட்டும். முதல்லை படிச்சு முன்னுக்கு வரப்பாருங்கோ" என்று கூறிவிட்டு பாக்கியம் புறப்பட்டுவிட்டாள். அவள் போவதை கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு எவ்வளவு நேரம் நின்றானோ அவனுக்கே தெரியாது.

வீட்டை அடைந்ததும் பாக்கியத்திற்கு பலமான வரவேற்பு காத்துக் கிடந்தது. தகப்பன் வாயிற் படியில் சுருட்டுப்பற்ற வைத்துக் கொண்டிருந்தார். நெஞ்சம் திக் திக்கென்று அடித்துக் கொள்ள வாயிலைக் கடந்து சென்றாள் பாக்கியம். "பாக்கியம் எங்கை போயிட்டு இந்த இருட்டுக்கை வாறாய்?" ஒன்றுமறியாதவர் போல் கேட்டார் தம்பையா கோபத்துடன்.

"உவள் பவளம் வீட்டை போட்டு வாறன் ஐயா" என்றவாறு உள்ளே சென்றவளை, அடுத்து தந்தையிடம் இருந்து வந்த கேள்வி சற்று திக்குமுக்காட வைத்துவிட்டது. "நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப பவளம் வீட்டை போய், உன்னை விசாரிச்சுவிட்டுத் தானே வாறன். பாக்கியம் வந்தது தான், வந்தவுடனேயே போயிட்டாள் எண்டு சொல்லிச்சினம். நீ எங்கை நிண்டிட்டு வாறாய்" தம்பையா கேட்டகேள்விக்கு

"ஐயா நான் பவளம் வீட்டாலை வரயுக்கை 'கணேஷ் அத்தான்' என்று சொல்ல வெளிக்கிட்டவள் 'அத்தானை' மனசிற்குள் சொல்லிக்கொண்டு "கணேஷ் எங்கடை குடும்பத்தைப் பற்றி விசாரிச்சுது. கதைச்சுக் கொண்டு நிண்டிட்டன்."

"விசாரிச்சதோ. விசாரிச்சவன் எண்டு சொல்லு. உனக்குப் படிச்சுப் படிச்சுச் சொன்னாலும் கேட்கிறாயில்லை, அந்தக் குடும்பத்தோடை உனக்கு என்ன கதை? கால் காசு பெறாத நாயள்" பாக்கியத்திற்கு சிரிப்பு பக்கென்று வந்தது. பொத்திக் கொண்டாள்.

"என்ன சிரிப்பு" எண்டு மீண்டும் பாய்ந்தார் தம்பையா. "இல்லை ஐயா, விசாரிச்சது எண்டு தானே சொன்னன். அது அ∴றிணை. அதுதான் அவைக்கு பொருத்தம். நீங்கள் கொஞ்சம் அவன் என்று மனிசனாக்கிட்டியளே" என்று தன் உள்ளத்தில் மேலிடத்திலிருந்த கணேசுவின் இடத்தைக் குறைத்துக் கூறிவிட்டாள். அதை நம்பிய தம்பையாவும்.

"அது தானே பார்த்தன். இனி அவன் உன்னோடை ஏதும் கதைச்சால், உனக்கும் எனக்கும் கதையில்லை. எண்டிட்டு வா" என்று கூறிவிட்டு உள்ளே நடந்தார் தம்பையா. பாக்கியம் மௌனமாக உள்ளே சென்று விட்டாள்.

## 03

நாட்கள் உருண்டோடின. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகிவிட்டன. கணேசுவிற்கும் வேலை கிடைத்து சொந்தக் காலில் நிற்கத் தொடங்கியதும், தந்தைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயப்பிடாமல் துணிகரமாக பாக்கியத்தை சந்திக்கத் தொடங்கினான். கணேசுவின் தூய்மையான அன்பிற்கு முன்னால் தந்தையைப் பற்றிய பயம் பாக்கியத்திற்கும் தூர அகன்று விட்டது. ஒரு நாள் பாக்கியம் ஆஸ்பத்திரியால் திரும்பிய போது கணேஷ் இடைவழியில் மறித்து, ரவுணுக்குப் போய் ஏதாவது கடைக்குப் போட்டு வருவம் என்றான்.

"ஐயா தேடுவார், அதோடை உங்கடை சைக்கிள்லை ஏறுகிற அளவுக்கு துணிவில்லை. நான் போய் வாறன் அத்தான்." என்றவாறு கிளம்பினாள் பாக்கியம்.

''பிளீஸ் பாக்கியம் இண்டைக்கு எனக்கொரு ஞாபகநாள். அரை மணித்தியாலத்திலை திரும்பியிடுவம்" மறுக்க முடியாத பாக்கியம் சைக்கிளில் ஏறிக்கொண்டாள். இருவரும் ரவுணுக்குப் போய்த் திரும்பும் போது தம்பையா கண்டுவிட்டார். இதைவிட இவர்களைப் பற்றிச் சிலர் தம்பையாவிடம் சொன்ன போது அவர் நம்பவில்லை. நேரடியாகக் கண்டதும் அவரால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. மனம் கொதித்துப் போனார். வீட்டுக்கு வந்தவர் உடனே திரும்பி விட்டார். பாக்கியம் உடையை மாற்றியவள், தந்தை வந்த உடனே திரும்பியதைக் கண்டதும் தாயிடம் சென்றாள்.

''அம்மா என்ன ஐயா ஒரு மாதிரிப் போறார். உங்களோடை ஏதும் பிரச்சனையோ?" கனிவாக கேட்டாள்.

"என்னோடையோ? எப்பவாவது நாங்கள் பிரச்சனைப் படுறதைக் கண்டிருக்கிறியே? எல்லாம் நீ செய்த கூத்தாலை. ஒண்டும் தெரியாதது மாதிரி வந்து கேட்கிறாய் என்ன?" என்று முறைத்தபடி ஏசினாள். பாக்கியத்திற்கு உடனே விசயம் விளங்கிவிட்டது.

இப்ப ஐயா எங்கை போறார், பதற்றமடைந்தாள் பாக்கியம். மானம் தான் பெரிசு என அடிக்கடி சொல்லும் ஐயா, என்ன முடிவெடுத்தாரோ என்று அவளது மனம் பயப்பிடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. அங்கும் இங்குமாக உலாவினாளே ஒழிய என்ன செய்வது என்று தெரியவில்லை பாக்கியத்திற்கு.

சிறிது நேரத்தில் தந்தை ஒரு சிறிய போத்தலுடன் வந்தார். "சின்னம்மா, சின்னம்மா" என வீடு அதிரும்படி கூப்பிட்டதும் சின்னம்மா அவரது காலடிக்கு வந்து விட்டாள்.

"உனக்கு நானோ உன்ரை மகளோ முக்கியம் எண்டதை முடிவு செய்து கெதியாச் சொல்லு"

தம்பையாவின் குணத்தை நன்கு தெரிந்த சின்னம்மா" என்னப்பா உங்களுக்கு பைத்தியம் பிடிச்சிட்டுதே?

"ஓமடி உன்ரை மகள் செய்த வேலையைக் கண்ட உடனே பைத்தியம் பிடிச்சிருக்கவேணும். ஊரிலை உள்ள எத்தனை பேர் சொன்னவை, என்ரை பிள்ளை ஆரைத்தான் காதலிச்சாலும் ஜென்ம விரோதியின்ரை பிள்ளையைக் காதலிக்காது என்டு மார்பிலை தட்டிப் பேசினன். ஆண்டவனாய்ப் பார்த்து ஊரைப் பார்க்கவிடாமல் என்னைப் பார்க்க விட்டிட்டார். இந்தப் பொலிடோலை நான் குடிக்வேணும் இல்லை உன்ரை மேள் குடிக்க வேணும்" ஆவேசத்துடன் கூறவும் பக்கத்து வீட்டு தர்மலிங்கம் வரவும் சரியாக இருந்தது.

"தம்பையா என்னத்தைக் குடிக்க இவ்வளவு சண்டை? "இஞ்சை கொண்டா, அதை நான் குடிக்கிறன்." என்று தர்மலிங்கம் கேட்டார்.

"இல்லை தர்மலிங்கண்ணை.. இவள் பாக்கியத்திற்கு...." என இழுத்தார் தம்பையா.

"நீ இழுக்காதை நானும் உன்ரை மச்சான் வீட்டாலை தான் வாறன். அவன்ரை இரண்டாவது மோன் தானே கணேஷ் அவனைக் கண்மண் தெரியாமல் தகப்பன் அடிச்சுப் போட்டிருக்கிறான். விசயம் தெரிஞ்ச உடனே நீயும் இஞ்சை என்ன செய்யப் போறியோ எண்டு நினைச்சன். அது சரியாப்போச்சு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தர்மலிங்கண்ணை, நான் அவன் சோமனை விட மானஸ்தன். அடிச்சு ஆக்கினை செய்ய, அவை திரும்பச் சந்திப்பினம். நாங்கள் திரும்ப அடிக்க இதெல்லாம் பிரியோசனம் இல்லாத அலுவல். அதாலை இதை நான் குடிச்சுச் சாக வேணும்" ஆவேசத்துடன் கூறினார் தம்பையா.

"ஏன் தம்பையா உனக்கென்ன விசரோ? நடந்தது நடந்திட்டுது. ஆர்? பாக்கியத்தின்ரை முறை மச்சான் தானே. உங்களுக்கு இடையிலை உள்ள கோபத்தை ஏன் பிள்ளையள் மேலை காட்டுறியள்? அவன் கணேசுவும் நல்ல பொடியன் வேலையும் பார்க்கிறான்." இடை மறித்தார் தம்பையா.

"தர்மலிங்கண்ணை முதல்லை இதாலை எழும்புங்கோ, என்ரை விசரை கிளப்பாதையுங்கோ."

"தம்பையா உன்ரை மேளைக் கடைசியாய் கேட்கிறது தானே. பாக்கியம் என்ன மோனை சொல்லுறாய்?"

"தர்மலிங்கம் மாமா நான் ஐயாவின்ரை தலை குனியும்படி இனி நடக்க மாட்டன். இது சத்தியம்" என்று அழுத வண்ணம் கூறிவிட்டு குசினியுக்குள்ளே சென்று மறைந்தாள்.

"பிறகென்ன தம்பையா, நீ எதிர்பார்த்ததை பிள்ளை சொல்லியிட்டுது. உந்தப் போத்தலை என்னட்டைத்தா"

வாங்கிப் பார்த்த தர்மலிங்கம் " நீ வெருட்டுறாய் எண்டு பார்த்தால், உண்மையாகத்தான் பொலிடோலை வைச்சிருக்கிறாய். இந்தா தோட்டத்துக்குத் தேவை தானே, கவனமாய் வை. நான் வாறன்." அதற்கிடையில் சின்னம்மா கொண்டு வந்து தேநீர் கொடுத்ததும் குடித்துவிட்டு வெளியேறினார் தர்மலிங்கம்.

நாட்கள் நகர்ந்தனவே தவிர கணேசுவும் பாக்கியமும் சந்திக்க முடியவில்லை, என்று சொல்வதைவிட மீண்டும் சந்திப்பதை விரும்பவில்லை. ஆண்கள் அவசரப்பட்டவர்கள் தானே. கணேஷ் மட்டும் விதிவிலக்கா. மீண்டும் பவளத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியை நாடி பாக்கியத்திற்கு ஒரு கடிதம் அனுப்பி வைத்தான் கணேஷ்.

பவளம் அன்றே பாக்கியத்தின் வீட்டிற்கு சென்று "இந்தா உன்ரை கொத்தான் தந்த காதல் பரிசு" என்று கூறி கடிதத்தை கையில் திணித்தாள். பாக்கியமும் கடிதத்தை வாங்கி, அந்த இடத்திலேயே தாறுமாறாக கிழித்துப் போட்டு விட்டாள். பவளத்திற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"பாக்கியம்.! கடிதத்தை கிழிச்ச மாதிரி கணேசின்ரை உறவை அப்பவே கிழிச்சுப் போட்டிருக்க வேணும். இப்ப எல்லாத்தையும் நீயும் சேர்த்து வளர்த்திட்டு இப்படிச் செய்யிறாய்"

பவளம் கூறிமுடிக்குமுன் "இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய் பவளம்? எல்லாம் தெரிஞ்ச நீயே இப்படிச் சொன்னால்..." மிகுதி சொல்ல முடியாத அளவிற்கு துக்கம் தொண்டையை அடைத்தது பாக்கியத்திற்கு. பவளத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனாலும் கூறினாள். "பாக்கியம்.! கணேஷ் உன்னிலை உயிரையே வைச்சிருக்குது உன்ரை குடும்ப மானத்துக்காக கணேசின்ரை உயிரைப் பறிச்சிடாதை. ஆறுதலாகப் பதிலை தா, நான் வாறன்." பவளம் வெளியேறினாள்.

பாக்கியத்திற்கோ மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கணேஷ் அனுப்பிய கடிதத்தை பொருத்திப் பார்க்க வேணுமென்ற ஆவலில் அவசர அவசரமாக அங்கும் இங்குமாக சிதறிக் கிடந்த துண்டுகளைப் பொருத்திப் பார்த்தாள். நாளை காலை ஐந்து மணிக்குப் புளிய மரத்தடிக்கு வரவும் ஆவலுடன் எதிர் பார்க்கும் உன் ஆசை அத்தான் கணேஷ். என்று இருந்தது. பாக்கியமோ இருதலைக் கொள்ளி எறும்பாகத் துடித்தாள். இரவு நித்திரை வரவில்லை. அதிகாலை நான்கு மணிவரை கண் விழித்திருந்தபடியால் கண்ணும் கரிக்கத் தொடங்கியது. மணி நான்கு இருபது ஆகியும் முடிவு எடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. தான் போகாவிட்டால் ஏதாவது விபரீதமான முடிவு எடுத்துவிடுவாரோ? என்ற அச்சத்தில் நான்கு முப்பதற்கே எழுந்து செம்பிலிருந்த தண்ணீரில் முகத்தைக் கழுவி, அவசரமாக வெளிக்கிட்டு, மெதுவாக கதவைத் திறந்து வெளியேறி விட்டாள். தாய், தந்தையரின் முகத்தைக் கூட இறுதியாகப் பார்க்கவில்லை. அவள் நினைத்தாளா? தாய் தந்தையரை இனிமேல் பார்க்க மாட்டேன் என்று? தோட்ட வேலை செய்த களைப்பில் தம்பையாவும் விடியற்காலை ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்.

## 04

புளியமரத்தடியை நெருங்க நெருங்க கணேசுவும் வந்துகொண்டிருந்தான். அருகருகே வந்ததும் பாக்கியம் மௌனமாக கீழே பார்த்தவாறு நின்றாள்.

"பாக்கியம் என்ன இளைச்சுப் போய்விட்டாய். நான் இளைச்சிருக்கிறது நியாயம். ஏனென்டால் நான் உன்ரை நினைவாகவே இருக்கிறன்." கணேஷ் குத்திக் காட்டியதை காதால் வாங்கிக்கொண்டு நின்றாள் பாக்கியம். "நாங்கள் ஒன்றாய் வாழத்தான் பயப்படுகிறாய். சாவையாவது ஒன்றாய்ச் சந்திப்பம். அதுக்கு ஒருத்தருக்கும் பயப்படத்தேவையில்லை. ஒருத்தரும் தடை செய்யப்போறதுமில்லை. என்ன சொல்லுகிறாய்"?.......... பாக்கியத்தின் மௌனத்தைப் பார்த்துவிட்டு

"சரி நீ ஏன் சாகவேணும்? நான் சாகிறன், அனுமதியைத்தா. இப்படி உன்னைச்சந்திக்காமல் நரக வாழ்க்கை வாழ என்னாலை முடியாது."

ஆண்பிள்ளை என்ற நினைப்பைக் கூட மறந்து கேவிக்கேவி அழத்தொடங்கிவிட்டான் கணேஷ். பாக்கியத்தால் மேலும் மௌனம் சாதிக்க முடியவில்லை "அத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழாதையுங்கோ. உங்களை அழவைச்ச பாவியை மன்னிச்சிடுங்கோ." என்றவாறு கணேசின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீரைத் துடைத்து விட்டாள். "பாக்கியம் உனக்கு முன்னாலை அழயிக்கை துடைக்கிறாய். உனக்குத் தெரியாமல் எத்தனை நாள் அழுதிருக்கிறன்" பாக்கியத்தால் பேசாமல் இருக்கமுடியவில்லை "அத்தான் ஒருக்கால் சைக்கிள்ளை ஏறியதுக்கே உங்கடை ஐயா தோலை உரிச்சு காயம் வைச்சிருக்கிறார். என்ரை ஐயா விஷப்போத்தலை எடுத்திருக்கிறார். இதுகள் மத்தியிலை எப்படி அத்தான் சேர்ந்து வாழுறது? தலையில் அடித்தவாறு அழத் தொடங்கினாள் பாக்கியம்.

"பாக்கியம் என்ரை கண்ணீரைத் துடைச்சிட்டு பிறகேன் நீ அழுகிறாய்? இப்படியே மாறி மாறி ஆறுதல் சொல்லிக் கொண்டே வாழ்ந்திடலாம். அதுக்குக் கூட பயமாயிருக்கு" கணேஷ் கூறிமுடிக்கவில்லை

"இனி என்னைச் சந்திக்க விரும்பாதையுங்கோ. நான் உங்கடை நினைவோட வாழுவன் எண்ட நம்பிக்கை எனக்கிருக்கு" "ஓ............. என்னை மறக்கிறன் எண்டு தலையாட்டின நீ இன்னொருத்தனுக்கு தலை நீட்டமாட்டாய் எண்டு என்ன நம்பிக்கை? நான் உன்மேலை என்ரை உயிரை வைச்சிருக்கிறன் பாக்கியம். கொஞ்சக் காலத்திலை மண்ணுக்கை போறதுகளுக்காக வாழுகிறாய். எனக்காக நீ வாழக் கூடாதா? பிறந்து வளர்ந்தது கொஞ்சக்காலம். நீண்ட காலம் வாழ வேண்டியது உன்ரை கணவனோடைதான் பாக்கியம். உன்னை என்னாலை மறக்க முடியாது. ஆனால் என்ரை மனதை மாற்ற முடியும்.

என்று பெருமூச்செறிந்தவாறு பொக்கற்றுக்குள் இருந்த சரையை எடுத்து விரித்தான். அதில் நிறைய மாத்திரைகள் இருந்தன. "என்னத்தான் இது?" என்று பதற்றத்துடன் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம். "நீ போட்டுவா. எங்கிருந்தாலும் சந்தோஷமாக இருந்தால் அது போதும். நான் சந்தோஷமாய்ப் போயிடுவேன்" என்று பாக்கியத்தை அனுப்ப முயன்றான். பாக்கியத்திற்கு விளங்கிவிட்டது. அதற்குப் பின்னும் அவளால் பொறுக்க முடியவில்லை. "அத்தான் உங்களுக்கு நான்தானே வேணும். இப்பவே என்னை எங்கையாவது கூட்டிக்கொண்டு போய் வாழவையுங்கோ." ஆவேசமாகக் கூறினாள். கணேசுவால் நம்பவே முடியவில்லை. ஆனாலும் "பாக்கியம் இப்பவே உன்னைக் கூட்டிக்கொண்டு போய் வாழுற தைரியம் எனக்கு நிறைய இருக்கு"

"இல்லை அத்தான் உங்களோடை வாழுற சந்தர்ப்பத்தை இழந்து விடுவேனோ? எண்டு எனக்கு பயமாயிருக்குதுதத்தான். வாங்கோ இப்பவே எங்காவது கண்ணுக்கு தெரியாத இடத்திற்குப் போய் வாழுவம்" என்று கணேசின் கையைப் பற்றினாள். "வா பாக்கியம் ஐந்தரை மணிக்கு டவுனில் பஸ் இருக்குது. என்ரை சினேகிதன் வீட்டுக்குப் போவம்" என்று கூறியவாறு இருவரும் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தார்கள்.

யாரையுமே சந்திக்காமல் பாபுவின் வீட்டை அடைந்துவிட்டார்கள். பாபுவின் பெற்றோர் முதலில் இடம் தரச்சம்மதிக்கவில்லை. காரணம், இந்தச் சிறிய வயதிலேயே இப்படி ஒரு துணிகரமான செயலைச் செய்தமையே ஆகும். ஆனால் பிறகு மனமிரங்கியவர்களாய் எங்காவது வீடு பார்க்கும் வரை இருக்கச் சொல்லி விட்டார்கள். பின்புதான் பாட்டி ஒருவர் அருகில் இருப்பது நினைவிற்கு வந்தது. மறுநாளே பாபுவின் குடும்பத்திற்கு டாட்டா காட்டிவிட்டு புறப்பட்டுவிட்டார்கள்.

பாட்டியும் அவர்களை உபசரித்து தன்வீட்டிலேயே வைத்திருந்தாள். கணேசுவின் குடும்பமும் பாக்கியத்தின் குடும்பமும் அன்றே அவர்களைக் கைகழுவி விட்டார்கள். கணேசுவும் பாக்கியமும் ஒருவரின் தலையீடுமின்றி மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷமாய் வாழ்ந்தார்கள். பாக்கியத்திற்கு ஒரு தலையிடி என்றால் கணேசால் தாங்க முடியாது. கணேசுவுக்கு ஒரு காய்ச்சல் தலையிடி என்றால் பாக்கியம் தாங்கமாட்டாள். இதைப்பார்க்கும் பாட்டிக்கு அவர்கள் பெற்றோரை துயர்ப்படுத்திய குற்றம் பெரிதாகத் தெரியவில்லை. பாட்டியின் கண்ணே பட்டுவிடுமோ என்ற அளவிற்கு மிகவும் அன்பாகவும் அந்நியோன்னியமாகவும் இருந்தார்கள்.

பாக்கியமும் வீட்டை விட்டு வெளிக்கிட்டு மறுமாதமே பாக்கியத்துக்கு முழுக்கு நீடித்து விட்டது. பாட்டிக்குச் சொன்னாள் பாக்கியம். பாட்டிக்கு மிகவும் சந்தோஷமாய் இருந்தது. தான் உயிரோடை இருக்கையிக்கை இப்படி ஏதாவதென்றால் தன்னால் உதவியாக இருக்கமுடியும். அல்லது இந்தச் சின்னஞ்சிறுசுகள் என்ன பாடுபடுமோ என்று மனதிற்குள் நினைத்தவாறு

"சரி பாக்கியம் நீ எனக்கு சொல்லியிட்டாய். கணேசுவுக்கு சொல்லியிட்டியோ" என்று கேலியாக கேட்டாள் பாட்டி. "எப்படி பாட்டி நான் சொல்லுறது" என்றாள் நாணத்துடன். "நல்ல பகிடியாக இருக்குது" இந்த விஷயங்களை முதல்லை கணவனுக்கு சொல்லியிட்டுத்தான் மற்றவைக்கு சொல்ல வேணும்" ஏதோ பத்துப்பிள்ளை பெற்றவள் மாதிரி பாட்டி தொடர்ந்தாள். பாக்கியத்தின் வெட்கத்தைப் பார்த்துவிட்டு "செய்ய வேண்டியதெல்லாம் செய்திட்டு இப்ப வெட்கப்படுகிறாய்"

பாட்டியே தொடரவும் கணேஷ் வேலையால் வரவும் சரியாக இருந்தது. "என்ன பாட்டி இரண்டு பேரும் பிடுங்குப்படுறியள்" கணேஷைக் கண்டதும் குசினிக்குள் ஓடி மறைந்தாள் பாக்கியம். இவ்வாறு பாக்கியம் தன்னைக் கண்டு வெட்கப்பட்டதே கிடையாதென்பதால் அவள் வெட்கப்பட்டு ஓடியது கணேசுவிற்கு ஆச்சரியமாக இருந்தது. "ஏன் பாட்டி பாக்கியம் ஓடுது? சொல்லு பாட்டி என்ன விஷயம்? கெஞ்சினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேஷ். "என்ரை வாயாலை சொல்லுறதை விட உன்ரை மனிசியின்ரை வாயாலை கேட்கிறதுதான் நல்லது" பாட்டியிடம் கேட்டு பிரியோசனமில்லை என்று எண்ணியவன் குசினிக்குள் சென்றான்.

பாக்கியம் அடுப்பை பற்றவைத்துக் கொண்டிருந்தாள். கணேஷ் மெதுவாக மெதுவாக வந்து பாக்கியத்தின் இரு கண்களையும் தன் இருகரங்களாலும் பொத்தினான். பாக்கியம் திரும்ப மெதுவாக அணைத்துக் கொண்டான். "விடுங்கோ" என்று பொய்ச்சிணுங்கல் சிணுங்கினாள். கணேஷ் விட்டபாடில்லை. "பாட்டிக்கு என்ன சொல்லிக்கொண்டிருந்தாய்" என்று ஆசையுடன் கேட்டான். பாக்கியத்திற்கு முகம் எல்லாம் சிவந்து மீண்டும் நாணம் ஏற்பட்டது. கணேஸ் பொய்க்கோபத்துடன் உதறித்தள்ளி விலகிக் கொண்டான். கெஞ்சினால் மிஞ்சுவார்கள் மிஞ்சினால் கெஞ்சுவார்கள் என்று சொல்வது போல கணேஷ் விலகிக்கொள்ள பாக்கியம் அவனது தோள்களுக்கு மேலால் கையைப்போட்டு கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

"நீங்கள் அப்பாவாகப் போகிறியள்" மெதுவாக காதினுள் குசு குசுத்தாள். கணேஷ் முன்புறம் அவளை இழுத்து தூக்கிச் சுற்றத்தொடங்கினான். அதற்கிடையில் பாட்டி அங்கு வந்து "டேய் டேய் அவளை இப்படி எல்லாம் போட்டு உலுக்காதை இரண்டு மூன்று மாதத்திற்கு அவளை கஸ்டப்படுத்தக் கூடாது. மூன்று மாதத்திற்கு பாக்கியம் என்னோடை அறையிலை படுக்கட்டும்." இந்த வார்த்தையைக் கேட்டதும் கணேசுவிற்கு தூக்கிவாரிப்போட்டது. "பாக்கியம் இதைவிட நான் அப்பாவாகாமல் இருந்திருக்கலாம்." என்று பாக்கியத்தின் காதில் மட்டும் கேட்கக்கூடியதாக குசுகுசுத்தான். "சரி சரி இந்தாங்கோ தேத்தண்ணி குடிச்சிட்டு போய் குளியுங்கோ" என்றவாறு தனது வேலையைத் தொடர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வாறு பாக்கியமும் கணேசுவும் இன்பமாக வாழ்கிறார்கள். என்பதை நீருபிக்கும் விதமாக கணேஷ் இரண்டாவது குழந்தைக்கும் அப்பாவாகப் போகிறான். இந்த நேரத்தில்தான் பாக்கியத்தின் வாழ்க்கையில் விதி விளையாடியது.

வேலை எப்போது முடியும் என்று காத்திருந்தவன் போல வேலை முடிந்ததும் முதலாவதாக வெளியே வந்தவன் கணேஷ்தான். தனது பாக்கியத்தை எட்டு மணித்தியாலம் பிரிந்து வாழ்கிறேன் இது தேவைதானா என்ற மனச்சலிப்பில் விரைவாக சைக்கிளைச் செலுத்தினான். அவன் பின்னாலிருந்து அதி விரைவாக வந்த அம்புலன்ஸ் வண்டி ஒன்று கணேசுவின் உடலைப் பதம் பார்த்துவிட்டது. இதனையறிந்த பாக்கியத்தின் நிலை சொல்லவும் வேண்டுமா? குழறியடித்துக் கொண்டு நிறைமாதக்கர்ப்பிணியான அவள் ஆஸ்பத்திரிக்கு விரைந்தாள். அங்கு இறுதி மூச்சுடன் போராடிக் கொண்டிருந்த கணேஷ்

"நான் போகப்போறன் நீ என்ன செய்யப் போகிறாய் பாக்கியம்" கைகளைப் பற்றிக்கொண்டு கேட்டான் கணேஷ். "நான் உங்களை சாகவிடமாட்டன். இந்தப்பாவியை தனிய விட்டுட்டு போயிடாதையுங்கோ." தலையிலடித்துக் கதறினாள். பாக்கியம். "நான் உயிர் தப்பமாட்டன். உனக்காக இல்லாவிட்டாலும் இந்தக் குழந்தைகளுக்காக நீ மறுமணம் செய்துதான் ஆகவேணும்"

"அத்தான்" என்று அந்த ஆஸ்பத்திரிக் கட்டிடமே அதிரும் படி கூச்சலிட்டபடி கணேசுவின் வாயைத் தன் கரங்களால் பொத்தினாள் பாக்கியம். ஆஸ்பத்திரி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணமே இன்றி இருவரும் தம் துன்பங்களை பகிர்ந்து கொண்டனர். அங்கிருந்த டாக்டர், தாதிமாரும் கணேசுவின் நிலையை அறிந்திருந்தபடியால் மௌனமாக இருந்தார்கள்.

"நான் செத்தாலும் சாவேனே தவிர இன்னொருத்தனை........" சொல்ல விரும்பாதவளாக கணேசுவின் மடி மீது விழுந்து அழுதாள். "பாக்கியம்" என்று நெஞ்சைப்பிடித்தவன், இந்தப் பொல்லா உலகைவிட்டு நீங்கிவிட்டான். ஆண்டவனின் கருணையோ என்னவோ "கடைசித் தடைவையாவது பாக்கியம் தன் உயிரானவனுடன் உரையாடி விட்டான்.

விபத்து நடந்த இடத்திலேயே உயிரை விட்டிருந்தால் பாக்கியம் இந்த அளவிற்கு நிம்மதியாக இருந்திருக்க மாட்டாள். கணேசுவில் தவறில்லை என்பதாலும் அன்புலன்ஸ் இவனைத்தாக்கியதாலும் இருபத்தய்யாயிரம் ரூபா பணத்தை சுகாதாரத் திணைக்களம் நஷ்டயீடாக வழங்கியது. இந்தத் தொகை அவளுக்கு எந்த மூலைக்கு காணும்? ஆனாலும் கணேஷ் வேலை பார்த்த இடத்திலிருந்து ஒரு தொகைப்பணம் கிடைத்ததால் ஒருவாறு தாக்குப் பிடித்தாள்.



கணேஷ் இறந்ததை அறிந்த கணேசுவின் தாய், தந்தை சரி, பாக்கியம் வீட்டார் சரி எட்டியும் கூடப் பார்க்கவில்லை. கணேசுவின் சகோதரர் சதீஸ் என்பவர் தான் இதனை அறிந்த அன்றே வந்து கணேசுவின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டார். இப்படி ஒரு நிலை ஏற்படமுன்னரே சந்திக்காததையிட்டு மனம் வருந்தினார். கணேஷ் இறந்த பின் சதீஸ் அடிக்கடி பாக்கியம் வீட்டிற்கு வந்து போனான். காரணம் பாக்கியத்திற்கு ஆறுதல் சொல்லவோ, துணைக்கோ பாட்டியைத் தவிர ஒருவரும் இல்லாமையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஊர்ச்சனம் வெறு வாய்க்கு அவல் கிடைத்ததுபோல அவர்கள் இருவரையும் இணைத்துக் கதைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஒரு நாள் சதீஸ் வந்ததும் "நீங்கள் இனியிங்கை வாறதை நிற்பாட்டுங்கோ, இதுவரைக்கும் செய்த உதவியை நாங்கள் எண்டைக்கும் மறக்க மாட்டம்." சதீஸிற்கும் இந்தக் கதை காதில் விழுந்தமையால் "ஊர் எதையண்டாலும் சொல்லட்டும் உங்கள் மனச்சாட்சிக்கும் என்ரை மனச்சாட்சிக்கும் சரியாக நடந்தால் சரிதான்" கோபத்துடன் கூறினான் சதீஸ். "எது எப்படி இருந்தாலும் ஊருக்குப் பயந்துதான் வாழவேணும். அதோட இந்தத் தேவையில்லாத கதையள் என்ரை பிள்ளையளின்ரை வாழ்க்கையை வளர்ச்சியைப் பாழாக்கக்கூடாது. அதாலை நீங்கள் இஞ்சை வராமல் இருக்கிறது உங்களுக்கும் நல்லது எனக்கும் நல்லது" பாக்கியம் கூறிமுடித்தாள்.

யோசனையுடன் இருந்த சதீஸ் "நான் ஒண்டு சொல்றன் கோபிக்காமல் கேளுங்கோ" என்று பீடிகை போட்டான். "சொல்லுங்கோ" என்று விட்டு ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்தாள் பாக்கியம். தம்பியும் எங்களை விட்டுப்போய் ஒரு வருஷம் முடிஞ்சு போச்சுது. என்னுடைய உதவியையும் நிற்பாட்டினால் உங்கடை நிலையை கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ. அதோடை இந்தக் குழந்தையள் ஆர்? என்ரை தம்பியின்ரை பிள்ளையள் தானே. அதுகளுக்கு நான் அப்பாவாகினால் என்ன?" சதீஸ் கூறிமுடிக்கவில்லை பாக்கியம் வெந்து வெடிக்கத் தொடங்கி விட்டாள். "சீ.... நீங்களும் இந்த அர்த்தத்திலை தான் உதவியிருக்கிறியள், ஊர் எதையண்டாலும் சொல்லட்டும் எண்டு இருந்தன். ஆனால் உங்கடை மனசிலையும் இப்படியொரு கீழ்த்தனமான எண்ணம் வந்திட்டுது. உங்கடை உதவியும் வேண்டாம், என்ரை கண்ணிலை முழிக்கவும் வேண்டாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாக்கியம் என்னைப் புரியாமல் இவ்வளவும் பேசுகிறாய் நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேள்." என்று இரக்கத்துடன் கூறினான் சதீஸ். "நான் ஒன்றையும் கேட்கத் தயாரில்லை தயவு செய்து இந்த இடத்தை விட்டுப் போயிடுங்கோ. கத்தினாள் பாக்கியம். உண்மையாய் எங்கள் மேலை பாசமிருந்தால் ஒருத்தியின்ரை கையைப் பிடிச்சுக்கொண்டு வாங்கோ. வந்து உதவுங்கோ" என்று கூறியபடி உள்ளே சென்று விட்டாள்.

சதீசால் மேலும் அங்கு நிற்கமுடியவில்லை. வேளியேறும் சமயத்தில் பாட்டி எல்லாவற்றையும் உள்ளே கேட்டுக்கொண்டு இருந்துவிட்டு வெளியே வந்தாள் "பாட்டி பார்த்தியளே பாவம் எண்டுதான் பரிதாபப்பட்டு இந்த முடிவெடுத்தன். என்னை என்ன மாதிரி கேவலமாய் பேசியிட்டுது பாக்கியம்" கண்களில் வந்த கண்ணீரை மறைத்தவாறு கூறினான்.

"சதீஸ் தம்பி! நீ எடுத்த முடிவிலை ஒரு தவறும் இல்லை. கீழ்த்தரமான எண்ணமும் இல்லை. பாக்கியம் நடந்து கொண்டதிலும் எந்தவித தப்பும் இல்லை. என்று கூறியபடி முழுவதுமாக கூறிமுடிக்காமல் இடைநிறுத்தி அழுது தீர்த்தாள்.

பாட்டியே மீண்டும் "என்னமாதிரி ஒற்றுமையான குடும்பம், இரண்டுபேரும் ஒருத்தரிலை ஒருத்தர் உயிரையே வைச்சிருந்ததுகள். இப்படி ஒரு குடும்பத்தை என்ரை வாழ்க்கையிலை கண்டதோ கேட்டதோ இல்லைத் தம்பி. அப்படியிருக்க பாக்கியம் இன்னோரு மணம் செய்யச் சம்மதிக்குமோ?" பாட்டி கூறவும் "எது எப்படியெண்டாலும் நான் ஒரு கலியாணம் செய்யாமல் இந்த வாசற்படியை மிதிக்கமாட்டன். நான் வாறன்பாட்டி." என்றவாறு கிளம்பிவிட்டான் சதீஸ்.

சதீஸின் உதவியும் நின்றபடியால், குடும்பச் செலவுக்கும் பிள்ளைகளின் படிப்புச் செலவுக்குமென்று மிகவும் கஷ்டப்பட்டாள் பாக்கியம். பாட்டியும் தன்னாலான உதவிசெய்தும் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையிலேயே ஓடியது. ஒருநாள் பாட்டியிடம் பாக்கியம் வந்து "பாட்டி, பாட்டி நான் ஏதாவது கூலிவேலைக்குப் போனால் தான் என்ரை செல்வங்களை கண்கலங்காமல் வைத்திருக்கலாம். அத்தான் இருந்தால்......" என்று சொல்லிய பாக்கியத்தின் கண்களில் இருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்து ஓடியது. பாட்டிக்கு என்ன சொல்லுவது என்ன செய்வது என்று தெரியவில்லை. சிறிது யோசனை செய்துவிட்டு பாக்கியமே தொடர்ந்தாள்.

பாட்டி அத்தான்ரை சிநேகிதன் தயாளன் என்று சொல்லி, அவர் பெரிய பணக்காரர். இப்ப இங்க டவுனில் ஏகப்பட்ட கடைக்குச் சொந்தக்காரர். அதோடை அத்தானுக்கும் எங்களுக்கும் சின்ன வயதிலேயே நல்ல உதவி செய்தவர். நான் எந்த உதவி கேட்டாலும் மறுக்காமல் செய்வார். என்ற நம்பிக்கை இருக்கு. அந்தத் துணிவிலைதான் கேட்கப்போறன். நான் வேலைக்குப் போனால் பிள்ளையைப் பார்க்க வேண்டியது நீதான் பாட்டி.

"பாட்டி பாட்டி என்று வார்த்தைக்கு வார்த்தை சொன்னாள் பாக்கியம். இதைச் சொல்லும் போது பாக்கியத்தின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாக ஓடியது.

அதன்பின் தயாளனின் உதவியால் அவனது துணிக்கடை ஒன்றில் வேலைக்கு நின்றாள் பாக்கியம். ஏனையோரை விட பாக்கியத்திற்கு அதிக சம்பளம் கொடுப்பான் தயாளன். காலை ஒன்பது மணிக்குப் போனால் மாலை நான்கு மணி வீடு திரும்புவாள். இவ்வாறாக தயாளனின் தாராள குணத்தினால் பாக்கியத்தின் குடும்பம் எந்தக் கஸ்டமும் இன்றி ஓடியது.

06

பிள்ளைகளும் வளர்ந்து உயர் வகுப்பில் பிரசன்னாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் தரத்தில் பிரவீணாவும் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் பாட்டியும் இவர்களைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்து விட்டார். பிள்ளைகள் வளர்ந்தமையால் பாட்டியின் பிரிவு பாக்கியத்தை கூடியளவு பாதிக்கவில்லை. ஆனாலும் அவள் பிரிவை மீண்டும் மறக்கவும் முடியவில்லை. கணேசுவிற்குப் பிறகு தன்னில் பாசம் செலுத்தியவள் பாட்டி ஒருத்திதான் என்று அடிக்கடி எண்ணுவாள்.

ஆண்டாண்டாக ஓடி ஓடி ஓய்வொழிச்சலின்றி உழைத்ததன் பலனாக பிரசன்னாவை என்ஜினியராகவும் பிரவீணாவை டாக்டராகவும் ஆக்கிவிட்டாள். பிரசன்னா கடைசி வருடம் படித்துக்கொண்டிருந்தாள். ஒரு பெண்ணை கைபிடித்துக் கொண்டுதான் வருவேன் என்ற சதீசும் தான் வருத்தக்காறன் என்று எண்ணி திருமணம் செய்யாது இருந்தான். பாக்கியத்தின் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் ஒரு நாள் சதீஸ் பாக்கியத்தின் வீடு தேடி வந்தான். வந்தவன் பிள்ளைகளின் வளர்த்தியால் அவர்களை இனங்கண்டு கொள்ளவே முடியவில்லை. இருபது, இருபத்திரண்டு வருடங்களாகிவிட்டன அல்லவா? சதீஸ் எங்கிருக்கின்றான் என்பதை பாக்கியம் அறியவும் இல்லை, அறிய விரும்பவும் இல்லை.

நீண்ட நாளைக்கப்புறம் சதீசைக் கண்டமையால் உடனே அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. பின் தன்னை சமாளித்தவளாக "வாங்கோ இருங்கோ" என்று வரவேற்றாள். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆதலால் பிரசன்னா, பிரவீணா ஆகிய இருவரும் வீட்டில் நின்றார்கள். பிள்ளைகள் சதீசை யார் என அறிய ஆவலாக இருந்தார்கள். தந்தையின் புகைப்படத்தை வைத்து அப்பாமாதிரி கிட்டத்தட்ட இருக்கிறாரே என்று ஆச்சரியப்பட்டார்கள். "அப்பாவின் சொந்தக்காரரா அம்மா." என்று பிரவிணா தாயின் காதுக்குள் கேட்டாள், ஆனாலும் சதீசின் காதிலும் அது நன்றாகவே விழுந்தது. பிள்ளைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திசாலித்தனத்தை மனதிற்குள் மெய்ச்சிக்கொண்டான். இனியும் பாக்கியம் மௌனமாக இருக்க விரும்பவில்லை.

"உங்கள் அப்பாவின் அண்ணா இவர். சின்ன வயதிலை உங்களைத் தூக்கி வளர்த்துப் பல உதவிகளையும் செய்தவர். நானும் நீண்ட நாளைக்குப்பிறகு இப்பதான் பார்க்கிறன். அது தான் உங்களை உடனே அறிமுகப்படுத்தயில்லை" என்று கூறிவிட்டு தேனீரை பிளாஸ்க்கில் இருந்து ஊற்றிக்கொடுத்தாள். "பெரியப்பா ரீயைக் குடியுங்கோ" பிரசன்னா கூறினான். சதீசால் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. கணேசைத்தான் உரிச்சுப் படைச்சுப்பிறந்தான் என்றால் குரல்கூட அவனைப்போலவே இருக்கிறதே. சதீசின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. பாக்கியமும் இதைக் கவனிக்கத் தவறவில்லை. "பாட்டி..... " என்று இழுத்தான் சதீஸ். "பாவம் அது செய்த பாவம் நாங்கள் அவ வீட்டிற்கு வந்தது. எங்கடை பாரம் தாங்காமல் அந்த உத்தமியும் போய் சேர்ந்திட்டுது" சதீஸ் புரிந்துகொண்டுவிட்டான்.

நீண்ட நாளைக்கு பிறகு இப்படி ஒரு உறவு இருக்கு எண்டு தெரிய எவ்வளவு சந்தோஷமாய் இருக்குப் பெரியப்பா. இண்டைக்கு மத்தியானம் சாப்பிட்டுட்டுத்தான் போக வேணும் பெரியப்பா என்று குழந்தையைப்போல் கையைப்பிடித்துக் கெஞ்சினாள் பிரவீணா. உடன்பட்ட சதீசும் மதிய உணவை முடித்துக் கொண்டு கிளம்ப தயாரானான். பிரவீணாவும் விட்டபாடில்லை "பெரியப்பா எங்களுக்கு பெரியவையெண்டு ஒருத்தருமில்லை நீங்கள் இங்கை தங்குங்கோவன்" எங்களுக்கு ஒரு பெரிய ஆண் துணையாய் இருக்கும். சதீஸ் பாக்கியத்தைப் பார்த்தான். அந்தப் பார்வை இனி இங்கே தங்குவது பிரயோசனமோ? என்றது மாதிரி இருந்தது. ஆனாலும் சதீஸ் "பிரவீணாம்மா ஆண்துணை தேவை ஆனபோதே உங்கடை அம்மா அதை விரும்பயில்லை" இப்பதேவை இல்லாத போது நீங்கள் ஆசைப்படுறியள். ஒரு பெண்ணைக் கைபிடிச்சுத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவன் எண்டு போனன். பிறகுதான் எனக்கு இருதய நோய் இருக்கு எண்டு டொக்டர் சொன்னார். ஒரு பெண்ணின் வாழ்க்கையை வீணாக்கக்கூடாது எண்டு தனிக்கட்டையாய்க் காலத்தை செலுத்தியிட்டன்"

பாக்கியத்திற்கு சதீஸ் மீது மேலும் மதிப்பு உயர்ந்தது. சம்பிரதாயத்திற்காகக் கேட்டாள் பாக்கியம். "உங்களுக்கு ஆட்சேபனையில்லையெண்டால் தங்குங்கோ" சதீஸ் அதைக் காதிலை விழுத்தாமல் கிளம்ப ஆயத்தமானான். கிளம்பும் போது பிரவீணாவிற்கு ஒரு தங்கச் சங்கிலியை அன்பளிப்பாகக் கொடுத்தான். பிரவீணா வாங்கவில்லை. சிறுவயதிலிருந்தே பழகியபழக்கம்தான் அதுற்குக்காரணம். தாயைப்பார்த்தாள் பிரவீணா. பாக்கியமே கூறினாள். "ஆண்டவனே எண்டு இப்ப என்ரை பிள்ளையும் உழைக்கிறான், நானும் கடையை விட்டு இன்னும் நிக்கயில்லை" குறுக்கிட்டான் பிரசன்னா. பாக்கியம் கூறிய வார்த்தை பிரசன்னாவுக்குக் குற்ற உணர்வைத் தூண்டி இருக்கவேண்டும்.

"பெரியப்பா நாங்கள் அம்மாவை வேலையை விடுங்கோ எண்டு சொல்லுறம், அம்மா கேட்காவாம். நாங்கள் என்ன செய்யிறது?"

"சரிசரி பிரவீணாவையும் ஒரு நல்ல இடத்திலை செய்து குடுத்திட்டு அப்புறம் வேலையை விடுறன்" பாக்கியம் கூறவும், சதீஸ் பிடிவாதமாகச் சங்கிலியைக் கொடுத்துவிட்டுத்தான் சென்றான். அவனுக்கென்ன? மனைவியா? பிள்ளையா?

பிரசன்னாவும் பிரவீணாவும் வாலிபவயதை அடைந்த போதும் காதல் கீதல் என்ற எந்த வலையிலும் வீழவில்லை. பாக்கியத்தின் கண்டிப்பான வளர்ப்பே இதற்கு காரணம். இதனைவிடப் பார்ப்பவர்கள் ஒருமுறை பார்த்த மாத்திரத்திலேயே நல்ல பண்பான பிள்ளைகள் என்று சொல்லிவிடுவார்கள். பழகியும்விட்டாள் அவர்களது கெட்டித்தனமும் தெரிந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம் கடைக்குச் செல்லாத நாட்களில் பிரவீணா தயாளனின் கடைக்குச் சென்று தேவையானவற்றை வாங்கிவருவாள். தயாளன் மீது அங்கிள் அங்கிள் என்று வலுவிருப்பம் பிரவீணாவிற்கு.

பிரவீணாவுடன் தயாளனுடைய மகளும் படித்ததால் இருவிட்டாருக்கும் நல்ல நட்பு இருந்தது. தயாளனும் பாக்கியத்தின் வீட்டிற்கு தேவை ஏற்படும் பட்சத்தில் அல்லது ஏதாவது விஷேட நாட்களில் வந்து போவான். தயாளனின் மனைவிக்கும் பாக்கியத்தை நன்றாகப்பிடிக்கும். அவளின் பண்பே எல்லோரையும் கவர்ந்திழுத்தது.

கணவனைப் பிரிந்திருந்த நாளிலிருந்தே பாக்கியம் வெண்ணிற ஆடையும் நெற்றியில் விபூதியுடனும் தான் எந்த நேரமும் காட்சி கொடுப்பாள். ஏன்? இரு இளம் பிள்ளைகளின் தாயானபோதும் அவளின் முடியில் ஒரு நரை கிடையாது. பிரசன்னா, பிரவீணா மாத்திரம் என்ன? அழகில் குறைந்தவர்களா? தாய் தந்தையரைப்பார்த்தால் பிள்ளைகளின் அழகைச் சொல்லவும் வேண்டுமா?

பிள்ளைகளும் பாக்கியத்தில் மிகுந்த மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தார்கள். அவர்கள் அறிவு தெரிந்த நாளிலிருந்து தாயை மனம் நோகவைத்ததே கிடையாது. தாயைத் தெய்வமாகவே மனதில் பூஜித்தார்கள் எங்கு வெளியிற்சென்றாலும் தாயிடம் ஆசிர்வாதம் பெற்றே செல்வார்கள். அவ்வாறு இருந்த குடும்பத்தில் சூறாவளி ஒன்று வீச ஆரம்பித்தது.

## 07

கணேசின் தந்தை கணேசைக் கைகழுவிவிட்டாலும் கணேசில் பாசம் இருந்தது. பெற்றமனம் அல்லவா. கணேசைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி யாரிடமாவது விசாரித்துக் கொண்டே இருப்பார். அந்த நேரத்தில் தான் கணேசின் விபத்து நடந்தது. பாக்கியத்தை மணம் முடித்ததால் தான் தன்னுடைய மகனுக்கு இந்த நிலை ஏற்பட்டதெனக் கற்பனை பண்ணிக் கணேசின் தந்தை மிகவும் ஆத்திரத்தில் இருந்தார்.

தொடர்ந்தும் பாக்கியத்தின் குடும்பத்தைப்பற்றி அறிந்த வண்ணம் இருந்தார். தயாளனின் உதவியாலும் பிரசன்னா வேலை பார்த்ததாலும் பாய்க்கியத்தின் குடும்பம் ஓகோ என்றிருந்தது.

ஏன்? பிரவீணாவிற்குக் கூட எஞ்சினியர் மாப்பிள்ளை ஒருவருடைய பேச்சுக்கால் வந்தது. எஞ்சினியர் என்ற உடனே பாக்கியம் சம்மதிக்கவில்லை. தீரவிசாரித்ததில் நல்ல குடும்பமாக இருந்தமையால் பிரவீணாவின் படிப்பு முடிந்ததும் கல்யாணம் என்று வெற்றிலை பாக்கு மாற்றிவிட்டார்கள்.

ஒரு விதவையின் வாழ்க்கை இவ்வாறு நன்றாக இருக்கிறதே என்று எரிச்சல்பட்ட சிலர் தயாளன் ஒரு காரணமும் இல்லாமல் இவ்வாறு உதவி எல்லாம் செய்கின்றானா? என்று கதைகளைக்கட்டி விட்டார்கள். தயாளனின் மனைவிக்கும் இக்கதை எட்டியபோது அவளுடைய சிந்தனையை துளைக்கத் தொடங்கியது. உதவிகள் செய்யும்போதும் தயாளன் மனைவிக்குச் சொல்லித்தான் செய்வான். எவ்வளவு தான் செல்வம் கொட்டிக் கிடந்தாலும் சும்மா ஒருத்தருக்கு உதவி செய்ய முன்வருவார்களா? எவ்வாறு தான் காலம் கடந்து வயது சென்றாலும் தன் கணவன் இன்னொருத்தியுடன் அதுவும் இருபது இருப்பத்திரண்டு வருடமாக ஒன்றாய் வேலைபார்த்த ஒருத்தியுடன் தொடர்பு என்று அறிந்தால் எப்படி மனம் தாங்கிக் கொள்ளமுடியும்.

ஒரு நாள் கணவனிடம் "என்னங்க சும்மா தேவை இல்லாமல் பாக்கியத்தின் வீட்டுக்கு போகாதையுங்க" ஊர்க்கதைகளை நம்பியவளாகவும் நம்பாதவளாகவுமாகக் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தாள். தயாளனுக்கு விளங்கவில்லை. ஆனாலும்

"ஏன் சரசு திடீரென்று இப்படிச் சொல்லுறாய்? உனக்கும் பாக்கியத்திற்கும் ஏதும் மனஸ்தாபமா?" கள்ளம் கபடம் இல்லாத உள்ளம் இவ்வாறு கேட்டது.

"என்னோடை ஒரு மனஸ்தாபமும் இல்லை. ஊர் தான் சும்மா வேறு விதமாய்க் கதைக்குது?

தயாளனுக்கு இப்போதும் விளங்காமல் இருக்குமா? சரசு! கணேசுவும் பாக்கியமும் என்னூரவர்கள், என்னோடை படிச்சவர்கள். அப்ப சரியான ஏழைகள், நான் அப்பவே கணேசுவுக்கு அவ்வப்போது நிறைய உதவிகள் செய்திருக்கிறன். என் நண்பனின் குழந்தையள் எண்டுதான் உதவுகிறன். அதோடை,

நல்லாயிருக்கிறவையைப் பார்த்து ஊர் ஏதாவது சொல்லிக்கொண்டு தான் இருக்கும். பிள்ளையளும் வளர்ந்திட்டுதுகள். ஊர் இப்பதான் உந்தக்கதையை கதைக்குது. இவ்வளவு காலமும் ஒண்டும் கதைக்காத ஊர் இப்ப கதைக்குதெண்டால் என்ன அர்த்தம்? தயாளன் கூறவும்

"ஏன் முன்னமே அவளின்ரை கணவரின் தமையனோடை எண்டு இந்த ஊர் கதைச்சது தானே"

வாய் வரை வந்ததைக் கூறாமலே மனதில் பூட்டிக் கொண்டாள்.

ஒரு நாள் இக்கதைகளை மெய்ப்பிப்பது போல கணேசின் தந்தை சரசுவின் வீடு தேடி வந்தார். சரசுவும் புதியவர் என்பதால்

"இவர் இல்லை கடைக்குப் போய்விட்டார். அங்கை சந்திக்கலாம்" என்று உள்ளே திரும்பினாள். திரும்பியவளை

"நில்லம்மா நான் உன்னோடைதான் கதைக்க வந்தனான்" சரசு நின்றாள், "நீங்கள்..............?" கிராமத்துப்பாணி அவரிலே நன்கு தெரிந்தது.

"நான் கணேசின்ரை ஐயா, உங்கடை கடையிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்யிற பாக்கியத்தின்ரை மாமன்" என்று வேண்டா வெறுப்பாகக் கூறினார். அவரின் வெறுப்பு அவர்கள் வீட்டைவிட்டு ஓடி வந்ததால் என்று நினைத்தாள் சரசு. ஆனால் அவரோ பாக்கியத்தைப்பற்றி இல்லாத பொல்லாத கதைகள் கூறிச் சரசுவை நம்பவைத்து விட்டார்.

"அம்மா, நான் சொல்லுறதெல்லாம் உண்மை. நீயோ நல்லாய் யோசி, உன்னுடைய புருஷன் ஒரு காரணமும் இல்லாமல் ஒரு விதவைக் குடும்பத்திற்கு உதவுறதென்றால்........" இழுத்தார் கணேசின் தந்தை. சரசுவிற்கு தலை சுற்றியது. "எதைப் பொய் என்று ஒதுக்குவோம் என்று நினைக்கிறோமோ அதைப்பற்றியே கதைகள் வந்து கொண்டிருக்கின்றன." கடவுளே என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டாள்.

மீண்டும் கணேசின் தந்தையே தொடர்ந்தார். அப்படிப்பட்ட இடத்திலை நீங்களும் சம்மந்தம் செய்யப் போறியளாமே"?

இவ்வார்த்தையைக் கேட்டதும் சரசுவின் உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. "எனக்கு இதில் இஸ்டம் இல்லை. இவர்தான் ஒரே பிடிவாதமாய் இருக்கிறார். இந்தமுடிவு எங்களை விட்டு ஒருதருக்கும் தெரியாது" சரசு கூறினாள்.

இரண்டும் இரண்டும் நாலு என்று, தான் கணக்குப் போட்டது சரியென்று ஊகித்துக் கொண்டார் கணேசின் தந்தை. "இல்லை இவ்வளவு நெருக்கமாய்ப் பழகிற குடும்பத்தைப்பற்றி யாராவது இணைச்சுக் கதைப்பினம் தானே. சரி நான் வாறன்.

எதோ சொல்லுறத சொல்லியிட்டன் ஆவதும் பெண்ணாலை அழிவதும் பெண்ணாலை எண்டு சும்மா சொல்லயில்லை" என்றவாறு புறப்பட்டுவிட்டார். பாக்கியத்திற்கோ இந்தக்கதை காதிலும் எட்டவில்லை. அதனால் அவள் பழைய ஞாபகங்களில் மூழ்கி வழமைபோல் வேலையால் திரும்பிக் கொண்டிருந்தாள். காலில் ஏதோ ஒன்று குத்தத்தான் தன் நினைவிலிருந்து திரும்பினாள். முள்ளை எடுத்து ஒரு புறமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுவிட்டு நடக்கத் தொடங்கினாள். எல்லாச் சம்பவமும் இப்போது நடந்தது போல் இருந்தது. பழைய நினைவுகள் உடம்பிலும் மனதிலும் ஒரு புதுத்தெம்பை உண்டாக்கின.

## 08

சமீபத்தில் தயாளன் குடும்பத்திற்கும் தன்னுடன் சம்பந்தம் வைக்க விருப்பம் இருப்பதை அறிந்தாள். ஆனாலும் தன் விரலுக்குத்தக்க வீக்கம் தான் இருக்கவேண்டும் என்பதால் இச்சம்மந்தத்தை அவ்வளவாக விரும்பவில்லை. ஆனால் பிரசன்னாவிற்கு அந்தச்சம்மந்தத்தில் இஷ்டம் இருந்தது. வசதியான குடும்பம் என்றொரு காரணமாக இருந்தாலும் நல்ல குணமான குடும்பம் என்பதுதான் முதன்மைக்காரணமாக இருந்தது. விருப்பத்தை தன் தாயிடம் தெரிவித்தான். ஆனால் தாய் மறுப்புத்தெரிவித்தது பிரசன்னாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. "ஏனம்மா" என்று கேட்கத்தைரியம் இல்லாததால் மௌனமாக இருந்தான்.

தயாளன் குடும்பத்திற்கும் பாக்கியத்தின் மறுப்பு பிரசன்னா மூலம் தெரிந்துவிட்டது. தற்செயலாகத் தயாளனின் மகள் பைரவி பிரசன்னாவை சந்திந்தபோது பிரசன்னா தான் தன்னை மறுக்கிறான் என்று நினைத்து, மறுபக்கம் முகத்தைத் திருப்பியது, பிரசன்னாவிற்கு ஒரு மாதிரியாக இருந்தது. "என்ன பைரவி ஒருமாதிரி இருக்கிறீர் ஏதாவது வீட்டிலை பிரச்சனையே" "வீட்டிலை ஒண்டுமில்லை" என்று மீண்டும் அவனைப் பார்த்து ஒரு முறைப்பு முறைத்து விட்டு மறுபக்கம் திரும்பிக் கொண்டாள். "முறைப்பைப் பார்த்தால் தன்னிடம் தான் ஏதும் கோபமோ? அவ்வாறிருக்காது. ஏனென்றால் கோபிக்கத்தக்கதாகத் தான் ஒருபோதும் நடந்து கொள்ளவில்லையே? பிறகேன் உதுடன் கதை" என்று நினைத்தவாறு "நான் வாறன் பைரவி."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நடக்கத் தொடங்கினான். "நில்லுங்கோ" என்று அதட்டினாள் பைரவி. திரும்பிப்பார்த்து விட்டு, மீண்டும் நடக்கத் தொடங்கினான் பிரசன்னா.

"உங்களைத்தான் பிரசன்னா நில்லுங்க" என்றவாறு அருகில் வந்தவள், கண்ணைக் கசக்கி அழத் தொடங்கிவிட்டாள்.

"என்ன பைரவி, நடுரோட்டிலை........... சீ.......... என்ன நடந்தது? சொல்லிப் போட்டு அழும். அல்லது அழுதுபோட்டு சொல்லும். உம்முடைய அழுகை என்னத்துக் கெண்டு என்னாலை ஊகிக்க முடியயில்லை.

"ப்ளீஸ் பைரவி"

"என்னிலை என்ன குறையைக் கண்டீங்கள். பணம் இல்லையா? அழகில்லையா? அல்லது குணம் தான் இல்லையா? எனக்கே தெரியாமல் என்னை உங்களிடம் இழந்துவிட்டன் பிரசன்னா. கல்யாணந்தான் நடக்கப்போகிறதெண்டு பேசாமல் இருந்தன். ஆனால் இப்ப"

கேவிக் கேவி அழந்தொடங்கினாள் பைரவி. "பைரவி என்ன சின்னப்பிள்ளையள் மாதிரி எனக்கு விருப்பமில்லை எண்டு யார் சொன்னது?

"அப்ப இந்தக் கல்யாணத்தை வெறுக்கிறது?"

"அம்மா" என்று ஒரு சொல்லில் கூறினான் பிரசன்னா.

"உங்கடை அம்மா மறுக்கிறதுக்கு காரணம்"?

"பணம் என்றான் பிரசன்னா."

"நோ...... ஒருக்காலும் இருக்க முடியாது" கத்தினாள் பைரவி.

"எனக்கு தெரியும். என்ரை வாயாலை எப்பிடிச் சொல்லுறது"? குமுறினாள் பைரவி.

"நீர் என்ன சொல்லுறீர்" ஆச்சரியப்பட்டான் பிரசன்னா.

"என்னுடைய டாடிக்கும் உங்கடை அம்மாவுக்கும்........" பதற்றப்பட்டுக் கூறியவள் இழுத்தவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏதோ தொடர்பெண்டு கதைக்கினம். இவ்வளவு நாளும் பொய்யெண்டு நினைச்சன். இப்ப உண்மை போல இருக்கு. அதுதான் உங்கடையம்மா இந்தக் கல்யாணத்துக்கு மறுக்கிறா" மின்னல் ஒன்று தாக்கியதோ.

பிரசன்னாவின் கரம் பட்டுப் பைரவியின் கன்னம் பழுத்துவிட்டது. இதனைச்சற்றும் எதிர்பாராத பைரவி நிலைகுலைந்து போனாள்.

பிரசன்னா மேல் கோபம் வரவில்லை மாறாக பரிதாபம் தான் வந்தது. அவனுக்கோ உள்மனம் கொதித்த வண்ணம் இருந்தது. "பைரவி என்னாலை தாங்க முடியயில்லை. இனி அம்மாவின்ரை முகத்திலை எப்பிடி முழிப்பன். நித்திரைவிட்டு எழுந்ததும் ஒன்றிலுமே முழிக்காமல் என்னுடைய அம்மாவின் முகத்தில் முழிப்பேனே? ஆண்டவா உனக்கு முதல் என்னுடைய அம்மாவைத் தெய்வமாகப் பூசிப்பேனே, அதுக்கு இதுவா தண்டனை?"

வீட்டிற்குச் சென்றவன், சாப்பிடவும் பிடிக்காமல் தனது அறையைப் பூட்டிவிட்டு கட்டிலில் தொப்பெனவிழுந்தான். பாக்கியமும் பிள்ளைகள் இருவரையும் பிரிந்து உண்பதே கிடையாது. பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது கூட ஒரநேரத்தை குறிப்பிட்டு அந்நேரத்திலேயே சாப்பிடுவார்கள். ஒருவருக்குச் சுகயீனம் என்றால் கூட ஒரு பிஸ்கற் ஆவது மற்றவர்களுடன் சேர்ந்து சாப்பிடுவத வழக்கம். அவ்வாறிருக்கப் பிரசன்னா அறையை திறவாததால் பிரவீணாவும் பாக்கியமும் பட்டினிகிடக்க வேண்டியிருந்தது.

பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை. பிரசன்னா இவ்வாறு ஒரு நாளும் நடந்து கொண்டதில்லையே. தானோ பிரவீணாவோ ஒரு குற்றமும் செய்யவும் இல்லை. அப்படியென்றால் பிரசன்னா தான், ஏதோ தவறு விட்டுவிட்டு அதனை மறைக்க இவ்வாறு நடந்து கொள்கிறான் என்று நினைத்துக் கொண்டாள் பாக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் விடயம் தெரிந்து பிரவீணாவும் தனது அறையைப் பூட்டிக்கொண்டு உள்ளே படுத்துவிட்டாள். மறுநாளும் எல்லோரும் பட்டினி. இனிமேலும் பாக்கியத்தால் மௌனமாக இருக்கமுடியவில்லை. பெற்றவயிறு அழுதது, கொதித்தது.

"பிரவீணா, பிரசன்னா"

என்று வீடு அதிரும்படி கத்தினாள், கத்திய கத்தலில் இருவரது அறைக்கதவுகளும் திறந்து கொண்டன. தலை கவிழ்ந்தபடியே இருவரும் தத்தமது அறைகளிலிருந்து வெளியே வந்தார்கள்.

"என்ன நடந்திட்டுது என்று இந்தக்கூத்து" ஆவேசத்துடன் பாக்கியம் அலறினாள்.

தாய்க்கு முன் வாய்திறந்து கூறமுடியாமல் மனதிற்குள்ளேயே புழுங்கிக் கொண்டார்கள். அவ்வளவு நம்பிக்கை பாக்கியத்தில்.

கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போலப் பக்கத்து வீட்டு அன்ரி இந்தக்கத்தலில் ஓடி வந்தாள்.

"அன்ரி"

என்று பிரவீணா ஓடிச்சென்று அவனின் தோள் மேல் விழுந்து அழுதாள்.

பிரசன்னா எங்கோ வெறித்துப் பார்த்த வண்ணம் நின்றான். ஆண்பிள்ளை அழுவதில்லை என்பதாலோ அல்லது அழக்கூடாது என்பதற்காகவோ என்னவோ மௌனமாக நின்றான். பக்கத்துவீட்டு அன்ரி பிரவீணாவை மெதுவாகத்தட்டிக்கொடுத்து ஆறுதல் படுத்திவிட்டு

"பாக்கியம் இஞ்சைவா, என்னமாதிரி இருந்த குடும்பத்திலை இண்டைக்கு இந்தக்கூத்து."

என்று கூறியவாறு பாக்கியத்தை வீட்டுப்பின்பக்கம் அழைத்துச் சென்றாள்.

"அக்கா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று விம்மி விம்மி அழுதவாறு பின் தொடர்ந்தாள் பாக்கியம்.

"அக்கா இந்தமாதிரி ஒருநாளும் பிள்ளையள் நடந்துகொண்டதில்லை. அதனாலை தானக்கா என்னாலை தாங்கமுடியயில்லை. ஏன் இப்படி நடக்குதுகள்?"

என்று தன் தலையில் இரண்டு கைகளாலும் அடித்துக் கொண்டாள்.

"விடு பாக்கியம்"

என்றவாறு பாக்கியத்தின் கைகளைப்பற்றிக் கொண்டாள்.

"உனக்கென்னண்டு தெரியவேணும் அவ்வளவு தானே?"

"அக்கா"

பாக்கியம் ஆச்சரியப்பட்டாள்.

"உங்களுக்கு தெரிந்த அளவு....... எனக்கு" என்று இழுத்தாள்.

"கொஞ்சம் உன்னுடைய மனதைத் திடப்படுத்திக் கொள்ளு."

பாக்கியத்தால் பொறுமையாக இருக்கமுடியவில்லை.

"சொல்லுங்கோ அக்கா சொல்லுங்கோ. தாங்க இயலாததையே தாங்கியிட்டன். என்னண்டு சொல்லுங்கோ அக்கா."

என்றவாறு அன்ரியின் கரங்களைப் பற்றிக்கொண்டாள்.

"வந்து..... உன்னையும் உன்னுடைய முதலாளி தயாளனையும் இணைச்சு ஊர் கதைக்கத் தொடங்கியிட்டுது. இப்ப உன்ரை பிள்ளைகளினுடைய காதிலையும் விழுந்திட்டுது"

தயங்கித்தயங்கி ஒருவாறு கூறிமுடித்துவிட்டாள் அன்ரி.

"அக்கா, இதை நீங்கள் நம்புறீங்களா? என்று அலறியவண்ணம் மயக்கமுற்று நிலத்தில் சரிந்துவிட்டாள்.

"பாக்கியம், உனக்கென்னம்மா?" என்றவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாகச்சரித்து தரையில் படுத்திவிட்டு தண்ணீர் எடுக்க உள்ளே ஓடிச்சென்றாள். பிரவீணாவும் பிரசன்னாவும் நின்ற இடத்திலேயே நின்றார்கள்.

''பிள்ளையள் கொம்மா மயங்கிவிழுந்திட்டா ஓடிவாங்கோ''

"அம்மா" என்று அலறியவண்ணம் இருவரும் தாயின் அருகே ஓடிவந்தனர்.

''அம்மா, அம்மா கண்ணைத்திறந்து பாருங்கோ'' கதறினார்கள் பிரவீணாவும் பிரசன்னாவும். தண்ணீரை முகத்தில் தெளித்தாள் அன்ரி.

பிள்ளையள் அம்மாவைத் தூக்கி உள்ளை படுத்துவம், சாதாரண மயக்கம் தான், நீங்கள் இன்னமும் அவளைப் புரியாமல் இருக்கிறியளே? உங்கடை சந்தேகம் உங்களைவிட்டு அவளைப் பிரிக்கப்போகுது. அவ்வளவுதான் நான் சொல்லுவன்'' தன்மனதில் பட்டதை நாசூக்காகக் கூறினாள் அன்ரி.

## 09

சிறிது நேரத்தின் பின் பாக்கியம் சுயநினைவிற்கு வந்தாள். பிள்ளைகள் கைகட்டி தலைகுனிந்து கண்ணீர் பெருக நின்றனர். குலுங்கி குலுங்கி வாய்விட்டு அழத்தொடங்கினாள், தாய் படும் துயரை கண்கொண்டு பார்க்க முடியாமலும், அவளைத் தேற்றும் வழி தெரியாமலும் தவித்த பிள்ளைகள் சரசு அன்ரி மூலம் அதனைச் சாதிக்கும் நப்பாசையோடு மெல்ல வெளியில் வந்தனர். இந்த நிலையில் கூட என் பிள்ளைகள் என்னைவிட்டு விலகிப் போகிறார்களே! அந்தளவிற்கு நான் வேண்டாத பாவியாகி விட்டேனே''

பிரசன்னாவும் பிரவீணாவும் தயாளன் வீட்டிற்குத் தான் சென்றிருந்தார்கள் என்று எப்படி அவளால் தெரிந்து கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்? பிள்ளைகள் தனக்கு அடித்திருந்தாலும் பொறுத்திருப்பாள். ஆனால் அவளைச் சந்தேகப்பட்டு விட்டார்களே. அதனை எவ்வாறு பொறுத்துக் கொள்ளமுடியும், பிள்ளைகளும் இனி தன்துணை தேவையில்லையென்று நினைத்துவிட்டார்களா? இனிமேலும் அவர்களின் முகத்தில் விழிக்கும் தைரியம் பாக்கியத்திற்கு இல்லை. குற்றம் செய்த மனம் குறுகுறுக்கும் என்பார்கள். இங்கே குற்றமில்லாத மனமல்லவா குறுகுறுக்கிறது. இப்படிப்பட்ட என்னைப்புரிந்து கொள்ளாத பிள்ளைகளின் முகத்தில் விழிப்பதை விட இறப்பதே மேல்.

"அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வளர்த்த என்னை......"

நினைக்க நினைக்க நெஞ்சம் குமுறத் தொடங்கியது. எரிமலையாகாகக் கொதித்தது. ஓடிச்சென்று தனது சூட்கேசைத் திறந்தாள். தனது உடம்பின் வலிதெரியாமல் மயங்கி, உறக்கம் இல்லாமல் தவிக்கும் நாட்களில் அவளுக்கு உறக்கத்தைத் தருவது மாத்திரை ஒன்று தான். அது அவளுக்கு இன்றியமையாதது ஆகையால் நிறையவே வாங்கி வைத்திருந்தாள். பிள்ளைகளின் முகத்தில் விழிக்கக்கூடாது என்ற எண்ணமே அவளின் மனதில் வேரூன்றிவிட்டது. மாத்திரை டப்பாவைத் திறந்து ஒவ்வொன்றாகப் போடாமல் நான்கு ஐந்தாகப் போட்டுமுடித்தாள். இரண்டு நாள் பட்டினி, வெறும் வயிறு ஆனதால் மாத்திரை உடனே வேலைசெய்யத் தொடங்கியது. தட்டுத்தடுமாறித் தனது கணவனின் புகைப்படத்தை எடுத்தாள். புகைப்படத்தில் மாறி மாறி முத்தமிட்டு விட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். கணேசுவின் முகத்தை உற்று நோக்கினாள். அங்கே கணேசுவின் மென்னகை புன்னகையாய்க் காட்சி கொடுத்தது.

"நீங்கள் ஏன் சிரிக்கிறியள் எண்டு எனக்குத் தெரியும். நானும் உங்களிட்டை வரப்போறன் எண்ட சந்தோசம்தானே அத்தான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைத்தியம் பிடித்தவள் போல் கணேசுவுடன் பேசினாள், சிரித்தாள்.

"பார்த்தீர்களா, உங்கள் பிள்ளைகளை, என்னவோ என்று நினைத்தேன். அதுகளுக்கு இறக்கை முளைச்சிட்டுது. பறந்து போக ஆசைப்படுதுகள், திறந்துவிடுவதுதானே நியாயம்."

கணேசுவின் புகைப்படத்தை நெஞ்சில் சுமந்தவண்ணம் கட்டிலில் மெதுவாகச் சரிந்தாள்.

இங்கே பாக்கியத்தின் நிலை இவ்வாறிருக்க பிரசன்னா, பிரவீணா இருவரும் தயாளன் வீட்டிற்குச் சென்று சரஸ்வதி அன்ரியிடம் நடந்தவற்றைச் சொல்லி, "அன்ரி! அம்மா மனதை ஆற்ற நீங்கள்தான் உதவவேண்டும்."

என்று ஒரே குரலில் மன்றாடினார்கள். பிரசன்னாவும், பிரவீணாவும். "அன்ரி அம்மாவின் முகத்திலை இனி எப்படி முழிக்கிறது" சரசுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

தயாளன் பைரவியுடன் வெளியே சென்றிருந்தான். கோலிங்பெல் அடித்தது. சரசு ஓடிச்சென்று கதவைத் திறந்தாள். அங்கே கணேசுவின் தந்தை நின்றிருந்தார்.

"வாங்கோ" என்று ஒரு சொல்லில் வரவேற்றாள் சரசு, அவளின் முகம் கறுத்திருந்ததை கவனிக்கத்தவறவில்லை கணேசுவின் தந்தை. உள்ளே வந்தவர், பிரசன்னாவையும் பிரவீணாவையும் வைத்த கண் வாங்காமல் பார்த்தார். முன்பின் பார்த்ததில்லை. ஆனால் அவருக்கு எங்கையோ அவர்களைப் பார்த்தது மாதிரி இருந்தது. இருவர் முகத்திலும் சோகரேகை படர்ந்திருந்தது.

"யார் பிள்ளை இவையள்? ஒருநாளும் நான் வரயுக்கை காணுறதில்லை"

பிரசன்னாவிற்கும் பிரவீணாவிற்கும் வந்தவரும் புதியவராக காட்சி தந்தார்.

"இவையள்......" என்று இழுத்த சரசு "பாக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசுவின் பிள்ளைகள்'' என்று முடித்தாள். சரசு கூறிய வார்த்தையைக் கேட்டதும் ஓடிச்சென்று அவர்களின் காலில் விழுந்தார். இருவரும் விலகியவாறு

"அன்றி இவர்" பிரசன்னா இழுத்தான்

"உங்கடை தாத்தா, கணேசினுடைய தந்தையார்'' அறிமுகம் செய்தவள் ஒரு கணம் குழம்பினாள். ஏன் இவர் பிள்ளைகளினுடைய காலிலை விழுகிறார்'' சரசுவிற்கு குழப்பத்திற்கு மேல் குழப்பமாக இருந்தது.

"பிள்ளையள் இந்தப்பாவியை மன்னியுங்கோ, உங்கள் அம்மா பாக்கியம் பற்றி ஊர் கதைகட்டக் காரணமாயிருந்த பாவி நான் தான். கொப்பனைப்பிரிஞ்ச வேதனையை என்னாலை தாங்க முடியயில்லை. என்ரை சொந்த மருமகள் தான் பாக்கியம். அவவின்ரை குடும்பத்துப்பகை தான் இவ்வளவுக்கும் காரணம்.

''என் குடும்பத்திற்கும் உங்கள் அம்மப்பா குடும்பத்திற்கும் இரண்டு சந்ததியாக இருந்துவந்த வைதித்த பகையால்தான் நேற்று வரை மிருகமாக நடந்துவிட்டன். அதனால் என் பிள்ளை தான் விரும்பியவளுடன் வாழவிடாமல் ஊரைவிட்டே ஓடவைச்சன். ஓடியதால் ஆவேசப்பட்டன். பல கனவுகளோடு நான் காத்து வளர்த்த பிள்ளையை அபகரித்தவள். பின்னர் அவன் சாகக் காரணமான சண்டாளி எண்டெல்லாம் பாக்கியம் மீது நான் கொண்ட ஆவேசம் அவளிற்கு நான் அநியாயம் செய்ய தூண்டி வந்திருக்கிறது. அதிலையொண்டுதான் நான் அவளை பழிவாங்கிறதுக்காகக் கட்டிப்பரப்பின கட்டுக்கதை.

ஒரு நாளும் வாய் திறக்காத என்ரை மனிசிக்கிழவி இண்டைக்கு ஆவேசமாக வாயைத்திறந்து இதையெல்லாம் கிளறிக்கொட்டிச் சன்னதமாடினதாலைதான் என்ரை கண் திறந்தது பிள்ளையள். 'கெடுவான் கேடு நினைப்பான்' எண்டு சொல்லுவினம் அப்படித்தான் நான் பாக்கியத்திற்கு கேடு நினைக்க நினைக்க என் பிள்ளையளின்ரை வாழ்வெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொசுங்கிப் பொசுங்கி சீரழிஞ்சு போச்சு. நான் பாவி. என்னை மன்னியுங்கோ குஞ்சுகள்.

என்மருமகள் பாக்கியம் பத்தரைமாற்றுத்தங்கம் பிள்ளையள். அந்த தெய்வத்தைப்பற்றி இந்த அம்மாவிட்டைக் கூட இல்லாத பொல்லாததெல்லாம் அள்ளிவைச்சிட்டன்"

பிரசன்னாவும் பிரவீணாவும் தங்கள் தலையிலேயே அடித்துக் கொண்டார்கள்.

"பிள்ளையள் வாங்கோ, மயக்கம் எண்டு சொல்லியிட்டு இப்படி நிண்டால்"

சரசுவோ அவசரப்படுத்தினாள்,

"மயக்கமோ பாக்கியத்திற்கு" கேள்வி கேட்டவருக்கு

"முதல்லை பாக்கியம் வீட்டுக்குப்போவம் பிறகு எல்லாம் கதைக்கலாம்"

மீண்டும் சரசுவே அவசரப்படுத்தினாள். சரசுவின் மனம் ஏனோ கலவரப்பட்டவண்ணம் இருந்தது. உண்மையை அறிந்த பிரவீணா ஒரு பையில் பூக்களைப் பறித்துக்கொண்டிருந்தாள்.

"கொம்மா மயங்கிக் கிடக்கிறாவாம் பிள்ளை. நீ பூ ஆயுறாய்"

கணேசுவின் தந்தையே பிரவீணாவைப்பார்த்து இவ்வாறு கேட்டார்.

"தாத்தா எங்களுடைய அம்மா ஒரு தெய்வம் என்று எப்பவோ தெரியும். உங்கடை கதை, ஊர்க்கதைகளாலை அவவையும் சாதாரண மனிசி ஆக்கி நினைச்ச பாவத்திற்கு இந்த மலர்களை அவவின்ரை பாதத்திலை செலுத்தி மன்னிப்புக் கேட்டால்தான் எங்கடை பாவம் நீங்கும்."



இவர்கள் கேற்றடிக்கு வரவும் தயாளனும் பைரவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவும் சரியாக இருந்தது. விடயத்தை அறிந்ததும் அவர்கள் வந்த காரே இவர்களையும் சுமந்து கொண்டு பாக்கியம் வீட்டிற்குப் பறந்தது.

பாக்கியத்தின் நிலை மிகவும் மோசமாகிவிட்டது. கார் வந்து நின்ற சத்தமே பாக்கியத்தின் காதிலை விழவில்லை.

"அம்மா" என்ற பிரசன்னாவினதும் பிரவீணாவினதும் அலறல் மட்டுமே காதில் விழுந்தது. மயக்கம் தெளிந்திருந்ததைக் கண்ட பின்பே புறப்பட்டுச் சென்றார்கள். மீண்டும் மயங்கிய நிலையைக்கண்டதும் பதறிப் போய்விட்டார்கள். அருகே ஓடிவந்த பிரவீணா தாயின் கரங்களைப் பற்றியவாறு

"அம்மா எங்களை மன்னிச்சிடுங்கோ. ஆர் ஆரைச் சந்தேகப்படுறது என்ற விவஸ்தையே இல்லாமல்........"

கூறவந்த வார்த்தையைக் கூறவிடாது விம்மல் தடுக்க கண்ணீர் ஆறாக ஓடியது. கையைப்பற்றிக் கொண்டிருந்த பிரவீணா திடுக்கிட்டாள். பிடித்திருந்த கையின் நாடித்துடிப்புக் குறைந்து கொண்டே போனது.

"அண்ணா! அம்மா எங்களை விட்டிட்டு போகப்போறா" கத்தினாள் பிரவீணா.

நாடித்துடிப்பை பார்த்த பிரசன்னா அம்மா எங்கள் தெய்வமே, எங்களை அனாதைகளாக விட்டிட்டுபோக எப்படி அம்மா மனம் வந்தது? அலறினான்.

அதிர்ச்சியால் ஏற்பட்ட சாவு என்றிருந்தவர்களின் கண்ணில் தாய்பாவிக்கும் மருந்து டப்பா தென்பட்டது. எடுத்துப்பார்த்தாள் பிரவீணா. அது தாய் பாவிக்கும் தூக்கமாத்திரை டப்பா. டப்பாவிற்குள் ஒன்றுகூட மிச்சம் மீதி இல்லை, டப்பாவைப் பார்த்ததும் சுற்றிநின்ற எல்லோரும் கலக்க மடைந்தார்கள்.

"பாக்கியம் என்னை மன்னிச்சிடம்மா" கணேசுவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை பாக்கியத்தின் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டார். சரசுவும் தயாளனும் பாக்கியத்திற்கு அருகில் வந்தார்கள். "பாக்கியம் நாங்களும் உன்னைத்தப்பாக எடைபோட்டிட்டம். எல்லாரையும் மன்னிச்சிடம்மா." சரசு கூறியவறு பாக்கியத்தின் கைகளை தன் கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

நிமிர்ந்து நோக்கிய பாக்கியம் தனது பிள்ளைகளின் கைகளைத் தூக்கமுடியாமல் தூக்கி சரசுவின் கைகளின் வைத்தாள்.

"பாக்கியம்! இரண்டு பேரும் எங்களுடைய பிள்ளையள். நீ தான் அவசரப்பட்டிட்டாய் பாக்கியம்."

"அவள் ஒரு உத்தமி அம்மா. பழிச்சொல்லைத் தாங்கமாட்டாமல்........" வாயில் துண்டைப் பொத்தியவாறு அழுதார் கணேசுவின் தந்தை. பாக்கியத்தின் கண்கள் மெதுவாக மூடிக்கொண்டது.

"அம்மா அம்மா" "பாக்கியம்" என்ற அலறல்கள் ஒன்றும் கேட்காமல் அவள் கணேசுவுடன் ஆகாயத்தில் கைகோர்த்தபடி பறந்தாள்.

மறுபிறப்பு என்று ஒன்று இருந்தால் கணேசுவிற்கு மனைவியாகவும் பிரவீணா பிரசன்னா போன்ற பிள்ளைகளுக்கு அன்னையாகவுமே பாக்கியம் ஜென்மம் எடுப்பாள்.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# உறங்கும் உண்மைகள்



01

பச்சைப் பசேலென்று காட்சியளித்துக் கொண்டிருந்த வயலினூடே சென்று கொண்டிருந்தாள் கார்த்திகா. எங்கு செல்கிறேன் என்ற உணர்வின்றியே கால் நடந்துகொண்டிருந்தது. பின்னால் வரும் கார்த்திக்கைக் கூடக் கவனிக்காத அளவிற்கு அவள் மனம் எங்கோ இலயித்திருந்தது.

மற்றவர் கண்களில் புலப்பட்டதோ? என்னவோ? ஆனால் கார்த்திக்கின் மனம் புரிந்துகொண்டது. வரம்பினில் சறுக்கப்போன அவளை கார்த்திக் தாங்கிய போது தான் கார்த்திகா சுய உணர்விற்குத் திரும்பினாள். கார்த்திக்கிடம் மனம்விட்டுப் பழகினாளே ஒழிய அவன் தொட்டுப் பழகும் அளவிற்கு இடங்கொடுக்கவில்லை. அவ்வாறிருக்கையில் இந்நேரம் அவளின் உடல் கூனிக்குறுகிப் போவதில் வியப்பில்லைத்தானே. ஆனாலும் ஆபத்துக்குப்பாவம் இல்லை என்று நினைத்தவாறு

"கார்த்திக் நீங்களா? நான் கவனிக்கவே இல்லை. அதுசரி நீங்கள் எங்கை இப்படி" இழுத்தவளுக்கு

"நான் ரவுண் வரை போறன். நீங்கள் கொஸ்பிட்டலுக்குத் தானே" ஒரு வித ஊகத்துடன் கேட்டான் கார்த்திக்.

"ஆமா கார்த்திக் கொஸ்பிட்டலுக்கு ஒரு நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகாட்டால் கூட என்னால் நிம்மதியாய் உறங்கமுடியவில்லை கார்த்திக்"

"கார்த்திகா; உண்மையைச் சொல்லப்போனால் உங்களைப் போல சகோதரிக்காக உயிரைக் கொடுக்கிற ஒரு பிறவியை இதுவரை காணயில்லை"

"கார்த்திக்; எல்லாம் தெரிஞ்ச நீங்களுமா இப்படிப் பேசுறீங்கள் எனது சகோதரி இல்லை கார்த்திக் எனது அக்கா. தன் இரத்தைத்தை எனக்குப் பாலூட்டாமல் தனது வியர்வையை இரத்தமாக்கி வளர்த்தெடுத்த ஒரு தாய். ஒரு தியாக ஜீவன் கார்த்திக்." அவள் கூறி முடிக்க முன்பே அவள் கண்களில் இருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்து ஓடியது.

"என்ன கார்த்திகா இது? சீ...... அழாதையுங்கோ. பஸ்கோல்ட்டும் வந்திட்டுது. சனம் பார்க்குது. சீ.... அழாதையுங்கோ."

ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள் கார்த்திகா. ஆனாலும் கண்களில் இருந்து கண்ணீர் நிற்க சிறிது நேரம் எடுத்தது. பஸ்கோல்ட் ஆகையால் பலதரப்பட்டவர்களும் அங்கு நின்றார்கள். கார்த்திகா அழுவதைப்பார்த்து தன்னைத் தப்பாக நினைப்பார்களோ என்ற ஆதங்கம் கார்த்திக்கிற்கு. அதிலும் அவனுக்குத் தெரிந்தவர்கள் யாராவது நின்றுவிட்டால் வீண் அவதூறல்லவா.

அவர்களின் சிந்தனையைச் சிதறடிக்க விரும்பாததுபோல பஸ்ஸூம் வந்து விட்டது. ஓர் ஆசனம் கிடைத்ததும் கார்த்திகாவிற்காக விட்டுக்கொடுத்துவிட்டு விலகி நின்றான் கார்த்திக். எதிர்பாராத விதமாக கார்த்திக்கின் நண்பன் சுந்தர்,

"ஹலோ மச்சான்; என்ன இண்டைக்கு ஜோடியாய்க் கிளம்பியிட்டிங்கள்" இதைக் கேட்டதும் கார்த்திகாவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவளின் விரக்தி நிலையே அவளை ஆத்திரம் கொள்ள வைத்தது. மறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். இதனை அவதானித்த சுந்தருக்கு ஒரு புறம் ஆச்சரியமாகவும் மறுபுறம் வெட்கமாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் கார்த்திக்கை கண்களால் வினாவினான். அதற்கு கார்த்திக்கும் கண்களால் பதில் சொல்லியதைக் கவனிக்கத் தவறவில்லை கார்த்திகா. கார்த்திகாவிற்கோ அவமானமும் பெரும் வேதனையுமாகிப் போய்விட்டது. ஆண்டவா; இதென்ன சோதனை. ஏன் எனக்கு இப்படி ஒரு அக்காவைத் தந்தாய்.

அவளின் நினைவுகள் பின்னோக்கி சுழல ஆரம்பித்தன.

## 02

தந்தையையும் தாயையும் சிறுவயதிலேயே இழந்த கார்த்திகாவிற்கும் தாரகாவிற்கும் மூத்தவள் தான் தேனுகா. தந்தை தாயற்றவர்களை அநாதை என்று சொல்வார்கள். ஆனால் கார்த்திகாவையும் தாரகாவையும் அநாதைகள் என்று சொல்லாத அளவிற்கு தந்தைக்குத் தந்தையாகவும் தாய்க்குத் தாயாகவும் வளர்த்து வந்தாள் தேனுகா. அவளின் அன்பில் ஒரு சிறுதுளி கூட குறைவின்றி இருந்தது, அவ் ஊரில் இருந்த யாவரும் அறிந்த உண்மை.

இவர்களின் தந்தை இ.போ.ச ஓட்டுனராகப் பணியாற்றியவர். விபத்து ஒன்றில் உயிரிழந்துவிடப் பதறிப்போன தாய் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு எடுத்த முயற்சியால் தந்தைக்குரிய ஊழியர் சேமலாபநிதி ஒரு லட்சம் கிடைத்தது. அந்தத்தொகையை வங்கியில் நிரந்தரச் சேமிப்புக் கணக்கில் இட்டு மாதாமாதம் கிடைத்த வட்டியைக் கொண்டும், வீட்டில் கோழிப்பண்ணை வைத்துக் கிடைத்த வருவாயைக் கொண்டும் மூன்று பிள்ளைகளை வளர்த்தும், பள்ளிக்கனுப்பியும் வந்தாள். தாயின் விடாமுயற்சியில் மூத்த பிள்ளை என்பதால், தேனுகாவும் அக்கறையோடு பங்கெடுத்து வந்தாள். ஒரு நாள் அவர்களது தாயும் மூன்றாவது தடவையாக வந்த மாரடைப்பு நோய்க்குப் பலியானாள். மனம் தளர்ந்து தேறிய தேனுகா, தாயைப் பின்பற்றி கோழிப்பண்ணையைப் பராமரித்தும், கூலி வேலைகள் செய்தும் தங்கைமார் இருவரையும் அக்கறையோடு, பாசத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்துப் படிப்பித்து வந்தாள்



"அக்கா; நீங்கமட்டும் உடம்பை ரணமாக்கி எங்களுக்காகப் பாடுபடுறியளே எங்களுக்குப் படிப்பு வேணுமாக்கா? நானும் தாரகாவும் நாளையிலிருந்து ஸ்கூலுக்குப் போகாமல் உங்களோடை சேர்ந்து உழைச்சால் உங்க கஷ்டம் கொஞ்சம் குறையும். அவரவர் தேவையை அவரவரே பூர்த்தி செய்யலாம். என்னக்கா சொல்லுறீங்கள்?" பாசத்துடன் கேட்டாள் கார்த்திகா.

தேனுகாவிற்கு அவளை அணைத்து அப்படியே உடல் பூராகவும் முத்தம் கொடுக்க வேண்டும் போலிருந்தது. நன்றி கெட்டு வாழும் இந்தச் சமுதாயத்தில் இப்படி ஒரு சகோதரியா? ஆனால் தாரகா சாட்டுக்குக் கூட ஒன்றும் கேட்கவில்லை. இக்கதைகளுக்குக் காது கொடுக்காதவளாக அவ்விடத்தை விட்டு நகர்ந்து கொண்டாள். தேனுகாவும் அதனைப் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை. காரணம் பத்துவயதுச் சிறுமி தாரகா. அவளுக்கு உலகம் புரியவில்லை என்று நினைத்தாள் தேனுகா. இரண்டு வயது தான் மூத்தவள் கார்த்திகா. ஆனாலும் ஓரளவு உலகத்தைப் புரிந்திருந்தாள்.

"பார்த்தியாக்கா, தாரகாவை 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பார்கள். இவளாக்கா படிச்சு உழைச்சுச் சோறு போடுவாள். உன் கஷ்டத்தைக் கண்ணீரைத் துடைப்பாள் நான் நம்பவில்லை அக்கா. படிப்பும் வேண்டாம், உங்கடை கண்களைக் கலக்கவும் வேண்டாம். உங்கடை கஷ்டத்திலை எங்களையும் பங்கு போட விடுங்கோ அக்கா." கெஞ்சினாள் கார்த்திகா.

"பாட்டி மாதிரி கதைக்கிற கதையைப் பார். இது நான் உங்களுக்குச் செய்யிற உதவி இல்லை. மூத்தவளாய்ப் பிறந்ததாலை என்னுடைய கடமை. ஆண்டவன் ஒருவன் இருக்கிறான். எண்ட நம்பிக்கையிலை தான் நீங்கள் நல்லாய்ப் படிச்சு நீ ஒரு டாக்டராயும், தாரகா ஒரு லோயராயும் வரவேணும். அதுதான் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவி. செய்வியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரத்திகா?

"அக்கா" ஆச்சரியத்துடன் நோக்கினாள் தேனுகாவை அக்காவின் கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் கார்த்திகா.

தேனுகாவின் உள்ளம் பூரித்தது. "வளரும் காயை பிஞ்சிலை தெரியும் என்பினம். என் கார்த்திகாவை இப்போதே தெரிந்து கொண்டேன்" என்று உள்மனம் சொல்லியது. அதை வெளிக்காட்டாதவாறு "சரி சரி போய்ப்படி. நான் கஞ்சி காய்ச்சப் போறன்" சமையலில் கூட தனது சகோதரிகளைக் கஸ்டப்படுத்த நினைக்காதவள் தேனுகா.

தேனுகாவின் அன்னையும் தேனுகாவின் பண்புகளைக் கொண்டவளே. அவள் உயிருடன் இருக்கும் போது அவளது சகோதர சகோதரிகளுக்கு விழுந்து விழுந்து உதவி செய்தவள். அப்படிப்பட்டவளின் பிள்ளைகளை கவனிக்க உதவி செய்ய ஒருவரும் முன்வரவில்லை.

## 03

திடீரெனப் பிரேக் போட்டதால் பஸ் குலுக்கவே சுயநினைவிற்குத் திரும்பினாள். கண்களில் பனித்த கண்ணீர்த் துளிகளைத் தட்டியவாறு வெளியே பார்த்தாள். என்ன ஆச்சரியம் ஆஸ்பத்திரி வாசலில் பஸ் நின்றது. அவசரஅவசரமாக கார்த்திக்கிடம் விடைபெற்றுக்கொண்டு இறங்கினாள் கார்த்திகா.

நினைவுகள் நீடித்திருந்தால் பஸ் தன்னை எங்கோ கொண்டு போய்விட்டிருக்குமே. ஆனாலும் கார்த்திக் தட்டி இருப்பார் தானே. எது எப்படியோ அப்படி ஒன்றும் நடக்காமல் இறங்க வேண்டிய இடத்தில் இறங்கிவிட்டேனே. அது போதும் மனதிற்குள் நினைத்தவளாக ஆஸ்பத்திரி வாயிலினுள் நுழைந்தாள்.

முதலாவதாக இருக்கும் வார்ட்டில் தான் அவளது அக்கா தேனுகாவை அட்மிட் செய்திருந்தார்கள். யாராவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த வார்ட்டிற்குப் போகிறீர்கள்? என்று கேட்டால் வேறு வார்ட்டின் பெயரைத்தான் கூறுவாள். எந்த ஒரு ஜீவனும், போக விரும்பாத வார்ட்டில் தான் அவள் அக்கா இருக்கிறாள் என்று எப்படிக் கூறமுடியும்?

பார்வை நேரத்துக்கான மணி அடிக்கப் பத்து நிமிடங்கள் இருந்தன. பார்வை நேரம் நெருங்குவதால் பலர் அங்கு ஒன்று கூடி இருந்தனர். அதனால் ஓரமாகத் தனித்திருந்த ஒரு பெஞ்சின் மீது அமர்ந்து கொண்டாள். தற்செயலாகத் திரும்பிய அவளது கண்களில் தாரகாவும் அவளது கணவன் தீபக்கும் தென்பட்டார்கள். அவர்களைக் கண்டதும் அவளின் பின்னோக்கிய நினைவுகள் தொடர ஆரம்பித்தன.

பகலில் வெய்யிலில் நின்று உழைப்பதும் இரவில் அடுப்பின் வெக்கையில் இருந்து காய்வதுமாகத் தேனுகா இருந்தமையால் கார்த்திகாவும் தாரகாவும் கல்வியை இடைநிறுத்தாமல் தொடர்ந்தார்கள். சிலவேளைகளில் கார்த்திகா உதவிக்கு வருவாள். ஆனால் தாரகா அந்த இடத்தைக் கூட எட்டிப் பார்க்கமாட்டாள்.

இவ்வாறாக அவர்கள் இருவரும் தேனுகாவின் அயராத உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் பல்கலைக்கழகப்படிப்பு வரை சென்றுவிட்டார்கள். பல்கலைக்கழகப் படிப்புத் தொடங்கி 3 வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. கார்த்திகா மூன்றாம் வருடம். தாரகா முதலாம் வருடம். இருவருக்கும் மெடிசின் கிடைத்திருந்தது. மெடிசின் கிடைத்தமையால் தாரகாவை லோயராக்க வேண்டும் என்ற கனவு, எண்ணம் தேனுகாவின் மனத்திரையிலிருந்து நீங்கிவிட்டது.

பல்கலைக் கழகத்திலே தன்னுடன் கல்வி கற்கும் மாணவன் தீபக்கை காதலிக்கத் தொடங்கிவிட்டாள் தாரகா. இதை அறிந்ததும் கார்த்திகா தேனுகாவிடம் முறையிட்டு விட்டாள். தேனுகா துள்ளிக் குதிப்பாள் என்று எதிர்பார்த்தாள் கார்த்திகா, மாறாக

"எதற்கும் தாரகா வரட்டும். அவளிடமே கேட்டுவிடுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாள் அப்போது தான் தாரகாவும் காதலனுடன் சுற்றிவிட்டு வாசல்படியில் வந்து கொண்டிருந்தாள். உள்ளே சென்றவளை,

"தாரகா இஞ்சை வந்திட்டுப்போ" என்று அமைதியாக எந்தவித ஆர்ப்பாட்டமும் இன்றி அழைத்தாள் தேனுகா. தாரகாவும் எந்தவிதப் பயமோ தயக்கமோ இன்றி

"என்னக்கா" என்றாள் அருகில் வந்தவாறு.

"பெற்றார் இல்லாத வளர்ப்பெண்டு ஊர் சொல்ல வைக்கப்போறியா தாரகா? கார்த்திகா எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள். மறைக்காமல் உண்மையைச் சொல்லு" என்றாள் தாழ்ந்த குரலில். ஆனால் தாரகாவோ ஆத்திரத்துடன்

"எனக்குத் தெரியும். இவதான் எல்லாம் கோள் சொல்லியிருப்பா எண்டு. அவவிற்கு ஒருத்தரும் கிடைக்கேல்லை. அதுக்காக நானும் அவவை மாதிரி இருக்க வேணும் எண்ட நினைப்பு" என்று கத்திய தாரகாவை

"தாரகா" என்று அதட்டினாள் தேனுகா.

"பார்த்தியளே அக்கா அவளின்ரை நெஞ்சழுத்தத்தை பத்து வயதிலை சிறுமி எண்டியள். இப்ப இருபத்திரண்டு. இவளின்ர புத்தி ஏனக்கா இப்படிப் போய்ச்சுது?" ஆத்திரமும் கவலையுமாகக் கூறினாள் கார்த்திகா.

"அக்கா ஊரிலை ஒருத்தரும் செய்யாததை நடக்காததையா நான் செய்து போட்டன். தீபக் ஒருநாளும் என்னைக் கைவிடமாட்டார். சீதனம் எண்டு ஏதும் குடுத்துச் செய்து வைக்கத்தான் ஏதும் வழியிருக்கே" பொரிந்து தள்ளினாள் தாரகா. கார்த்திகாவிற்கு ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. தாரகாவின் கன்னத்தில் பளாரென்று அறைந்து விட்டாள்.

திரும்பித் தாரகாவும் கை ஓங்குவாள் என எதிர்பார்க்காத கார்த்திகாவிற்கு ஓங்கிய தாரகாவின் கையைத் தேனுகா தடுத்த போதுதான் தேவையற்ற விபரீதம் உருவாகிவிட்டது என்பதை உணர்ந்து கொண்டாள் கார்த்திகா.

"அக்கா முடிவாய்ச் சொல்லுறன் எங்களுக்கு உங்களாலை திருமணம் செய்து வைக்க முடியாது. அதாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய படிப்பு முடிய முறைப்படி அவரைத் திருமணம் செய்யப்போறன்''

''ஏன்ரி இப்பவே போவன். படிப்புக்குப் பணத்தை செலவழிக்க மாட்டினம் போலை. உழைக்கிற பணத்தையே எதிர்பார்க்கினம். சீதனத்துக்குப் பதிலாக'' குறுக்கிட்டாள் கார்த்திகா.

''கார்த்திகா கொஞ்சம் அமைதியாய் இரு அவள் சொல்லுறதிலையும் நியாயம் இருக்கு. உனக்கும் ஒண்டும் கிடைக்கயில்லை. நானும் கலியாணம் எண்ட ஒரு வார்த்தையையே நினைச்சுப் பார்க்கயில்லை. அவளுக்காவது இப்பிடி ஒரு வாழ்க்கை கிடைச்சுதேயெண்டு சந்தோஷப்படு'' உதடு இவ்வாறு கூறியதே தவிர தேனுகாவின் உள்மனம் அழாமலில்லை. காதலிப்பதே தேனுகாவின் அன்னைக்குப் பிடிக்காத ஒன்று. தேனுகா சிறுமியாய் இருக்கும் போதே தேனுகாவிற்கு பால் ஊட்டுவது போல் ஒழுக்கத்தை ஊட்டி வளர்த்தாள் அந்த அன்னை. அப்படிப்பட்ட அன்னையின் வயிற்றில் இப்படியும் ஒரு பிள்ளை பெருமூச்செறிந்தாள் தேனுகா.

''அக்கா எனக்கொண்டும் அகப்படாமல் இல்லை. இவளுக்கே தெரியும் எத்தனை பேர் எனக்கு லவ்லெட்டர் தந்து பிறின்சிப்பலிட்டைப் பணிஸ்மன்ற் கூட வாங்கிக் குடுத்திருக்கிறன் எண்டு. எனக்கு மானம் தானக்கா பெரிசு. மானம் போன பின்பு என்னத்துக்கு அக்கா இந்த உயிர். அம்மா உயிரோடை இல்லாவிட்டாலும் அவவின்ரை பெயருக்குக் களங்கம் வர நான் விடமாட்டன். அதோடை உங்களை மணக்கோலத்திலை காண முன்பு இவளுக்கு எப்படி அக்கா மனம் வந்தது. அப்பிடியா அக்கா எங்களை நீங்கள் வளர்த்திருக்கிறியள்?''

தன்னுடைய கவலையையும் வேதனையையும் அடக்க முடியாமல் கண்ணீர் மல்கக் கூறினாள் கார்த்திகா. தாரகாவால் அதற்கு மேலும் அங்கு நிற்க முடியவில்லை. அவ்விடத்தை விட்டு அகன்று விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கார்த்திகா ஐந்து விரலும் ஒரே மாதிரி இருக்காது. அவளின்ரை மனதைக் குழப்பாதை. பரீட்சைக்கும் ஒரு கிழமை தான் இருக்கு. நீயும் போய்ப்படி. உதுகள் ஒண்டையும் பெரிது படுத்தாமல் யோசிக்காமல் போ. போய்ப்படி" கார்த்திகாவை இவ்வாறு கூறி அனுப்பினாளே ஒழியத் தேனுகாவால் பெரிதுபடுத்தாமல் இருக்க முடியுமா? உடல் வேதனையுடன் மனவேதனையும் சேர்ந்து கொண்டது.

## 04

நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி இரண்டு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. கார்த்திகாவிற்கு ஆண்டவனின் கருணையோ என்னவோ பாஸ்அவுட் பண்ணி வெளியேறியதும் தற்காலிகமாக ஒரு வேலை கிடைத்துவிட்டது. வேலை கிடைத்த அன்றே தேனுகாவின் உடலிற்கு ஓய்வுகொடுத்து விட்டாள் கார்த்திகா.



சில காலங்களின் பின் தாரகாவும் தனது படிப்பு முடிந்ததும் தேனுகாவிற்கும் சொல்லாமல் ஒரு ஆலயத்தில் தீபக்கைத் திருமணம் செய்து கொண்டாள். தாரகா திருமணம் முடிந்த மறுமாதமே தேனுகாவிற்கும் மாப்பிள்ளை தேடும் படலத்தில் இறங்கினாள் கார்த்திகா.

ஓரிரு சம்பந்தங்கள் வந்து சேர்ந்தன. கார்த்திகா பூரிப்படைந்திருந்த வேளை வந்தவர்கள். தேனுகாவிற்குப் பதிலாகக் கார்த்திகாவை பெண் கேட்டனர். தேனுகா எவ்வளவோ வற்புறுத்தியும் கார்த்திகா சம்மதிக்கவில்லை.

மாதங்கள் உருண்டோட, கார்த்திகாவின் அயராத முயற்சியால் தேனுகாவிற்கு ஒரு சம்பந்தம் கைகூடியது. அதுவும் கார்த்திகாவுடன் வேலை பார்க்கும் ஸ்ரீநாத் என்பவர் தான் மாப்பிள்ளை. ஸ்ரீநாத்திற்கும் சகோதரிகள் பலபேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையால் ஸ்ரீநாத்தின் திருமணமும் இழுபட்டுக் கொண்டு சென்றதால் தேனுகாவின் வயதிற்குப் பொருத்தமாகிவிட்டது.

அதிகளவு ஆடம்பரமின்றி ஓரளவு சிறப்பாகத் தாரகாவையும் அழைத்துத் திருமணத்தை நடத்தி முடித்துவிட்டாள். தனது பொறுப்பு நீங்கிவிட்டது என்று நிம்மதியாக இருந்த நேரத்தில் தான் அந்த எதிர்பாராத சம்பவம் நடைபெற்றது.

தேனுகா தன் கணவன் வீட்டிற்குப் போய்விட்டால் கார்த்திகா தனித்து விடுவாள் என்ற நல் எண்ணத்தில் கார்த்திகாவுடனேயே தனது வீட்டில் கணவனுடன் இருந்து விட்டாள். கார்த்திகாவும் தனது அத்தானுடன் சகஜமாகப் பழகத் தொடங்கினாள். தேனுகாவின் கணவன் ஸ்ரீநாத்தும் அவளுடன் அன்பாகப் பழகினான். ஒன்றாக வேலை பார்ப்பவர்களும் தானே. அதனால் கூடிய நட்புடன் பழகத் தொடங்கினார்கள்.

தாரகாவும் தீபக்கும் தேனுகாவின் வீட்டிற்கு இடையிடையே வந்து போவது வழக்கம். கார்த்திகா, தாரகாவையோ அவள் கணவன் தீபக்கையோ திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. ஸ்ரீநாத்துடன் மாத்திரம் சிரித்துச் சிரித்துப் பேசுவது தாரகாவிற்கோ பிடிக்கவில்லை. புது வருடத்தன்று வந்த தாரகா

"அக்கா நான் ஒண்டு சொல்லுவன் பதட்டப்படாமல் கோபப்படாமல் கேளுங்கோ" தேனுகாவிடம் புதிர் போட்டாள் தாரகா

தேனுகாவிற்கோ ஒன்றும் புரியவில்லை.

"என்ன சொல்லு? நான் கோவிக்கப் போறதில்லை" என்று சர்வசாதாரணமாகச் சொன்னாள். அதுவே சிறிது ஏமாற்றமாகி விட்டது தாரகாவிற்கு. எவ்வளவு ஆர்வத்துடன் கேட்பாள் என்று நினைத்த தாரகாவிற்கு தேனுகா அசட்டையாகச் சொன்னதே இச்சிறிது ஏமாற்றத்திற்குக் காரணம். ஆனாலும் தன்னை சுதாகரித்துக் கொண்டு

"இல்லை அக்கா கார்த்திகாவும் அத்தானும் பழகுறதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் ஒரு மாதிரிப் பேசுது. நான் அறிஞ்சு இரண்டு மாதம் வரும். உங்களுக்குச் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டியள். அதாலை தான் இவ்வளவு நாளும் சொல்லயில்லை'' ஒருவாறு விழுங்கி விழுங்கித் தான் கூற வந்த செய்தியைக் கூறி முடிக்கு முன்

"அப்ப ஏன் இப்ப சொல்ல வந்தனீ?'' படாரென்று கேட்டுவிட்டாள் தேனுகா.

தாரகாவோ சமாளித்தவாறு ''பிறகு ஏதாவது நடக்கக்கூடாதது நடந்து விட்டால், ஏன் முன்னமே சொல்லவில்லை எண்டு என்னை ஏசியிருப்பீர்கள். எனக்கென்ன? நான் சொல்ல வேண்டியதைச் சொல்லியிட்டன். இனி நீங்கள் என்னவாவது செய்யுங்கோ''

என்று கூறியவாறு எழுந்து கொண்டாள். சொல்ல வந்த பொய்யை நாசுக்காகக் கூறி முடித்த சந்தோஷம் அவள் மனதில் தெரிந்தது. ஆனால் தேனுகாவோ

"தாரகா: ஊர் என்னவெண்டாலும் சொல்லட்டும். நீயும் அதையெல்லாம் நம்பு. ஆனால் என்ரை கார்த்திகா கள்ளங் கபடமில்லாதது. என்னிலை உயிரையே வைச்சிருக்குது. உனக்கு உன்ரை வாழ்க்கை தான் பெரிசெண்டு சுயநலத்தோடை நடந்து கொண்டாய். பாவம் கார்த்திகா: தன்ரை வாழ்க்கையைப் பற்றி சிந்திக்காமல் எனக்கு ஒரு வாழ்வை ஏற்படுத்தித் தந்திருக்கிறாள்'' தேனுகா கூறி முடிக்கு முன்

"அவளுக்கேன் வாழ்க்கை. அவள் தான் அத்தானுடன் வாழுகிறாள் எண்டு ஊரே சொல்லுதே" தாரகா முணுமுணுத்தாள்.

"சீ.... வாயை மூடு....... ஊர் சொன்னால் உன்ரை அறிவு, பாசம் எங்கையடி போயிட்டுது. உனக்கு அதெல்லாம் இருந்தால் தானே. அல்லது சகோதரத்தைப் பற்றி வாய்க்கு வந்ததை ஆரும் கதைக்க கேட்டுக்கொண்டு வந்தியே. உனக்கு செருப்பாலை அடிக்க வேணும்'' ஒருகாலமும் ஆவேசப்பட்டுக் கதைத்து அறியாத தேனுகா, ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு மிக ஆவேசத்துடன் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமானப்பட்ட தாரகா,

"என்னிலை ஏன் ஆத்திரப் படுறியள். மலிஞ்சால் சந்தைக்கு வரும் தானே. அப்ப என்ன செய்யிறியள் பார்ப்பம்" பிரச்சினையை வளர்க்க விரும்பாதவளாக கூறினாள் தாரகா. ஆனால் தேனுகாவால் ஒரு துளி கூட நம்பமுடியவில்லை. ஆனாலும் தாரகா ஏற்படுத்திய வடு மனதில் ஒரு மூலையில் பதிந்து விட்டது.

தாரகாவோ இதைப் பெரிய பிரச்சனையாக எடுக்காது தேனுகா வீட்டிற்கு வந்து போய்கொண்டு இருந்தாள். தாரகாவை விட தேனுகாவின் வீட்டிற்கு போவதிற்கு அதிக விருப்பம் உள்ளவன் தீபக். தாரகா புறப்பட முன்பு தீபக் புறப்பட்டு விடுவான். தீபக்கின் விருப்பத்திற்காக தாரகாவும் தேனுகாவின் வீட்டிற்கு அடிக்கடி போவது வழக்கமாயிற்று. அதிலும் கார்த்திகாவின் 'ஓவ் டேய்' பார்த்துத்தான் தீபக் புறப்படுவான். அந்த நாட்களில் தாரகாவால் தீபக்குடன் சேர்ந்து போகமுடியாத நிலை. காரணம் தாரகாவிற்கு அந்த நாட்களில் டியூட்டி இருக்கும். தீபக்கும் கார்த்திகாவின் ஓவ்டேயில் தான் தனது ஓவ்டேயையும் மாற்றி தேனுகாவின் வீட்டிற்கு வருகிறான் என்று யார் கண்டார்கள்?

தேனுகாவின் மகள் பூர்ணிமாவைப் பார்ப்பதற்காகத் தான் அடிக்கடி வந்து போகிறான் என யாவரும் நினைத்துக் கொண்டார்கள். ஆனால் கார்த்திகாவிற்கு அவனது உள்நோக்கம் புரிந்து விட்டது.

பார்க்கிற பார்வையும் சிரிப்பும் வலிய வந்து கதை கொடுப்பதும் அவனது உள் உணர்வை வெளிப்படுத்தியது. இவ்வாறு பல சந்தர்ப்பங்கள் கார்த்திகாவிற்கு ஏற்பட்டது.

தற்செயலாகப் பஸ் இல்லாத காரணத்தால் அன்று கார்த்திகாவும் அவள் சினேகிதியும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவ்வழியே காரில் வந்த தீபக்,

"கார்த்திகா பஸ் நிறுத்திவிட்டாங்களாம் வாங்களன், நான் கொண்டுபோய் இறக்கிவிடுறன்." அக்கறையுடன் கேட்டான். ஆனால் கார்த்திகாவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பரவாயில்லை, நாங்கள் இரண்டு பேர் இருக்கிறம் தானே உங்களுக்கு ஏன் வீண் சிரமம். நடந்தே போறம்"

ஆனால் அவளின் சினேகிதி மேனகாவோ "என்ன கார்த்திகா. இன்னும் எவ்வளவு தூரம் இருக்குது. எனக்கு இப்பவே கால் வலிக்குது. யார்? உன்ரை தங்கையின்ரை புருஷன் தானே? வாடி ஏறுவம்'' கெஞ்சினாள், மேனகாவின் உபத்திரவத்தால் ஏறவேண்டி இருந்தது.

இருவரும் ஏறிக்கொண்டதும் கார் புறப்பட்டது. கார்க்கண்ணாடியில் அடிக்கடி கார்த்திகாவை, தீபக் பார்ப்பதை கவனிக்கத் தவறவில்லை கார்த்திகா. நெருப்புக்குமேல் இருப்பது போல் தத்தளித்தாள். ஜன்னலிற்கு வெளியே பார்த்தவாறு வந்தாள். கார்த்திகாவின் வீட்டிற்கு ஒரு சிறிது தூரம் தள்ளியே அவள் சினேகிதி மேனகா வீடு இருந்தது. அதனால் அவள் முன்பே இறங்கிவிட்டாள். கார்த்திகாவிற்கு இது இன்னமும் சங்கடமாகிப் போய்விட்டது. இதுதான் தருணம் என்றறிந்த தீபக்கோ காரை மிகமெதுவாகச் செலுத்தினான். மெதுவாகச் செலுத்தியது மாத்திரமன்றி பேச்சையும் தொடக்கினான்.

"என்ன கார்த்திகா, பேசாமல் வாறீங்கள்? என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" ஆர்வத்துடன் கேட்டான். கார்த்திகாவிற்கோ என்ன சொல்வதென்று தெரியவில்லை சமாளித்தவாறு

"அப்படியெல்லாம் இல்லை. தங்கையின் புருஷன் என்ற மரியாதை தான்.'' தப்புவதற்காக இவ்வாறு கூறினாள். அதுவே தீபக்கிற்கு தெம்பை ஏற்படுத்திவிட்டது.

"கார்த்திகா, சிலர் தப்புவிடுவது பற்றி என்ன நினைக்கிறீங்கள்? வேணுமென்று ஒருவருமே தப்பு விடுவதில்லை. சந்தர்ப்பம், சூழ்நிலை, சிலருக்கு சிலர்மேலை உள்ள விருப்பு இவைதான் காரணமென்று நான் நினைக்கிறன். உங்கடை அபிப்பிராயம் என்ன?

"நொடி கேட்பது போல் தானே கேள்வியைக் கேட்டுத் தானே பதிலும் கூறிவிட்டு அபிப்பிராயம் என்ன அபிப்பிராயம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதிற்குள் புறுபுறுத்தாள். ஆனாலும் தன்னை சுதாகரித்துக் கொண்டு

''எனக்கு இன்னமும் இப்படி ஒரு அனுபவம் ஏற்படவில்லை. அதனாலை எப்படி உந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுறதெண்டு தெரியேல்லை மிஸ்டர் தீபக்'' கூறினாள் கார்த்திகா.

இதற்கிடையில் அவர்கள் வீடுவரவே காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு, அவள் அழைக்காமலே வீட்டிற்குள் நுழைந்தான். நல்ல காலம், தேனுகா வீட்டிலிருந்தது கார்த்திகாவிற்கு ஆறுதலாக இருந்தது. தேனுகாவின் மகள் பூர்ணிமாவுடன் கதைத்து விளையாடிவிட்டுப் புறப்பட்டு விட்டான் தீபக்.

கார்த்திகாவிற்கோ தேனுகாவிடம் தீபக் பற்றிய விடயங்களைக் கூற வேண்டும் போலிருந்தது. கூறுவோமா? வேண்டாமா? என மனதிற்குள் விவாதம் நடத்திவிட்டு பின்னுக்கு ஏற்படப்போகும் விபரீதங்களையும் உணர்ந்து தேனுகாவைத் தேடி வந்தாள்.

தேனுகா குழந்தையின் உடைகளையும் ஸ்ரீநாத்தின் உடைகளையும் கழுவிக்கொண்டிருந்தாள்.

''அக்கா'' என அழைத்தபடி கிணற்றுக்கட்டில் அமர்ந்தாள், கார்த்திகா. நிமிர்ந்த தேனுகா

"மழைக்காலம், அதுவும் பார் அவவின்ரை துணிவை எனப் பதறினாள்.

"அக்கா உங்களுக்கு எப்பவும் பதட்டம் தான். நான் என்ன குழந்தைப்பிள்ளையா? நான் ஒண்டும் கிணத்துக்கை விழமாட்டன்''

"சரி இப்ப என்னத்துக்கு கூப்பிட்டனீ?" கார்த்திகாவுடன் மல்லுக்கட்ட முடியாமல் வந்த விடயத்தை வினாவினாள்.

"அக்கா, தாரகாவின்ரை தீபக்கை கவனிக்கிறனீங்களோ, அவன் பார்க்கிற பார்வையே சரியில்லை" கார்த்திகா கூறி முடிக்குமுன்.

"மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோலை உனக்கு ஒருத்தற்றை பார்வையும் தான் பிடிக்காதே" கூறினாள் தேனுகா.

"இல்லை அக்கா இவ்வளவு நாளும் பார்வையோட சரி. இண்டைக்கு தேவையில்லாமல் சம்பந்தா சம்பந்தமில்லாமல் உளறிக்கொண்டு வந்தானக்கா"

"உனக்கு பிடிக்காட்டால் ஏன் அவன்ரை காரிலை ஏறினனீ?" முறைத்துப்பார்த்தபடி கேட்டாள் தேனுகா.

"எல்லாம் என்னுடைய ஃபிறண்ட் மேனகாவாலை வந்த வினை. இருண்டாலும் பரவாயில்லை. நடந்து போவம் எண்டு சொன்னன். அவள் விட்டால் தானே. 'கொஞ்ச இடம், எண்டு கெஞ்சினாள். அவளுக்காக ஏறினன்' ஏறிய காரணத்தை விலாவாரியாகக் கூறிமுடித்தாள் கார்த்திகா.

தேனுகாவிற்கோ கார்த்திகா கூறியதைக் கேட்டதும் மனக்குழப்பத்துக்கு மேல் குழப்பம். 'கார்த்திகா என்னடா எண்டால் தீபக் தன்னைப் பார்க்கிறான், கதைக்கிறான் என்கிறாள். தாரகாவோ தனது புருஷனுடன் தொடுத்து ஊர் கதைக்குது என்கிறாள். நினைக்க நினைக்க தேனுகாவிற்குத் தலை சுற்றுவது போலிருந்தது. இதுக்கெல்லாம் காரணம் கார்த்திகாவின் அளவற்ற அழகாக இருக்கலாம். அதுக்காக கார்த்திகா யார்? இவையளுக்கு' என்று மனதிற்குள்ளேயே கேட்டுக் கொண்டாள். தேனுகாவின் மௌனத்தைக் கண்டு.

"என்னக்கா நீங்கள் என்னைத் தப்பாய் நினைக்கிறிங்களா? நா தழுதழுக்கக் கேட்டாள் கார்த்திகா.

"சீ... போடி . . உன்னை நான் அப்படி நினைப்பனே. தாரகாவிற்கு இதைப்பற்றிச் சொன்னால் குடும்பத்திற்கிடையிலை பிரச்சி னை வரும். அதைவிட அவள் தன்ரை புருஷனை நம்பிக்கொண்டு உன்னைத்தான் கேவலமாய்க் கதைப்பாள். காதலிச்சுத் திருமணம் செய்தவள் அல்லே. எதுக்கும் கொஞ்சக்காலம் பொறு. கார்த்திக்கிற்கும் உனக்கும் திருமணம் முடிஞ்சுதெண்டால் அதுக்குப்பிறகு ஒருத்தரும் ஒண்டும் சொல்லவும் ஏலாது. செய்யவும் ஏலாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுடன் இக்கதையளுக்கு முற்றுப்புள்ளி ஒன்றை வைத்து விட்டார்கள் இருவரும்.

## 05

நாட்கள் நகர நகரப் பூர்ணிமாவின் இரண்டாவது பிறந்த நாள் வந்தது. வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். தேனுகா ஸ்ரீநாத் எல்லோருடனும் நின்று போட்டோ எடுத்துக் கொண்டாள் கார்த்திகா. தாரகா தீபக் இருவரும் நிற்கும் இடத்தில் கூட நிற்கவில்லை. விலகி விலகிச் சென்றாள்.

அன்று கார்த்திகா கடும் நீலக்கரை அமைந்த காஞ்சிபுரம் உடுத்தியிருந்தாள். இடைஇடையே மினுங்கல்கள் மின்னி மின்னிக் கொண்டிருந்தன. கார்த்திகாவின் மாநிறத்துக்கு மெல்லிய நீலமும் கடும் நீலமும் சேர்ந்த அந்தச் சாறி மிகவும் எடுப்பாக இருந்தது.

நீண்ட சுருண்ட அந்தக் கருங்கூந்தலில் கனகாம்பர மலர்ச்சரம் தொங்கியது. அதைவிட ஒற்றை ரோஜா வைத்திருந்தால் இன்னும் அழகாக இருந்திருக்கும். அவளின் அந்த கொள்ளை அழகு எல்லோரையும் என்ன? வயது முதிர்ந்தவரைக்கூட ஈர்த்துவிடும்.

கார்த்திக்கிற்கு அனுப்புவதற்காக வெவ்வேறு கலர் சாறிகள், சுடிதார், கவுண் என்று பல உடைகளை மாற்றி மாற்றிப் போட்டோ எடுத்தாள். பார்ட்டிக்கு வந்தவர்கள் யாருக்குப் பிறந்தநாள்? கார்த்திகாவிற்கா? பூர்ணிமாவிற்கா? என ஐயம் கொள்ளும் அளவிற்கு கார்த்திகாவின் உடையலங்காரம் அமைந்திருந்தது.

கார்த்திகாவின் அன்றைய அழகை அன்றே ரசித்துவிட வேண்டும் என்ற வெறி தீபக்கின் மனதில் உதித்து விட்டது. சகோதரியைத் திருமணம் செய்யாத தீபக் என்றால் கார்த்திகாவை ஒரே தூக்காகத் தூக்கிக்கொண்ட போயிருப்பான். அப்படியிருந்தது அன்றைய அவனது மனநிலை. பிறந்தநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாட்டம் என்பதால் தாரகாவும் தீபக்கும் தேனுகாவின் வீட்டிலேயே தங்கினார்கள். கார்த்திகாவிற்கோ அவர்கள் தங்குவது பிடிக்கவில்லை. ஆனாலும் அவளால் ஒன்றுமே செய்யமுடியவில்லை.

இரவானதும் கார்த்திகாவிற்கு ஒரே அலுப்பும், களையும். காரணம் பூர்ணிமாவின் கொண்டாட்ட வைபவ நிகழ்வு முழுவதையும் கார்த்திகாவே பொறுப்பேற்றுக் கொண்டாள். இரவுச் சாப்பாடு கூட எடுக்காமல் எட்டு மணிக்கே உறங்கிவிட்டாள். நடு இரவில் பாத்றூமிற்குச் சென்றுவிட்டு கதவைத் தாழிடாமல் அலுப்பில் மறந்து படுத்துவிட்டாள். உறக்கத்தினிடையே கை ஒன்று தனது மேனியில் படவே லைற்றையும் போடாமல் கட்டிலில் இருந்தவாறே கத்தத் தொடங்கினாள்.

அந்த நேரத்தில் நித்திரையால் விழித்திருந்த ஸ்ரீநாத்திற்கு இச்சத்தம் கேட்கவே மனைவியைக் கூட எழுப்பாமல் கார்த்திகாவின் அறைக்கு ஓடிவந்தான். கார்த்திகா கத்துவாள் என எதிர்பாராத தீபக், யாரோ ஓடிவருவதைக் கண்டுவிட்டு சுவிச்சைப் போட்டுவிட்டுப் பாத்றூமுக்குள் நல்ல பிள்ளை மாதிரி நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டான். வெளிச்சத்தில் பார்த்தால் ஸ்ரீநாத் நிற்பது கார்த்திகாவிற்குத் தெரிந்தது.

"அத்தான் நீங்களா?" கார்த்திகா கேட்கவும் தேனுகா, தாரகா வரவும் சரியாக இருந்தது. தாரகா படபடத்தாள்.

"அக்கா இப்ப பார்த்தியள் தானே. இதையும் நீங்கள் நம்ப இல்லையே" எப்போது இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் எனக் காத்திருத்த தாரகா ஒத்தூதினாள்.

"தேனுகா நான் சொல்லுறதைக் கேளும்" ஸ்ரீநாத் கூற

"சரியோ, தவறோ நடந்தது நடந்திட்டுது. எல்லாரும் போய்ப் படுங்கோ" என்றவாறு தனது அறை நோக்கி நடந்தாள் தேனுகா.

"தேனுகா நில்லும். நான் சொல்லுறதைக் கேளும்." தேனுகா நிற்கவில்லை.

"அக்கா" கார்த்திகா கூப்பிட்டாள். கார்த்திகாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலைக் கேட்டுத் திரும்பிய தேனுகா. "ஆரை நம்புறது ஆரை நம்புறதில்லை எண்டு தெரியயில்லை" அவள் சொல்லவும் தீபக் வந்தவாறு

"என்ன எல்லாரும் இந்த நேரத்திலை ஒன்றுகூடி இருக்கிறீங்கள்?" ஒன்றும் தெரியாதவனைப் போல கேட்டான். தாரகாவோ,

"இஞ்சை வாங்கோ நான் நடந்ததைச் சொல்லுறன்" கூட்டம் கலைந்து விட்டது. மூவர் மனதிலும் போராட்டம் ஸ்ரீநாத் சிந்தித்தான்.

'என்ன சொன்னாலும் தேனுகா நம்பப்போறதில்லை. கார்த்திகாவும் என்னை லைற் வெளிச்சத்திலை கண்டதாலை நான்தான் தப்புப் பண்ணியதாக நினைச்சுக் கொண்டிருப்பாள். உண்மையாக வந்த ஆள் யார்? ஸ்ரீநாத்தின் மனநிலை இவ்வாறிருக்க கார்த்திகாவின் மனதிலோ 'அத்தானுக்கு எப்படி இப்படி மனசு வந்தது? அக்காவின் புருஷனும் அப்பிடி. தங்கையின் புருஷனும் அப்பிடி இனியும் உயிருடன் வாழ வேணுமா?' என்ற எண்ணம் தலை தூக்கியது. ஆனாலும் 'கார்த்திக்கிற்காக வாழ வேண்டும்' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

தேனுகா உறக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தாள். ஊரெல்லாம் அடங்கி நிசப்தமாக இருந்தது. தேனுகாவின் மனதிலே தாரகா விதைத்த விதை முளைவிட்டது. அவளும் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறாள். வெளுத்ததெல்லாம் பால் என்று நினைத்தது எனது குற்றம் தான்.

"அத்தான் நீங்களா?"

இரவு கார்த்திகா கூறிய அந்த வார்த்தை எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

"அத்தான் நீங்களா?" என்றால் என்ன அர்த்தம்? நீங்களென்றால் சத்தம் போட்டிருக்க மாட்டேன். வேறு யாரோ என்றுதான் சத்தம் போட்டேன். என்று அர்த்தமா? தேனுகாவால் குழம்பிக் கொண்டிருக்க முடியவில்லை. முடிவே எடுத்துவிட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சகோதரிகளுக்காகவே இதுவரை வாழ்ந்திருக்கிறேன். அவர்களுக்காகவே சாகவும் போகிறேன். எனது கணவருக்கு கார்த்திகாவை பிடித்திருக்கிறது. கார்த்திகாவிற்கும் எனது கணவரை பிடித்திருக்கிறது. இருவரும் ஒத்துக் கொள்ளாமலா இவ்வளவிற்குக் காரியம் முற்றியிருக்கிறது?

நேரத்தைப் பார்த்தாள். அதிகாலை நான்கு மணி. பூர்ணிமாவை நோக்கினாள். 'கார்த்திகா உனக்கு ஒரு குறையும் வைக்கமாட்டாள். அந்த நம்பிக்கை எனக்கு நிறைய இருக்குது. என்னையே நீ மறக்கும் அளவிற்கு அவள் உன்னை கவனித்துக் கொள்வாள். மனதிற்குள் நினைத்தவாறு பூர்ணிமாவை அணைத்து ஒரு முத்தம் இட்டாள். 'நேரம் போகப்போக மனம் மாறிவிடும்' என்று நினைத்தவாறு எங்கே முடிவு கிடைக்கும் என நினைத்தாளோ அந்த இடத்தை நோக்கிப் போனாள்.

எந்த நேரமும் படுக்கைக்குச் சென்றாலும் காலை ஐந்து மணிக்கெல்லாம் டாண் என்று எழும்பி விடுவாள் கார்த்திகா ஆனால் அன்று நடக்கக்கூடாதது நடந்து விட்டதே என்ற நினைப்பில் தூக்கம் வரமறுத்தது. தூக்கம் வராத நேரங்களில் கிணற்றுக்கட்டில் இருந்து இயற்கையை ரசிப்பதுவும் கற்பனையில் மிதப்பதுவும் வழக்கமாக இருந்தது கார்த்திகாவிற்கு. அதே போல் அன்றும் நேரத்தைப் பார்த்தாள் நான்குமணி. தான் எழும்புவதற்கு இன்னும் ஒரு மணித்தியாலம் தானே இருக்கிறது என எண்ணியவாறு கிணற்றடியை நோக்கி நடந்தாள்.

என்ன ஆச்சரியம்! ஓர் உருவம் ஓடிச்சென்று கிணற்றுக்குள் குதித்துவிட்டது.

"ஐயோ, ஓடிவாங்கோ" எனக் குழறிய வண்ணம் கிணற்றை நோக்கி ஓடினாள். மனக்குழப்பத்திலே ஒருவருமே உறங்காததால் இச்சத்தத்தில் யாவரும் ஓடி வந்தார்கள். ஸ்ரீநாத் படிக்கட்டுகளில் இறங்கி குதித்த ஆளைத் தூக்கினால், அது தேனுகா.

"அக்கா...... அக்கா" என அலறினாள் கார்த்திகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் எடுக்க வேண்டிய முடிவக்கா. ஏனக்கா நீ எடுத்தனீ?" தேனுகாவின் தலையை மடியில் வைத்து ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

தாரகாவோ "இப்ப ஒப்பாரி வைக்க நேரமில்லை பிடரியிலை அடிபட்டிட்டுது. இரத்தம் கசியுது. அத்தான் காரை எடுங்கோ'' தீபக்கை நோக்கி கூறியவாறு தன்னையும் தயார்படுத்தினாள்.

காரில் குடும்பமே ஆஸ்பத்திரிக்கு விரைந்தது. அவர்கள் சென்ற ஆஸ்பத்திரியில் இவர்களில் ஒருவரும் டாக்டராய் வேலை செய்யவில்லை. ஆயினும் மூவரும் டாக்டர்கள், என்பதால் உடனடியாக ஆப்ரேசன் தியேட்டருக்குக் கொண்டு சென்றுவிட்டார்கள். தாரகாவும் தீபக்கும் தியேட்டருக்குள் சென்றார்கள். கார்த்திகாவால் உள்ளே செல்ல முடியவில்லை. ஒரு ஓரமாக இருந்த நாற்காலியில் தலையைத் தொங்கப்போட்டபடி அமர்ந்திருந்தாள்.

சிறிது நேரத்தின் பின் யாவரும் வெளியே வந்தார்கள். யாரை எப்படிக் கேட்பது என்று தத்தளித்துக் கொண்டிருந்த வேளையில் தியேட்டரின் வெளிவாசலுக்கு ஸ்றெச்சரில் தேனுகாவைக் கொண்டு வந்தார்கள். ஓடிச்சென்று பார்த்தாள். இன்னமும் நினைவு திரும்பவில்லை. கார்த்திகா வேண்டாத தெய்வம் இல்லை. ஆண்டவா! என் அக்காவை காப்பாற்றிவிடு. அருகேயுள்ள பிள்ளையார் கோவிலுக்கு வேண்டுதலும் செய்துவிட்டாள். தான் ஒரு டாக்டர் என்பதையே மறந்து பித்துப்பிடித்தவள் போல் அங்கலாய்த்தாள்.

மயக்கம் தெளிந்து விட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு நோயாளியின் பெயரைக் கூப்பிடுவது வழக்கம். அதேபோல் டாக்டர் ஒருவர் வந்து "அம்மா, தேனுகா கண்ணை முழித்துப் பாருங்கோ'' என்று தேனுகாவைத் தட்டி எழுப்பினார்.

தேனுகா கண்களைத் திறந்து பார்த்துவிட்டு மீண்டும் மூடிக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“வார்ட்டுக்கு கொண்டு போகலாம்” என்ற டாக்டரின் பணிப்பின் பேரில் சிற்றூழியர் ஒருவர் ஸ்றெச்சரைத் தள்ள கார்த்திகாவும் ஒரு கை பிடித்த வண்ணம் வார்ட்டுக்குக் கொண்டு சென்றார்கள். ஸ்றெச்சரில் இருந்து கட்டிலுக்கு மாற்ற ஸ்ரீநாத் உதவி புரிந்தான். ஸ்ரீநாத்தை கார்த்திகாவால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. ஸ்ரீநாத்தும் கார்த்திகாவைப் பார்க்கவோ பேசவோ விருப்பம் இல்லாமல் சிறிது தூரம் விலகி நின்றான்.

தேனுகா முனகும் சத்தம் கேட்டது. முனகல் பெரிதாக கேட்கத் தொடங்கியது. “என் கார்த்திகா அப்பிடிச் செய்யமாட்டாள். என் கார்த்திகா அப்பிடிச் செய்ய மாட்டாள்” கை, கால் இழுத்து வலிக்கத் தொடங்கினாள். டாக்டரிடம் ஓடினாள் கார்த்திகா. “டொக்டர், அக்கா வலிவந்தது மாதிரி புசத்துறா. என்ன டொக்டர் இதெல்லாம்” பதட்டப்பட்டாள் கார்த்திகா.

“மிஸ் கொஞ்சம் பதட்டப்படாமல் நான் சொல்லுறதைக் கேளுங்கோ. ஆண்டவனுடைய கருணையால் உயிரைக் காப்பாற்றியிட்டம். ஆனால்........”

“ஆனால் .................... சொல்லுங்கோ டொக்ரர்?” அவசரப்படுத்தினாள் கார்த்திகா.

“பிடரியிலை அடிபட்டதாலை கொஞ்சம் மூளை குழம்பியிட்டுது” டாக்டர் கூறி முடிக்கு முன் “டொக்டர்” என்று கத்தினாள் கார்த்திகா.

## 06

“டொக்டர்” என்று தன் தோளில் ஒரு கை விழுந்த போது தான் சுயநினைவிற்கு திரும்பினாள் கார்த்திகா. அங்கே தேனுகாவிற்கு ரீற்மென்ற் செய்யும் டொக்டர் சீலா நின்று கொண்டிருந்தார்.

“விசிற்றேஸ் எல்லாம் போயிட்டினம். நீங்க மட்டும்........” இழுத்தாள் மிஸிஸ் சீலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெல் அடிச்சிட்டினமா டொக்டர்? நான் அக்காவைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்திட்டன். அதுதான் டொக்டர் பெல் அடிச்சது கூட காதிலை விழயில்லை."

"அதுசரி ஏன் பெல் அடிக்குமட்டும் இருந்தனீங்கள்? வாச்சரிட்டைச் சொல்லியிட்டு உள்ளை வந்திருக்கலாமே?.

"டொக்டர், நாங்கள் வோச்சரைக் கேட்டு உள்ளைபோக வாசல்லை காத்துக் கொண்டிருக்கிற சனம் ஒரு மாதிரியாய்ப் பார்க்கும் அதுதான் டொக்டர். எப்படி டொக்டர் அக்கா எப்பிடி இருக்கிறா? ஏதாவது முன்னேற்றம்?.................... " கதையைத் தேனுகா பக்கம் திருப்பினாள்.

கார்த்திகாவின் முகமாற்றத்தை அவதானித்த டொக்டர் சீலா

"ஸ்பெசலிஸ்ட் ஒருவர் வந்து பார்க்கிறார். குணம் வந்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கு. ஆனாலும் கடவுளும் ஒருத்தர் இருக்கிறார் எல்லே, மிஸ் கார்த்திகா. எதுக்கும் அக்காவைப் போய்ப் பாருங்கோ. பிறகு மீற் பண்ணுறன். ஓ.கே. பை" என்றவாறு சீலா தனது றூமை அடைந்தார்.

தேனுகாவை ஒரு அறையில் வைத்துப் பூட்டியிருந்தார்கள். அந்த அளவிற்குக் குழப்படி. நர்ஸின் சொல்லைக்கூட கேட்கமாட்டாள். கூட இருக்கும் சக நோயாளிக்கும் அடி உதை. இருந்த இடத்திலேயே கழிவுகளையும் வெளியேற்றிவிடுவாள். கார்த்திகா தேனுகாவை நெருங்கினாள். உறக்கத்திலும் "என் தங்கை அப்படிப்பட்டவள் இல்லை" புலம்பிக்கொண்டிருந்தாள்.

"அக்கா" கார்த்திகாவின் குரலைக்கேட்டு மெதுவாகக் கண்ணைத் திறந்தாள் தேனுகா. தேனுகாவை எழுப்பி இருத்தித் தலையை வாரி, பல்தேய்த்து, குளிப்பாட்டி அவளுக்குச் செய்யவேண்டிய கடமையெல்லாம் செய்தாள். கார்த்திகா உணவுகூட ஊட்டிவிட்டுத்தான் வீட்டிற்குத் திரும்புவாள்.

கார்த்திகா போகாத வேளைகளில் தேனுகா பட்டினிதான். ஒருவரிடமும் வாங்கிச் சாப்பிட மாட்டாள். அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்யும் சிற்றூழியர் கொடுக்கும் உணவைத் தட்டிவிடுவாள். இதனை அறிந்த கார்த்திகா தினமும் ஒரு நேரமாவது சென்று தேனுகாவை கவனிக்கத் தவறுவதில்லை.

ஆனால் தாரகாவோ உடலால் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்யாமல், ஹோர்லிக்ஸ், குளுக்கோஸ் என்று பொருட்களை மட்டும் வாங்கிக் கொடுப்பாள். அவளுக்கு அருகே செல்லமாட்டாள். கார்த்திகா வந்து குளிப்பாட்டி அறையைச் சுத்தமாக்கிய பின்புதான் தேனுகா அருகே செல்வாள் தாரகா.

அன்றும் தேனுகாவிற்குச் செய்ய வேண்டிய கடமைகளை முடித்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று பணி புரியும் கொஸ்பிற்றலுக்குத் தயாரானாள் கார்த்திகா. டயறியை எடுத்து கைப்பைக்குள் வைக்கப்போகும் போது கார்த்திக்கின் படம் தவறிக் கீழே விழுந்தது. கார்த்திக்கின் படத்தைக் குனிந்து எடுத்தாள். கார்த்திக் தன்னை எவ்வாறு விரும்ப வைத்தான் என்பதை மீட்டிப்பார்க்க வைத்தது அவன் புகைப்படம்.

## 07

கார்த்திக் எக்கவுண்டன்சி செய்தவன். கார்த்திகாவின் ஆஸ்பத்திரிக்கருகிலே இருக்கும் வங்கியில் தான் மனேஜர் ஆகவும் இருக்கிறான். கார்த்திகா சம்பளப்பணம் மாற்றுவதற்கு மாதத்திற்கு ஒருதடவையாவது செல்லுவாள்.

மனேஜரிடம் கையொப்பம் வாங்கித்தான் செக்கை டிப்பொஸிற் செய்ய வேண்டும். மாதாந்தம் போவதால் இருவருக்கும் இடையே நட்பு ஏற்பட்டது. அத்துடன் கார்த்திக்கும் இடையிடையே மருத்துவமனை செல்வான். காரணம் தானத்தில் சிறந்தது இரத்த தானம் என்பார்கள். அந்தத் தானம் செய்வதற்காகத்தான் கார்த்திக் வருகிறான் என்பது கார்த்திகாவிற்கு நன்கு தெரியும். இரத்தத்தைத் தானம் செய்வானே தவிரப் பணம் எதுவும் வாங்குவதில்லை. அந்த ஒரு காரணமே கார்த்திக்கின் நட்பை தொடர வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களாகவே பழகினார்கள்.

ஆனால் கார்த்திக்கின் மனதில் கார்த்திகாவை மனைவியாக அடைய வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. கார்த்திகாவிற்கும் அந்த எண்ணம் இருக்கத்தான் செய்தது. ஆனாலும் பெண்கள் தைரியமாக முதலில் சொல்லமாட்டார்கள். கார்த்திக் தான், ஒருநாள் கொஸட்பிற்றல் வந்த போது,

"கார்த்திகா உங்களை ஒண்டு கேட்கப் போறன். எனக்காக ஒத்துக்கொள்ளாமல் உங்கள் விருப்பத்தையும் சொல்லுங்கோ." பீடிகை போட்டான் கார்த்திக்.

"பரவாயில்லை. எதெண்டாலும் சொல்லுங்கோ."

"காதல் கீதல் எண்டு சொல்லுறது எனக்குப் பிடிக்காது. முதலிலை காதலிக்கிறது. பிறகு பெற்றோர் தடுத்த உடனே இன்னொரு திருமணம் செய்யிறது. இதெல்லாம் காதலிப்பதால் ஏற்படும் விளைவு தானே. அதாலை நான் உங்களை மனைவியாய் அடைஞ்ச பிறகு காதலிக்கலாம் எண்டிருக்கிறன். உங்கடை விருப்பத்தைத் தெரிஞ்சால் உங்கடை அக்காவை வந்து முறைப்படி பெண் கேட்கிறன்" ஏதோ கட்டுரை வாசிப்பது போலச் சொல்லி முடித்தான் கார்த்திக்.

கார்த்திகாவோ "என்னுடைய விருப்பு வெறுப்பை விட என்னுடைய அக்காவினுடைய விருப்பைத்தான் நீங்கள் அறியவேண்டும். அதனாலை நீங்கள் வந்து முறைப்படி பெண் கேளுங்கள்"

சிரித்தான் கார்த்திக்.

"ஏன் கார்த்திக்? என்ன தப்பாய்ச் சொல்லிப் போட்டன்."

"இல்லை............. நாங்கள் யாழ்ப்பாணத்திலை இருக்கிறம் கார்த்திகா. இஞ்சை முறை வேறை. பெண் வீட்டார் தான் முதலில் மாப்பிள்ளை கேட்டுப் போகவேணும்."

"அப்பிடியா? நான் வோட் றவுண்ட்சுக்குக் கிளம்புறன் நீங்க கிளம்புங்க."

இவ்வார்த்தையைக் கேட்டதும் உடனடியாக கிளம்பிவிட்டான் கார்த்திக். கார்த்திகாவிற்கு ஒருமாதிரியாகப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டது. ஆனாலும் கார்த்திக் அவள் மீது வைத்த அன்பு பொய்யானது இல்லையே. அன்றே அரை நாள் லீவு போட்டுவிட்டுத் தேனுகாவின் வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டான்.

அங்கு தேனுகா, அவள் கணவன் ஸ்ரீநாத் இருவரும் இருந்தார்கள். கார்த்திக்கை முன்பின் தெரியாததால் அவர்களுக்கு யாரென்று புரியவில்லை. ஆனாலும் தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டிற்கிணங்க,

"வாங்க, உட்காருங்க." என்று வரவேற்றாள் தேனுகா. கார்த்திக்கும்அமர்ந்தவாறு தன்னையும் அறிமுகப்படுத்தி தான் வந்த காரியத்தையும் சொன்னான். தேனுகாவால் எந்த முடிவும் எடுக்கமுடியவில்லை.

"எதற்கும் கார்த்திகா வரட்டுமே" என்று சொல்லவும் கார்த்திகா வரவும் சரியாக இருந்தது.

"சேர் நீங்களா? எனக்கு இங்கை வருவதாகக் கூறவில்லையே" என்றாள். சேர் என்று கூப்பிட்ட தோரணையை மாற்றமுடியாமல்

"உங்களுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி குடுக்கலாம் எண்டுதான் டொக்டர்" பதிலுக்கு டொக்டர் எனக் கூப்பிட்டு மடக்கினான்.

"இருங்க வோஷ் பண்ணிட்டு வாறன்."

கொஸ்பிற்றலால் வந்தால் குளிக்காமல் அறையளுக்கை உள்ளை வரமாட்டுது" கார்த்திக்கைக் காக்க வைப்பது சரியானதல்ல என்பதற்காகக் காரணத்தைக் கூறினாள் தேனுகா.

"பரவாயில்லை. ஆறுதலாய் வரட்டும்" என்றவாறு பத்திரிகையைப் புரட்டினான். தேனுகா கார்த்திகாவைப் பின் தொடர்ந்தாள்.

"கார்த்திகா உனக்கு மனேஜர் தம்பியைப் பிடிச்சிருக்கா? கேட்டாள் தேனுகா.

"அக்கா நீ எந்த நொண்டிக்குக் கழுத்தை நீட்டச் சொன்னாலும் நீட்ட நான் காத்திருக்கிறேன்."

"கார்த்திகா இது பாசப்பிரச்சினையில்லை. வாழ்க்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை. உனக்கு விருப்பமில்லாத ஒன்றை செய்ய நான் தயாரில்லை."

"அக்கா கார்த்திக் எல்லாம் கூறியிருப்பார் எண்டு நினைக்கிறன். அவருடைய பண்புதான் எனக்கு பிடிச்சிருக்கு."

"பிறகென்ன? பண்பை விட முக்கியமானது வேறையொண்டுமில்லை." தேனுகா கூறியவாறு அறையை விட்டு விலகி ஹோலுக்கு வந்தாள். ஸ்ரீநாத்திடம் கார்த்திகாவின் சம்மதத்தை தெரிவித்தாள்.

"பிறகென்ன. கார்த்திற்குச் சுவீற்றைக் கொடு" என்று கூறி ஸ்ரீநாத் இப்பிரச்சினையை முடித்து வைத்தான்.

ஆனாலும் கார்த்திக் தொடர்ந்தான். "இப்ப பதிவுத் திருமணம் மாத்திரம் தான்"

என்ன தம்பி சொல்லுறியள். கார்த்திகாவிற்கு இப்பவே இருபத்தெட்டு வயசாயிட்டுது."

"என்ன செய்யிறது. நான் வெளிநாட்டிலை ஒரு கோஸ் முடிக்க வேண்டி இருக்குது. இரண்டு வருஷம் தான். திருமணம் முடிஞ்சால் குடும்பம் குட்டி எண்டு இழுபடத்தான் சரியாக இருக்கும். பிறகு படிக்கேலாது. என்ன சொல்லுறியள் அண்ணா" ஸ்ரீநாத்தை நோக்கிக் கேட்டான்.

"நீங்கள் வெளிநாடு செல்ல கார்த்திகா சம்மதிச்சால் எங்களுக்கும் சம்மதம் தான்."

கல்விக்குக் கரையில்லை எண்டு சொல்லுவினம். அந்தக் கல்வியை எவ்வளவு தூரம் கற்க முடியுமோ அவ்வளவிற்குக் கற்க வேண்டும் என்பது தான் கார்த்திகாவின் விருப்பமும். ஆகவே அவளும் சம்மதித்து விட்டாள்.

இரண்டு வருடம் முடிய ஒரு மாதம் இருக்கத்தான் நடக்கக்கூடாத சம்பவங்களெல்லாம் நடந்து முடிந்து விட்டனவே.

வீட்டில் நடந்த சம்பவங்கள் யாவற்றையும் ஒன்றும் விடாமல் கார்த்திக்கிற்கு எழுதினாள். கார்த்திக்கும் கார்த்திகாவையோ ஸ்ரீநாத்தையோ தவறாக நினைக்கவில்லை. தீபக் தன்னை வம்புக்கிழுப்பதையும் குறிப்பிட்டிருக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திக் ஊகித்துக் கொண்டான். பேர்த்டே நடந்த நைற் தீபக் குடும்பத்தினரும் அங்கு தங்கியமையால் கார்த்திகாவின் றூமுக்கு வந்த நபர் தீபக்காகத்தான் இருக்க வேண்டும். ஆனாலும் அதனைக் கார்த்திகாவிற்கு எழுதவில்லை. தேனுகாவை வார்ட்டில் அட்மிட் செய்த ஸ்ரீநாத் நேரடியாகக் கார்த்திகாவிற்கு உண்மையைக் கூறினான்.

"கார்த்திகா, எப்படியம்மா, நீ கூட என்னைத் தவறாய் புரிஞ்சிட்டாய்? உன்னுடைய சத்தத்தைக் கேட்டு ஓடிவர ஒரு உருவம் ஓடிவருவதைக் கண்டனான்."

"அப்படியெண்டால் உடனே அக்காவிற்கு சொல்லியிருக்க வேண்டியதுதானே" கார்த்திகா அவசரப்பட்டாள்.

"எங்கை அம்மா, உன்னுடைய அக்கா என்னைப் பேசவிட்டாள்? ஆர் எண்டு கண்டு பிடிச்சிட்டு விடிஞ்சதும் சொல்லாம் எண்டிருந்தன். அதுக்கிடையில் தான் எல்லாம் நடந்து முடிஞ்சிட்டுதே" பெருமூச்செறிந்தவாறு கண்ணீர் மல்க கூறினான் ஸ்ரீநாத். கார்த்திகாவின் பார்வையைப் பார்த்துவிட்டு,

"எனது பிள்ளைமேலை ஆணை கார்த்திகா, என்னை நம்பு. நான் பொய் சொன்னன் எண்டால் அவளுக்கு ஏதாவது நடக்கும். இதைவிட உன்னை எப்படி நம்பவைப்பது என்று தெரியவில்லை அம்மா" அதற்கு மேலும் கார்த்திகாவால் நம்பாமல் இருக்கமுடியவில்லை.

"அத்தான் இல்லையெண்டால் வந்தது தாரகாவின் கணவன் தீபக்காகத் தான் இருக்க வேண்டும். என்று மனதிற்குள் முடிவு கட்டிக்கொண்டாள். கார்த்திகாவும் கார்த்திக்கிற்கு எழுதவில்லை. உறங்குகின்ற உண்மைகள் ஒரு நாள் விழித்துத்தானே ஆகவேண்டும்.

## 08

"அன்ரி" என்று பூர்ணிமா கையைத் தொட்டபோது தான் சுயநினைவிற்குத் திரும்பினாள் கார்த்திகா. கார்த்திக்கின் படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது வைத்த பார்வையை திருப்பி நேரத்தைப் பார்த்தாள். ஒன்பதுமணி. இவ்வளவு நேரமும் என்னை மறந்து நேரம் போனது கூடத் தெரியாமல் சிந்தித்துக் கொண்டு இருந்திருக்கிறனே.

அவசர அவசரமாகப் பூர்ணிமாவைப் பக்கத்து மாமி வீட்டில் விட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டாள்.

தேனுகாவை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்து உண்மையைக் கூறிய அன்றே கார்த்திகா ஸ்ரீநாத்திடம்,

"அத்தான் நீங்கள் உண்மையாகவே அக்காவிடமும் என்னிடமும் அன்பு வைத்திருத்தால், அக்காவுக்குப் பூரண சுகம் வரும்மட்டும் எங்கடை கண்ணிலையோ ஊருடைய கண்ணிலையோ படக்கூடாது. அக்கா சுகமாய் இல்லாத சமயம் கண், மூக்கு, காது, வாய் எல்லாம் வைத்துக் கதைத்து விடுவார்கள். அதனாலை நீங்கள் எங்காவது தூரச் சென்று அக்காவை ஆஸ்பத்திரியிலை கிழமைக்கு ஒருக்கால் வந்து பாருங்கோ. மற்றும்படி அக்காவையும் பூர்ணிமாவையும் கண்ணும் கருத்துமாய்ப் பார்க்கிறது என்ரை கடமை. அக்காவுக்குச் சுகம் வர நடந்த உண்மையை அவர்கள் வாயாலையே வரச் செய்யிறன்." சவால் விட்டாள் கார்த்திகா.

## 09

கார்த்திக்கும் தீபக்கும் உயர்கல்வி வரை ஒன்றாகப் படித்தவர்கள். அதனால் சந்திக்கும் போதெல்லாம் பழைய கதைகளைக் கதைத்துச் சிரிப்பார்கள். கார்த்திக் வெளிநாட்டால் வந்த பின் ஒருநாள் கார்த்திக் தீபக்கிடம்.

"மச்சான் உனக்கு பூர்ணிமாவின்ரை பேர்த்டே பாட்டியிலை நடந்த விசயமெல்லாம் தெரியும் எண்டு நினைக்கிறன்"

"என்ன மச்சான் உதை எல்லாம் கார்த்திகா உன்னிடம் சொல்லியிட்டாவே" ஆச்சரியமாகக் கேட்டான் தீபக்.

அதாலை தாண்டா மச்சான் நான் அவளை நம்புறன். கள்ளம் கபடம் இல்லாத ஜீவன், கற்பு அவளினுடைய உயிர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் மீது அன்பு செலுத்திறது இரத்தத்திலேயே ஊறிவிட்ட ஒன்று. எனக்கென்ன குறை மச்சான்? பணமில்லையோ? அழகில்லையோ? எத்தனைபேர் எனக்கு வலை வீசினதுகள். அப்படி இருக்க நான் கார்த்திகாவிடம் வசப்பட்டனெண்டால் அதுக்குக் காரணம் அவளுடைய பண்பு தான். அப்படிப்பட்ட உத்தமிக்குச் சோதனை வந்திட்டுது. ஆர் அண்டைக்கு வந்ததெண்டு எங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் கடவுள் ஒருவனுக்குத் தெரியும். கார்த்திகா கூடக் கடவுளிடம் நல்ல பக்தி உள்ளவள். பிள்ளையார் அவளைக் கைவிடமாட்டார் எண்டு அடிக்கடி கூறுவாள்" உணர்ச்சி கொந்தளிக்கக் கூறினான் கார்த்திக்.

"மச்சான் நீயும் கடவுளை நம்புறியே" சிரித்தான் தீபக். "அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்" என்பது பழமொழி ஆனால் தெய்வம் இப்ப உடனுக்குடன் காட்டுது. உறங்கிற உண்மை ஒரு நாளைக்கு வெளிப்படும் தானே."

"ஓம் மச்சான் நம்பிக்கை தானே வாழ்க்கை. எதிலையும் ஒரு நம்பிக்கை இருக்க வேணும். நீ நம்பிக் கொண்டிரு. எனக்குத் தலையுக்கை இடிக்குது. நான் வாறன்"

"தலையிடி டொக்டருக்கு இருக்கக்கூடாது" சிரித்தபடி கூறினான் கார்த்திக். தீபக் ஒருவாறு அவ்விடத்தை விட்டு அகன்று கொண்டான்.

## 10

தேனுகாவின் உளநலத்தில் படிப்படியாக முன்னேற்றம் தெரிந்தது. கார்த்திகாவிற்கோ அளவு கடந்த சந்தோஷம். ஏதோ தனக்கு ஏற்பட்ட இன்பம் போல உணர்ந்தாள். நாட்கள் நகரத் தேனுகாவிற்கு பூரண குணமாகிவிட்டது. மறுநாள் "வீட்டிற்கு கூட்டிப் போகலாம்" என்று டாக்டர் சீலா கூறிய போது உலகமே தனது கையில் வந்துவிட்டது போன்ற உணர்வு.

தப்பிப்பிழைத்ததால் தேனுகாவிடம் பழையகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றையும் கார்த்திகா கதைக்கவில்லை.

"அக்கா, நாளைக்கு வீட்டிற்குப் போகலாமாம். அத்தானும் நாளைக்கு வருவார்" கார்த்திகா கூறி முடிக்கு முன்

"எனக்குச் சுகம் வந்து ஒருவாரமாகுது. எப்பவாவது வந்தாரே" முணு முணுத்தாள் தேனுகா.

"அக்கா, அத்தானை வரவேண்டாம் எண்டதே நான்தான்" தேனுகா ஒரு மாதிரியாகக் கார்த்திகாவை நோக்கினாள். பால் வடியும் முகம் என்பார்கள். அது கார்த்திகாவின் முகத்திலே நன்றாகவே தெரிந்தது. இதன் அர்த்தம் என்ன? இந்த வயதிலும் அவர்களுக்குக் கள்ளம், கபடம், சூது ஒன்றும் தெரியாது என்பதுதானே. கார்த்திகாவே தொடர்ந்தாள்.

"மனச்சாட்சிக்குப் பயப்படவில்லை அக்கா. இந்த ஊர் உலகத்திற்குப் பயப்படுறன். நானும் வாறதாலை அத்தானை அடிக்கடி வராமல் கிழமைக்கு ஒருக்கால் வரச்சொன்னனான். ஏன் அக்கா ஊர் உலகம்? நீங்களே என்னை நம்பாமல் தானே...... இந்த முடிவுக்கு வந்தனீங்கள்."

தேனுகாவின் மடிமீது விழுந்து கார்த்திகா குலுங்கி குலுங்கி அழுதாள். வாட்டிற்கு வெளியே இருந்து கதைத்தமையால் வாட்டிற்கு நுழையும் எவரும் இவர்கள் கண்ணில் பட்டே ஆகவேண்டும். ஒரு நபரை அவசர அவசரமாக ஸ்றெச்சரில் தள்ளிக் கொண்டு வர பின்னால் தாரகா அழுதுகொண்டு வருவது தெரிந்தது.

தேனுகா தன் மடியிலிருந்த கார்த்திகாவின் முகத்தைத் திடீரென விலக்கினாள். 'அக்கா இன்னும் என்னை நம்பவில்லையா? மனதிற்குள் கேட்டாள்.

"கார்த்திகா அங்கை பார். அங்கை பார்" எனக் காட்டியபடி விரைவாகத் தேனுகா நடக்கக் கார்த்திகா பின் தொடர்ந்தாள். அக்காவிற்குத் திரும்பவும் மனநோய் வந்து விட்டதா? தேனுகாவைப் பின் தொடர்ந்தவளின் கண்களில் ஸ்றெச்சரின் பின்னால் தாரகா அழுது கொண்டு செல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகத் தெரிந்தது. ஆண்களின் வார்ட்டுக்கு கொண்டு சென்றார்கள். நோயாளியை ஸ்றெச்சரில் இருந்து தூக்கி கட்டிலில் படுத்திய பின்புதான் அருகில் வந்தார்கள் தேனுகாவும் கார்த்திகாவும்.

அங்கே கட்டிலில் படுத்தப்பட்டிருந்தது. வேறுயாரும் இல்லை. தீபக்தான். தீபக்கின் காலால் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. தேனுகாவால் மௌனமாக இருக்க முடியவில்லை. தாரகாவிடம்,

"என்னடி நடந்தது" என்று கேட்டாள்

"அக்கா" என்று தேனுகாவைக் கட்டிக்கொண்டு அழுதாள் தாரகா. அருகில் நின்றவர்கள் தான் விபத்து என்று கூறினார்கள். ஆப்ரேசன் தியேட்டருக்கு எடுக்க வேண்டியிருந்தது. கார்த்திகாவாலும் வீடு செல்ல முடியவில்லை. எவ்வளவு தான் தனக்குக் கெடுதல் செய்தாலும் சகோதரத்தின் புருசன் அல்லவா. அவளும் அங்கேயே நின்றாள்.

மீண்டும் ஸ்றெச்சரில் படுத்தித் தள்ளியவாறு தியேட்டருக்குக் கொண்டு சென்றார்கள். தேனுகா, கார்த்திகா, தாரகா மூவரும் பின் தொடர்ந்தார்கள்.

தேனுகாவைப் பார்க்க வந்த ஸ்ரீநாத்தும் விபத்துப் பற்றி அறிந்து வார்ட்டிற்குச் சென்றான். அங்குள்ளவர்கள் தியேட்டருக்கு எடுத்துச் சென்றதாகக் கூற ஸ்ரீநாத் தியேட்டரிற்கு விரைந்தான். அங்கு தேனுகா, கார்த்திகா, தாரகா மூவரும் அழுத கண்களும் வடிந்த கண்ணீருமாய் ஒவ்வொரு புறம் நின்றார்கள்.

ஸ்ரீநாத் வந்து கொண்டிருப்பதை தேனுகா கண்டு கொண்டாள். ஓடிச்சென்று "அத்தான்" என்று கதற வேண்டும் போலிருந்தது. பூரணமாகக் குணமடைந்த பின்பு இன்று தான் ஸ்ரீநாத்தை காண்கிறாள். ஸ்ரீநாத் கண்களில் மூவரும் பட்டார்கள். தேனுகா குணமடைந்து விட்டாள் என்று தெரியாமையால் ஸ்ரீநாத்தும் ஒதுங்கி நின்றான்.

சிறுது நேரத்தின் பின்பு டாக்டர் ஒருவர் வெளியே வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீபக்குடைய உறவினர் யார்? " என அங்கிருந்தவர்களை வினாவினார். நால்வரும் அருகே போனார்கள். "இதிலை தீபக்குடைய மிஸிஸ் யார்?" மீண்டும் வினாவினார் டொக்டர்.

"நான் தான் டொக்டர்" தாரகா கண்ணீர் சிந்திய வண்ணம் வந்து நின்றாள்.

"மிஸ் உங்கடை கணவருடைய காலில நிறைய சிதைவு ஏற்பட்டுள்ளது. சிலவேளை கால் கழட்ட வேண்டிக்கூட வரலாம்." டாக்டர் கூறி முடிக்குமுன்

"டாக்டர்!" என ஆஸ்பத்திரிக் கட்டிடம் அதிரும் படியாக கத்தினாள் தாரகா.

"என்ன டொக்டர் சொல்லுறீங்கள்?" தேனுகாவும் கார்த்திகாவும் ஒரே நேரத்தில் கேட்டார்கள்.

"டொக்டர் காலை எடுக்காமல் ரீற்மென்ட் செய்யலாம் எண்டால்....." இழுத்தான் ஸ்ரீநாத்.

"மிஸ்டர் எங்களுக்கு மட்டும் காலை எடுப்பது விருப்பமா? இயன்றவரை முயற்சி செய்வம். என்னம்மா சொல்லுறீங்கள்?" என தரையில் மண்டியிட்டுக் கதறிக் கொண்டிருக்கும் தாரகாவைப் பார்த்துக் கேட்டார்.

தேனுகா, கார்த்திகாவால் இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. தாரகா என்ன நினைக்கிறாளோ அதை அவள் வாயாலை சொல்லட்டும் எனத் தாரகாவை எழுப்பி வாங்கிலில் உட்காரவைத்தாள் தேனுகா. நர்ஸ் நீட்டிய பத்திரத்தில் கை நடுங்க நடுங்கக் கையெழுத்திட்டாள் தாரகா. டாக்டரும் நர்ஸும் உள்ளே சென்று விட்டார்கள்.

தேனுகா தாரகாவின் தலையைத் தடவிக் கொடுத்தாள். ஸ்ரீநாத்திற்கு ஆச்சரியம். கார்த்திகாவை நோக்கினான். கார்த்திகா தேனுகாவிற்கு பூரணசுகம் என்பதை முகஜாடையால் காட்டினாள். ஸ்ரீநாத் முகம் மலர்ந்து தேனுகாவை நோக்கி அடி எடுக்க முனைந்த வேளை கார்த்திகா சைகையால் தடுத்து நிறுத்தினாள். உண்மை விழிக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் ஸ்ரீநாத் தேனுகாவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியச்செல்ல தேனுகா விலகிச் சென்றால் அதனைப் பார்க்கும் சக்தி கார்த்திகாவிற்கு இல்லை. ஸ்ரீநாத் வந்து இவ்வளவு நேரமாகியும் தேனுகா கணவனை நாடிச் செல்லவில்லையே. ஸ்ரீநாத்தைக் கண்டதும் 'அத்தான்' என்று ஓடிச் சென்று கட்டி அழுவாள் என்றல்லவா நினைத்தாள் காாத்திகா.

"பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும் போது அழுதால் கொஞ்சம் நிம்மதி" என்ற பாடல் வரிகள் அவள் ஞாபகத்திற்கு வந்து மறைந்தது. தேனுகா பூரணமாக கார்த்திகாவையும் ஸ்ரீநாத்தையும் நம்பவில்லை என்று தானே அர்த்தம்.

சிறிது நேரத்தில் ஆப்ரேசன் முடிந்து வார்ட்டிற்கு கொண்டு வந்தார்கள். மயக்கம் அவ்வளவாகத் தெளியவில்லை. பார்வை நேரங்கடந்தமையால் அடுத்த பார்வை நேரம் வரை, வெளியே நின்று வருமாறு கூறினார்கள். தாங்களும் டாக்டர்மார் தான் என்று கூறியதால் பார்ப்பதற்கு அனுமதி கிடைத்தது.

தீபக் மெதுவாக கண்களைத் திறந்தான். பின்பு மூடிக்கொண்டான். தாரகா எடுத்த கால் பகுதியையே உற்று நோக்கிய வண்ணமிருந்தாள். போர்வையால் இழுத்து மூடியிருந்தாலும் ஒரு கால் பகுதி பள்ளமாகப் பதிந்தும் மற்றைய கால்பகுதி உயர்வாகவும் தென்பட்டன. தேனுகா தாரகாவிற்கு அருகில் வந்தாள்.

"அக்கா" அழுதாள்.

"நான் ஆருக்கக்கா துரோகம் செய்தேன்" குழறி அழுதாள்.

"நீ செய்யவில்லை துரோகம். உனது கணவன் எனக்கும் எங்கடை குடும்பத்திற்கும் செய்த துரோகம்" மனதிற்குள் நினைத்த வார்த்தை அடித்தொண்டையுடன் நின்றது கார்த்திகாவிற்கு.

தீபக் நன்றாகக் கண்களைத் திறந்தான். கால் வேதனை முழங்காலுடன் நின்றதுபோன்ற உணர்வு. எழுந்திருக்கப் பார்த்தான். முடியவில்லை. ஏனையோரும் எழுந்திருக்க விடவில்லை. தாரகா, "அத்தான் உங்களுக்கா இந்தக்கெதி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தீபக்கின் கைகளைப் பற்றி அழுதாள். தாரகாவை தீபக்கால் கண்கொண்டு பார்க்கமுடியவில்லலை. காரணம் தாரகாவின் முகம் அழுதழுது வீங்கியிருந்தது. தான் ஒரு டாக்டர் என்பதையே மறந்திருந்தது அவளினுடைய கோலம்.

"தாரகா, இப்ப என்ன உயிரோ போயிட்டுது. முதலிலை கண்ணைத் துடையும்" என்றவன் காலை அசைக்கப் பார்த்தான். முழங்காலுடன் அந்த அசைவு நின்றுவிட்டது. "தாரகா" என்றவாறு கால்களை எட்டி கைகளால் தடவிப்பார்த்தான். கண்களிலிருந்து நீரானது ஆறாகப் பாய்ந்தது. உண்மை நிலை தீபக்கிற்குப் புரிந்துவிட்டது என்பதை யாவரும் உணர்ந்து கொண்டார்கள். அவனும் ஒரு டாக்டர் தானே. சுற்றுமுற்றும் பார்த்தான். தேனுகாவை நோக்கி அருகில் வருமாறு அழைத்தான். அழைத்தவன்

"அக்கா என்னை மன்னிச்சிடுங்கோ. நீங்கள் மன்னிக்க முடியாத பாவியாகிட்டன்."

"ஏன் தீபக் பெரிய பெரிய வார்த்தை எல்லாம் சொல்லுறீர். எனக்கொண்டும் விளங்கவில்லை. இப்ப கொஞ்ச நேரம் சும்மாபடும். பிறகு கதைக்கலாம்."

"இல்லை அக்கா. உங்கடை வாழ்க்கையைக் கெடுத்த பாவி அக்கா நான். எனக்காகப் பரிதாபப்படாதையுங்கோ." தேனுகாவிற்கு ஒன்றும் புரியவில்லை. தேனுகா தாரகாவைப் பார்த்தாள். தாரகாவிற்கும் தேனுகாவின் நிலை தான். ஸ்ரீநாத்தும் கார்த்திகாவும் தெளிவாக இருந்தார்கள்.

தொடர்ந்தான் தீபக். "இந்தப் பாவிதான் உங்கடை வாழ்க்கையையும் கார்த்திகாவினுடைய வாழ்க்கையையும் பாழாக்கியவன். நான் செய்த பாவத்திற்குத் தான் கால் ஒன்றைக் கழற்றி விட்டார்கள்." கார்த்திகா, தாரகா காதிலும் இவை விழாமல் இல்லை. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்களே தவிரப் பேசவில்லை.

தேனுகா தீபக்கின் வாயால் நடந்த விபரத்தை அறிய முன்பே ஊகித்துக் கொண்டாள். காகம் இருக்க பனம்பழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த கதையைப் போலாகி விட்டதே. ஸ்ரீநாத்தை நம்பியிராவிட்டாலும் கூட தனது இரத்தத்தை தனது உடன்பிறந்தவளை நம்பியிருக்க வேண்டுமல்லவா. கார்த்திகாவின் கைகளைப்பற்றித் தன் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். ஸ்ரீநாத்தைப் பார்த்துக் கண்களால் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

விடயத்தை அறிந்த கார்த்திக் வாட்டிற்கு ஓடி வந்தான். தீபக்கின் அருகில் வந்து "மச்சான் உனக்கென்னடா நடந்தது" கார்த்திக் கவலையுடன் கேட்டான்.

"நான் செய்த பாவத்திற்குத் தண்டனை மச்சான்" விழியோரங்களில் வழிந்த கண்ணீர் அவன் தலையணையை நனைத்தது.

"மச்சான் பிள்ளையார் மகிமையுடையவர் தான். கார்த்திகா வேண்டுதல் வைத்ததாகச் சொன்னாய். அது பலிச்சிட்டுது" உளறினான் தீபக்.

கார்த்திக்கிற்குச் சிரிப்புத் தான் வந்தது. ஆனாலும் அந்த நேரத்தில் சிரிப்பது சரியில்லை என்று நினைத்து அடக்கிக் கொண்டான். கடவுள் மீது பழி போட்டது உண்மைதான். ஆனால் வேண்டுதல் ஒன்றும் கார்த்திகா செய்யவில்லை. கார்த்திக் தீபக்கின் சுயரூபத்தை வெளிக்கொண்டு வருவதற்காக அப்படிச் சொல்லியிருந்தான்.

"மச்சான் எனக்கு உன்னிலை தான் சந்தேகம். அதனாலை தான் கார்த்திகா வேண்டுதல் வைச்சிருக்கிறா எண்டு பொய் சொன்னன். ஒரு பொய் எந்தப் பெரிய உண்மையை வெளியிலை கொண்டு வந்திட்டுது பார்த்தியே" கூறியவன் தேனுகாவைப் பார்த்து,

"அக்கா கார்த்திகாவிற்கு சிலை எழுப்பி நீங்கள் கும்பிட வேணும். இப்படிப்பட்ட ஒரு சகோதரம் உலகிலை ஒருத்தருக்கும் கிடைக்கமாட்டினம். உங்களுக்குச் சுகம் வரும் வரை எங்கடை கலியாணத்தையே தள்ளிப் போட்டிருக்கிறா, கார்த்திகா."

தேனுகா கார்த்திகாவைப் பார்த்தாள். அதில் ஆனந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் பனித்தது. தலையைத் தாழ்த்திக் கொண்டாள், கார்த்திகா.

"அக்கா" கார்த்திக்கே தொடர்ந்தான். கார்த்திகா தாழ்த்திய தலையை நிமிர்த்தினாள். "உங்களை ஆஸ்பத்திரியிலை அட்மிட் செய்த பிறகு இரண்டு வருடம் கழிச்சு வந்திருக்கிறன். அவனோடை அன்பாய்ச் சிரிச்சுப் பேசுவம். எண்டு நினைச்சுதே. இண்டைக்குத் தான் அன்றலர்ந்த தாமரை போல முகம் பிரகாசமாய் மலர்ந்திருக்குது."

கார்த்திக்கின் வார்த்தைகளைக் கேட்ட யாவரும் ஒரே நேரத்தில் கார்த்திகாவை நோக்கினார்கள். கார்த்திகா நாணத்தில் முகம் சிவந்து தலை குனிந்தாள்.

முற்றும்...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தேசிய ஒருங்கிணைப்பு செயல் திட்டப் பணியகமும் 2000ம் ஆண்டு நடத்திய வானொலிநாடகப் பிரதியாக்கப் போட்டியில் வெற்றிபெற்றோர் கொழும்பில் நடந்த பரிசளிப்பு விழாவிற்கு, யாழ்ப்பாணத்திலிருந்து போவதற்கு இராணுவ சிவில் நிர்வாக அனுமதி பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கியதனால், போட்டி நடத்தியவர்களே போக்குவரத்து, தங்குமிட ஒழுங்குகளைச் செய்தனர். இச்சந்தர்ப்பத்தில் நூலாசிரியரான திருமதி. ஆனந்தராணி நாகேந்திரன் அவர்களுடன் ஒன்றாகப் பயணித்து ஒருங்கே தங்கியிருந்து பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அவரது இலக்கிய ஆர்வத்தையும் குடும்ப வேலைகளிடையேயும் எழுதவேண்டும் என்ற தாகங் கொண்டிருந்ததையும் அவ்வேளை நான் அவதானித்தேன்.

'நெல்லை லதாங்கி' என்ற பெயரிலும் இலக்கிய உலகில் உலாவரும் இவர், தற்போது மகாத்மா வீதி, நெல்லியடியில் வசித்தாலும், தும்பளை தெற்கு, பருத்தித்துறையில் பிறந்தவர். யா/ பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் க.பொ.த (உயர் தரம்) கற்ற இவர் யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் இசையாசிரியராகச் சேவையாற்றுகின்றார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சங்கீதத்தில் விசேட பயிற்சிபெற்ற இவர், மூன்று ஆண்களும் இரண்டு பெண்களுமாக ஐந்து பிள்ளைகளின் தாயாரான பின்னர், வெளிவாரிப் பட்டதாரியாகியுள்ளமை அவரது திறமையையும் விடாமுயற்சியையும் காட்டுகின்றது.

மேற்குறித்த நாடகப்போட்டியில் ஆறுதல் பரிசுபெற்றதோடு கரவெட்டி பிரதேசசெயலக கலாசாரப் பேரவை நடாத்திய குறுநாடகப் போட்டியில் முதற்பரிசையும், சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசையும் பெற்றுள்ளார். 'நமது ஈழநாடு' 2ம் ஆண்டு நிறைவையொட்டி நடத்திய சிறுகதைப்போட்டியில் 2ம் பரிசையும் பெற்றுள்ளார்.

இவரது பத்துக்கு மேற்பட்ட நாடகங்கள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

'உறங்கும் உண்மைகள்', 'ஓருயிர்' ஆகிய இரு குறுநாவல்கள் கொண்ட இந்நூலை வெளியிடுவதன் மூலம் அவர் மற்றொரு துறையில் கால் பதிக்கிறார்.

அவரது இலக்கிய ஆர்வமும், பணியும் வளர்ந்து வளம்பெற இறைவனை வேண்டுகிறேன்.

மயூரம்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

**திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**
ஓய்வுபெற்ற வங்கிமுகாமையாளர்

Off set by **Lunani off set** Navalarmadam, Karaveddy.T.P 0776685075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org